


Follow us:

# தமிழன்

THAMILAN தமිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 454 பிலவ வருடம், மாசி மாதம் 02ஆம் திகதி திங்கட்கிழமை
(14.02.2022) ஹிஜ்ரி - 1443, ரஜப் - 12, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30




## சந்திரிகாவை சந்தித்த அமெரிக்க இராஜதந்திரி



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் முன்னாள் ஆலோசகரும் முன்னாள் செனட் உறுப்பினருமான பெப் கெரி, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு கொழும்பிலுள்ள முன்னாள்... 02 பக்கம்

# பிரித்தானியா புதிய தீர்மானம்!

- ஜெனீவாவில் கொண்டுவர ஏற்பாடு - இலங்கை கலக்கம்
- சமாளிக்கும் முயற்சியாக அமைச்சர் பீரிஸ் மேற்குலக நாடுகளுக்குச் செல்ல முனைப்பு

02 பக்கம்


## உலகின் மிக உயரமான முருகன் சிலைக்கு ஏப்ரலில் கும்பாபிஷேகம்

02 பக்கம்



## பெண் நடனக் கலைஞர் தூக்கிட்டு மரணம்

### மஹரகமவில் சம்பவம் - ஆண் நண்பரிடம் பொலிஸ் விசாரணை



கொழும்புக்கு அருகிலுள்ள மஹரகம நகரில் ஆடம்பர வீடமைப்புத் தொகுதியிலுள்ள வீடொன்றில் கழுத்தில் சுருக்கிட்டு உயிரிழந்த பெண் நடனக் கலைஞரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



காதலர் தினத்துக்கு ரோசாப்பூ கொடுக்கலாமெண்டு பார்த்தால், ரோசாப்பூ ஒண்டிண்ட வில 250 ரூபா... அப்ப பாருங்கோவன் நிலமய...

## மனித அம்பியூலன்ஸ்!



பொலன்னறுவை வெலிகந்த, கலிங்கவில பிரதேசத்திலுள்ள வனவிலங்கு சரணாலயமொன்றில் காணாமல்போன பிறந்து ஏழு நாட்களேயான குட்டி யானை வெலிகந்த வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகளால் பாதுகாப்பாக மீட்கப்பட்டது. பின்னர் இந்தக் குட்டியானை மூன்று கிலோமீற்றர் தூரத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு கிரித்தலை வனவிலங்கு கால்நடை வைத்திய அலுவலகத்தில் சிகிச்சைக்காக ஒப்படைக்கப்பட்டது.

ஏழு நாட்களேயான குட்டியானை காணாமல்போன நிலையில் தடுமாறிக்கொண்டிருந்ததை அறிந்த கிராம மக்கள் வெலிகந்த வனவிலங்கு அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். 02 பக்கம்



இன்றைய காதலர் தினத்தையொட்டி நேற்றைய தினமே ரோஜா உட்பட பூக்கள் விற்பனை ஆரம்பமாகியிருந்தது. கொழும்பு ரவுண்ஹோலில் கண்ட காட்சி இது...

(படப்பிடிப்பு - சமன் அபேசிறிவர்தன)

## இளம் எம்.பி. கலந்துகொண்ட விருந்தில் போதைப்பொருளும் சிக்கிய சம்பவம்

### அநுராதபுரத்தில் நிகழ்வு - பொலிஸ் விசாரணை

அநுராதபுரம், தஹியாகம பிரதேசத்திலுள்ள சொகுசு ஹோட்டலொன்றில் நடைபெற்ற டிஜே விருந்து நிகழ்வில் அநுராதபுரம் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இளம் நாடாளுமன்ற உறுப்பினர், பிரபல வைத்தியர் மற்றும் இருநூறு பேர்வரை கலந்துகொண்டனர்.

இந்தக் களியாட்ட நிகழ்வில் கலந்துகொண்ட ஏழு பேர் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டதாக அநுராதபுரம் பிரதேச குற்றத்தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. 02 பக்கம்

## நாளாந்த மின் துண்டிப்புக்காக அனுமதி கோரவுள்ள மின்சார சபை

02 பக்கம்

## சமுர்த்தி கொடுப்பனவு இன்றுமுதல் அதிகரிப்பு

05 பக்கம்

## கடும் மழை காரணத்தினால் உளுந்துச் செய்கை பாதிப்பு

### வவுனியா விவசாயிகள் கவலை



வவுனியாவில் கடந்த சில நாட்களாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக உளுந்துச் செய்கையாளர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

இலங்கையில் அதிக உளுந்து உற்பத்தி இடம்பெறும் மாவட்டங்களில் ஒன்றாகிய வவுனியா மாவட்டத்தில் உளுந்து அறுவடை தற்போது இடம்பெற்று வருகின்றது. 02 பக்கம்

## மனித உரிமை விவகாரங்களுக்குத் தீர்வு காண்பதில் இலங்கை முன்னேற்றம்

### இதனை இந்தியாவும் சர்வதேச சமூகமும் கருத்திற்கொள்ள வேண்டும் - ஜீ.எல்.பீரிஸ்



இருதரப்பு உறவுகளை மேலும் ஏற்படுத்துவதற்கான முயற்சிகளின் மத்தியில் இந்தியாவின் மூலோபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த அயல்நாடு இந்தியாவின் பாதுகாப்பிற்கும் நலனுக்கும் எதிராக எந்த நாடும் தனது நாட்டை பயன்படுத்துவதற்கு அனுமதிக்காது என இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தனது இந்திய விஜயத்தின்போது 'ரைம்ஸ் ஒவ் இந்தியா'விற்கு தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடி காரணமாக அதன் சொத்துகளை... 02 பக்கம்


## விலை அதிகரிப்பால் மக்கள் உண்ணும் உணவில் குறைப்பு

### இலங்கையர்கள் சத்துக் குறைந்த உணவை உண்பதாக ஐ.நா. அமைப்பு தெரிவிப்பு



இலங்கையில் பொருளாதார ரீதியில் பலவீனமான நிலையில் உள்ள குடும்பங்கள், உண்ணும் உணவை குறைத்துகொண்டுள்ளன அல்லது சத்துக்குறைந்த ஊட்டச்சத்துகள் குறைந்த உணவுகளை உண்கின்றன என ஐ.நா. அமைப்பொன்று தெரிவித்துள்ளது.

பொருளாதார ரீதியில் பலவீனமான நிலையிலுள்ள மக்களின் உணவுப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து நிலை என்பன எதிர்மறையான தாக்கத்திற்குள்ளாகியுள்ளன... 02 பக்கம்




நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வழங்குவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டறிக்கையொன்றை வெளியிட்டனரல்லவா ?

அதில் ரணில், சம்பிக்க, அநுரகுமார ஆகியோர் கையொப்பமிடவில்லையாம். இந்த அறிக்கையில் அவர்களுக்கு உடன்பாடில்லையாம்.



### மனித அம்பியூலன்ஸ்!...

பின்னர் அப்பகுதிக்கு சென்ற அதிகாரிகள் யானைக்குட்டியை கண்டுபிடித்து மாறி மாறி தோள்களில் சுமந்து சென்றனர். அதிகாரிகளின் இந்த செயல் பலரையும் நெகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

### சந்திரிகாவை சந்தித்த...

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றுள்ளது. இந்த சந்திப்பில் இரண்டு நாடுகளும் எதிர்நோக்கும் பொதுவான விடயங்கள் பற்றி நட்புறவாக கலந்துரையாடப்பட்டுள்ளன. தனிப்பட்ட விஜயமாக பெப்கெரி இலங்கை வந்துள்ளார்.

### இளம் எம்.பி. கலந்து...

இந்த விருந்து ஒன்லைன் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதான சந்தேகநபர்களிடம் கேரள கஞ்சா இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விருந்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் 20 வயது முதல் 35 வயது வரை உள்ள 200க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வுக்காக சமூக வலைத்தளங்களில் பிரசாரம் செய்யப்பட்டது. போதை விருந்துக்குள் நுழைய ஒருவரிடம் 03ஆயிரத்து 500 ரூபா அறவிடப்பட்டதாகவும், உள்ளே நுழைந்த பின்னர் பணம் செலுத்தியவர்களை அடையாளம் காண்பதற்காக மஞ்சள் கையுறை அணிவிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விருந்துக்குள் நுழைந்து போதை மாத்திரைகள், கஞ்சா உள்ளிட்ட பல்வேறு போதைப்பொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இளம் நாடாளுமன்ற உறுப்பினரும் வைத்தியர் ஒருவரும் விருந்து நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்டுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்கலாம்
அழையுங்கள்
0761393805

தமிழன் தமிழன் ஜூனியர்
கொழும்பு 01
முதல் 15 வரையிலான
பகுதிகளில் தமிழன்
(தினசரி, வாரஇதழ்),
ஜூனியர் பத்திரிகை
வீடுகளுக்கே விநியோகம்
செய்யப்படும்.
தொடர்பு - சந்திரகுமார்
0777983308

தமிழன் வாசகர்களே!
தமிழன் இணையத்தளத்தில்
வெளியாகும் செய்திகளை
www.thamilan.lk
ஊடாக மாத்திரமின்றி
www.thamilannews.com
மூலமாகவும் உடனுக்குடன்
அறிந்துகொள்ளலாம்
தமிழன் தமிழன்

தற்போது விற்பனையில்




விலை ரூ.40/=
தொடர்புகளுக்கு : 0777 983308 - விநியோகப்பிரிவு

# தமிழ்நாட்டைச் சேர்ந்த 41 மீனவர்களை விடுவிக்க உடனடியாக நடவடிக்கைகளை விரைவுபடுத்துக

## பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம்

(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)

பதற்றத்தைக் குறைக்கும் வகையில் இந்திய, இலங்கை இருநாட்டு மீனவர்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தைக்கும் வழிவகை செய்திட வேண்டுமெனக் கோரியுள்ள முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், தமிழ்நாட்டைச் சேர்ந்த 41 மீனவர்களை விடுவிக்க உடனடியாக நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறும் பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக் கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் மீண்டும் மீண்டும் அச்சுறுத்தப்படுவதும் தாக்கப்படுவதுமான நிகழ்வுகள் தொடர்ந்து வரும் நிலையில், (13-2-2022) மேலும் ஒரு நிகழ்வாக 12 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளது குறித்து, உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை மேற்கொள்ளக்கோரி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஞாயிற்றுக்கிழமை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இலங்கைக் கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் மீண்டும் மீண்டும் அச்சுறுத்தப்படுவதும் தாக்கப்படுவதுமான நிலையில், அதுகுறித்து இந்தியப் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புவதாகவும், (13-2-2022) மற்றுமொரு நிகழ்வாகத் தமிழ்நாட்டின் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த பன்னிரண்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், இத்தகைய அச்சமூட்டும் சம்பவங்கள் தொடர்ந்து நிகழ்வது தமிழ்நாட்டு மக்களுக்கு ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்துகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

12.02.2022 அன்று, IND-TN-10-MM-612 மற்றும் IND-TN-10-MM-328 ஆகிய பதிவெண்களைத் தாங்கிய இரண்டு இயந்திர மீன்பிடிப் படகுகளில் மீனவர்கள் ராமேஸ்வரம் தளத்திலிருந்து மீன்பிடிக்கக் கடலுக்குள் சென்ற நிலையில், 13.02.2022 அதிகாலையில் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு தலைமன்னாருக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்று தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். கடந்த இரண்டு வாரங்களில் இவ்வாறு நடந்துள்ள மூன்றாவது சம்பவம் இது என்பதையும், தற்போது வரை, தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் 41 பேரும் 06 மீன்பிடிப் படகுகளும் இலங்கைக் கடற்படையின் வசம் உள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர், இதுபோன்று மீனவர்கள் மீண்டும் மீண்டும் கைது செய்யப்படுவதும் துன்புறுத்தப்படுவதுமான நிகழ்வுகள் தமிழ்நாட்டின் மீனவர் சமூகத்திடையே, குறிப்பாக பாக் வளைகுடாப் பகுதியில் பாதுகாப்பின்மை உணர்வை ஏற்படுத்தியுள்ளதுடன் மீனவர்களின் வாழ்வாதாரங்களை மோசமாகப் பாதித்துள்ளதாகவும் தனது கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய மற்றும் மாநில அரசுகளின் கூட்டு முயற்சிகளின் வாயிலாக, நீண்ட காலமாகத் தொடர்ந்துவரும் இந்த எரிச்சலூட்டும் சிக்கலுக்கு நிலையான தீர்வைக்காண வேண்டியது மிகவும் இன்றியமையாதது என்றும், அதன் தொடக்கமாக இருதரப்புப் பேச்சுவார்த்தை களைக் கூட்டுவதற்கான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், கொவிட் தீவிரம் குறைந்துள்ள தற்போதைய நிலையில், கூட்டுச் செயற்குழுக் கூட்டம் மூலம் பேச்சுவார்த்தைகளை உடனடியாக மீண்டும் தொடங்க வலியுறுத்துமாறும் இந்தியப் பிரதமரைக் கேட்டுக்கொள்வதாக முதலமைச்சர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அப்பகுதியில் பதற்றத்தைக் குறைக்கும் வகையில் இரு நாட்டு மீனவர்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தைக்கும் வழிவகை செய்திட வேண்டுமெனக் கோரியுள்ள முதலமைச்சர் ஸ்டாலின், தமிழ்நாட்டைச் சேர்ந்த 41 மீனவர்களை விடுவிக்க உடனடியாக நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறும் பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

### கடும் மழை...

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக வவுனியாவில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையினால் பலர் உழுந்து அறுவடையை மேற்கொள்ள முடியாமல் உள்ளனர்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் விதைத்து 03 மாதமாகக் காத்திருந்து, அறுவடைக்குத் தயாரான உளுந்து பயிர்கள் மழை காரணமாகப் பாதிப்படைந்து வருகின்றன. இதனால் பலரும் அறுவடையை மேற்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

### உலகின் மிக உயரமான...

உலகில் மிக உயரமாக 146 அடி உயரத்தில் 03 கோடி ரூபாவில் கட்டப்பட்ட முருகன் சிலைக்கு ஏப்ரல் 06இல் கும்பாபிஷேகம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழக சேலம் மாவட்டம் ஆத்தூரைச் சேர்ந்த புத்திரகவுண்டன்பாளையம் பஸ் நிலையம் அருகே மலேஷியாவில் உள்ள முருகன் சிலையை போன்று இது அமைக்கப்பட்டுள்ளது.

126 அடி உயர முருகன் சிலை, 20 அடி உயர பீடம் என 146 அடி உயரத்தில், ஏழு கோண வடிவமைப்பில் இந்த அறுபடை முருகன் கோயில் கட்டப்பட்டுள்ளது. ஏப்ரல் 06இல் கும்பாபிஷேகம் நடத்தப்படும், என திருப்பணி குழு நிர்வாக இயக்குனர் ஸ்ரீதர் தெரிவித்துள்ளார்.

இதனை வடிவமைத்த ஸ்தபதி தியாகராஜன் கூறுகையில், மலேஷியா முருகன் சிலை வேல் பிடித்தது போல் இருக்கும். இங்குள்ள சிலை, வலது கையில் ஆசீர்வாதம், இடது கையில் வேல், சிரித்த முகத்துடன் தலையில் மணிமகுடம் சூடி அமைக்கப்பட்டுள்ளது. ஆடை, அணிகலன் அமைத்து, பஞ்சவர்ணத்தில் வர்ணம் தீட்டி, இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. ஆசிய கண்டத்திலும் உலகளவிலும் பெரிய முருகன் சிலையாக இது இருக்கும் என்றார்.

### நாளாந்த மின்...

மின்சாரத்தை விநியோகிப்பதில் தொடர்ச்சியாக நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்தது.

நாளாந்தம் மின்சாரத்தை துண்டிப்பது தொடர்பில் நாளை செவ்வாய்க்கிழமை (15) பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதியை கோருவதற்கு எதிர்பார்த்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளர் அன்ரூ நவமணி தெரிவித்தார்.

நிலவும் வறட்சியான காலநிலையினால் நீர் மின் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எரிபொருள் பற்றாக்குறையினால் களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையத்தின் உற்பத்தி நடவடிக்கைகள் கடந்த 02ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அன்ரூ நவமணி சுட்டிக்காட்டினார். எரிபொருள் இன்மையினால் மத்துகம உற்பத்தி நிலையத்தின் நடவடிக்கைகளும் நேற்றுமுன்தினமிரவு முதல் மீண்டும் நிறுத்தப்பட்டுள்ளன.

### மனித உரிமை...

சீனாவுக்கோ அல்லது வேறு நாட்டுக்கோ வழங்கும் ஆபத்து இல்லை எனவும் அவர் பேட்டியில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியிருப்பதாவது,

சீனாவின் புதிய பட்டுப்பாதை திட்டத்தின் மூலம் இலங்கை பயனடைந்துள்ளது.

இந்தியா இலங்கையில் குறிப்பாக சீனாவின் நடவடிக்கைகள் குறித்து கரிசனை அடைந்துள்ளது. குறிப்பாக, சீனா வடபகுதி மீனவர்களை நெருங்குவது குறித்து கரிசனை கொண்டுள்ளது.

எனினும், இந்த அச்சங்கள் தேவையற்றவை. திருகோணமலை எண்ணெய் குத அபிவிருத்தி தொடர்பான உடன்படிக்கைகள் மற்றும் அதானி குழுமம் கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தை பெற்றுக்கொண்டுள்ளமை காரணமாக இரு நாட்டு உறவுகளும் மூலோபாய உறவுகள் என்ற அடிப்படையில் உயர்த்தப்பட்டுள்ளன.

மட்டுப்பாடுகள் உள்ளபோதிலும் மனித உரிமை விவகாரங்களுக்கு தீர்வு காண்பதில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்கள் குறித்து இந்தியாவும் சர்வதேச சமூகமும் கருத்தில்கொள்ளவேண்டும்.

தவறான அனுமானங்களின் அடிப்படையில் சீனா குறித்த கேள்விகள் எழுகின்றன. சீனாவின் திட்டங்கள் காணப்படுகின்றன என்றால், இந்தியாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் திட்டங்களும் இலங்கையில் காணப்படுகின்றன. புதிய பட்டுப்பாதைத் திட்டத்தினால் இலங்கை பயனடைந்துள்ளது. ஆனால், அதனால் யாருக்கும் பாதிப்பு ஏற்படாதவண்ணம் அதனை கையாண்டுள்ளோம்.

கடன்பொறி என்பது உருவாக்கப்பட்ட ஒரு புனைகதை. சீனாவிடமிருந்தோ அல்லது வேறு எந்த நாட்டிடமிருந்தோ நாங்கள் கடன்களை பெறும்போது திருப்பிச் செலுத்துவது குறித்த சிறந்த யோசனையுடனேயே அதனை பெறுகின்றோம்.

2015இல் அரசாங்கம் மாறியவேளை நாங்கள் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கான மூன்றில் ஒரு வீத கடனை செலுத்தியிருந்தோம். இலங்கை கடனிலிருந்து மீளமுடியாத, அதன் சொத்துகள் இன்னொரு நாட்டுக்கு செல்லக்கூடிய ஆபத்து ஒருபோதும் காணப்பட்டதில்லை.

சுற்றுலாத்துறை, வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களின் வருமானம் போன்றவற்றில் மீள முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதால் இலங்கையின் பொருளாதார நிலைமையில் முன்னேற்றம் ஏற்படுகின்றது.

இலங்கையில் ஒவ்வொரு துறையிலும் குறிப்பிடத்தக்க அளவுக்கு இலங்கையின் காலடித்தடம் உள்ளது. ஏனைய நாடுகள் இந்தியாவை முந்திவிட்டன மறைத்துவிட்டன என எப்படி தெரிவிக்க முடியும்?

எந்த நாட்டின் பாதுகாப்பு நன்மைக்கு எதிராகவும் எங்கள் நாட்டை பயன்படுத்த அனுமதிக்கமாட்டோம். குறிப்பாக இந்தியாவின் நலன்களுக்கு எதிராக எங்கள் நாட்டை பயன்படுத்த அனுமதிக்கமாட்டோம். - என்றார்.

### விலை அதிகரிப்பால்...

என ஐ.நா. அமைப்பு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் உணவு விவசாய ஸ்தாபனம், தனது சர்வதேச தகவல் மற்றும் முன்கூட்டிய எச்சரிக்கையில் இதனை தெரிவித்துள்ளது.

இலங்கை ரூபாவின் வீழ்ச்சி, எரிபொருள் நெருக்கடி, உரநெருக்கடி போன்றவற்றால் உருவாகியுள்ள பணவீக்கம் காரணமாக பல குடும்பங்கள் தாங்கள் நாளாந்தம் உண்ணும் உணவை குறைத்துக்கொண்டுள்ளன என ஐ.நா. அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் அரிசியின் விலை செப்டெம்பர், நவம்பர் மாதங்களில் அதிகரித்தது. அது டிசம்பரில் ஓரளவு நிலையாக காணப்பட்ட பின்னர் மீண்டும் விலைகள் அதிகரிக்க ஆரம்பித்துள்ளன. ஆனாலும் ஜனவரியில் முன்னர் ஒருபோதும் இல்லாத அளவிற்கு விலைகள் உயர்ந்தன. முன்னைய வருடங்களை விட விலையுயர்வு 50 வீதம் உயர்ந்துள்ளதென மேற்படி ஐ.நா. அமைப்பு தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் அடிப்படை உணவுப்பொருட்களின் விலைகளும் செப்டெம்பர் மாதம் முதல் அதிகரித்துள்ளதாக ஐ.நா. அமைப்பு தெரிவித்துள்ளது. உள்ளூர் சந்தையில் அடிப்படை உணவுப்பொருட்கள் மக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்வதற்கான, விலைகளை கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் குறுகிய காலத்துக்கு பலனளித்தன. எனினும், ஒக்டோபரில் இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்ததால் இந்த முயற்சிகள் பாதிக்கப்பட்டன. விலைகள் மீண்டும் அதிகரித்தன என ஐ.நா. அமைப்பு தெரிவித்துள்ளது.

### பெண் நடனக் கலைஞர்...

அம்பகஸ்வெவ ஹிரியால, நரணகொல்ல பிரதேசத்தை சேர்ந்த 28 வயதான பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

பெண்ணொருவரை மோசமான உடல் நிலையுடன் களுபோவில வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றதாக ஒருவர் நேற்றுமுன்தினம் தொலைபேசியில் அறிவித்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பெண்ணின் உடலை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நபர் வைத்தியசாலையில் இருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. இதனையடுத்து உடலை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நபரை அழைத்துச் சென்று வீடமைப்புத் தொகுதியில் உள்ள வீட்டில் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது பெண் இறந்து விட்டதாக அந்த நபர் பொலிஸாரிடம் கூறியுள்ளார். இது சம்பந்தமாக நுகேகொடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த நபர் நிக்கவரெட்டிய, மில்லகொட பிரதேசத்தில் வசிக்கும் 40 வயதான திருமணமான மூன்று பிள்ளைகளின் தந்தை என்பது தெரியவந்துள்ளது.

இந்த நபர் உயிரிழந்த பெண்ணுடன் சுமார் 10 மாதங்களுக்கு முன்பிருந்து மறைமுக தொடர்புகளை வைத்திருந்ததுடன் மாதம் 30 ஆயிரம் ரூபா வாடகைக்கு ஆடம்பர வீடொன்றைப்பெற்று பெண்ணுடன் வசித்து வந்துள்ளார். அத்துடன் சில நாட்களுக்கு முன் ஒரு முறை அந்த வீட்டுக்கு வந்து சென்றுள்ளார். இந்தப்பெண் திருமணமாகி விவாகரத்து பெற்றவர் என்பதுடன் 05 ஆண்டுகளுக்கு பின்னர் ஊரிலிருந்து வந்து கொழும்பில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வந்துள்ளார் என்பதும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. பெண்ணின் மரணம் தொடர்பில் பிரேத பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளன. இதற்கு பின்னர் மரணம் தற்கொலையா அல்லது கொலையா என்பது தெரியவரும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### பிரித்தானியா...

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக மற்றுமொரு தீர்மானத்தை கொண்டு வருவதற்கு பிரித்தானியா தீர்மானித்துள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்தத் தீர்மானமானது, இறுதிக்கட்ட போரில் இடம்பெற்றதாக கூறப்படுகின்ற பாரதூரமான மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளுக்கான பொறுப்புக்கூறலின் தாமத நிலை மற்றும் அண்மைய கால உரிமை மீறல்கள் உள்ளடக்கியதாக இருக்கும் என கொழும்பு இராஜதந்திர மட்ட தகவல்கள் மேலும் குறிப்பிடுகின்றன.

பிரித்தானியா கொண்டு வரவுள்ள இந்த புதிய தீர்மானத்துக்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பலவும் மேற்குலக நாடுகள் சிலவும் ஆதரவை தெரிவித்துள்ளதாகவும் அந்தத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இவ்வாறானதொரு நிலையில், ஜெனீவாவில் ஏற்படக் கூடிய நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் பல்வேறு வியூகங்களை வகுத்து வருகின்றது.

இதனடிப்படையில், ஜெனீவா அமர்வுக்கு முன்னர் முக்கிய சில ஐரோப்பிய நாடுகளுடன் கலந்துரையாடலை முன்னெடுக்க வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தீர்மானித்துள்ளார். இந்த கலந்துரையாடல்களுக்கு சில நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சின் முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டார்.

அண்மைய இந்திய விஜயத்தினை போன்று குறிப்பிட்ட சில ஐரோப்பிய நாடுகளுக்கு ஜெனீவா அமர்வுக்கு முன்னர் விஜயம் செய்தல் அல்லது மார்ச் மாதம் 03ஆம் திகதி இலங்கை குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் குறித்த நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்து ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளல் போன்ற வழிமுறைகள் குறித்து இலங்கையின் இராஜதந்திர பணிக் குழாம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

அதேபோன்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக ஜெனீவா செல்லவுள்ளார்.

மார்ச் 03ஆம் திகதி மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை குறித்த எழுத்து மூலமான அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த அறிக்கையானது, இலங்கைக்கு சவால் மிக்கதாகவே அமையும் என கருதப்படுகின்றது.

ஜெனீவா அமர்வுக்கு முன்னர் மேற்குலக நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களை சந்திக்க அமைச்சர் பீரிஸ் முயற்சிகளை எடுத்து வருகிறார். எனினும், அவை முழுமையாக வெற்றியளிக்கவில்லையென தெரிகிறது.

# இன்றைய ராசி பலன்

**14.02.2022 திங்கட்கிழமை மாசி 02**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**நட்சத்திரம்: புனர்பூசம்** காலை 11.53 வரை **பூசம்** காலை11.53 -15.02.2022 பிற்பகல் 1.49 வரை

**யோகம்: ஆயுஷ்மான்** இரவு 9.29 வரை **ஸௌபாக்யம்** இரவு 9.29 - 15.02.2022 இரவு 9.18 வரை

**திதி:பூர்வ பட்ச திரயோதசி** இரவு 8.28 வரை **பூர்வ பட்ச சதுர்த்தசி** இரவு 8.28 - 15.02.2022 இரவு 9.42 வரை

**முற்கரணம்: கௌலவம்** காலை 7.38 வரை **பிற்கரணம்: தைதுலம்** காலை 7.38 - இரவு 8.28

**சுப நேரங்கள்**
காலை 6.28 - 7.56
மாலை 4.53 - 6.22

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்** காலை 7.57 - 9.26

**குளிகை காலம்** பிற்பகல் 1.54 - 3.23

**எமகண்ட காலம்** காலை 10.56 - பி.ப 12.25

**துர் முகூர்த்தம்** பிற்பகல் 12.49 - 1.36 மாலை 3.11 - 3.59

லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை ப்ரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி

**மேஷம்:** உறவுகளுடன்பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க கவனம் தேவைப்படலாம். வேலைத்தளங்களிலும் பிரச்சினைகளை சந்திக்காமல் இருப்பதில் கவனம் தேவைப்படலாம். மன அழுத்தம் சிறிய அளவில் ஏற்படலாம். இறைவணக்கம் தேவை.

**ரிஷபம்:** வாழ்க்கை வளமேம்பாட்டுக்கான செலவுகள் ஏற்படலாம். பணியிடங்களில் சக பணியாளர்களின் ஆதரவும் கிடைக்கலாம். கடின செயல்களும் உங்களால் எளிதில் நிறைவேறலாம்.

**மிதுனம்:** குடும்பத்தில் சில கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். காதலில் அனுசரிப்பு தேவைப்படலாம். தேவையற்ற எண்ணங்கள் உருவாகலாம். அன்னையின் உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். இறைவணக்கம் நன்மை.

**கடகம்:** வாழ்க்கைத்துணைக்கு நேரத்தை ஒதுக்குவது நல்லது. அனைத்து விடயங்களும் அமைதியாக நிறைவேறலாம். இன்று புதிய தொழில் தொடங்கலாம். தம்பதியரிடையே உறவுகள் சிறப்புறும்.

**சிம்மம்:** பொறாமையால் பணிகளுக்கு தொந்தரவு ஏற்படலாம். மருத்துவ செலவுகள் ஏற்படலாம். பணிகளில் இன்று சில மாற்றங்களை செய்ய வேண்டாம். தலைவலி சிறிய அளவில் உண்டாகலாம்.

**கன்னி:** ஊடகங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு இன்றைய நாள் சாதகமாக அமையலாம். அன்றாட வழக்கங்களை சமநிலையில் வைத்திருப்பது நல்லது. தன்னம்பிக்கை மேம்படும். இணையத்தில் செய்யும் வணிகத்தில் இலாபங்கள் கிடைக்கலாம்.

**துலாம்:** பணிகளில் பதவி உயர்வு கிடைக்கலாம். உங்கள் ஆளுமை திறன் பாராட்டப்படலாம். காதல் விடயங்களில் வரம்பு தேவைப்படலாம். தொழில் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் நீங்கலாம்.

**விருச்சிகம்:** தம்பதியரிடையே பரஸ்பர புரிந்துணர்வு மேம்படும். உயர் கல்வி பெறும் மாணவர்களுக்கு நல்ல நிலை உருவாகலாம். பணிகளில் நேர்மை மேன்மையை தரும். தந்தையின் உடல்நலத்தில் கவனம் தேவைப்படலாம்.

**தனுசு:** பண விடயங்களில் குடும்பத்தில் மனக் குழப்பங்கள் தோன்றலாம். சில செயல்களில் தவறுகள் ஏற்படாதிருக்க கவனம் தேவைப்படலாம். வீட்டின் மின்னணு உபகரணங்களில் பழுது ஏற்படலாம். தொழிலில் சிறிய தடைகள் உண்டாகலாம். இறைவணக்கம் நன்மை.

**சந்திராஷ்டமம்: மூலம் நட்சத்திரத்துக்கு அ.கா 5.19 - 15.02.2022 காலை 7.23 வரை**

**மகரம்:** புதிய பணிக்கான வாய்ப்பு உருவாகலாம். காதலர்களுக்கு இடையே பரஸ்பரம் பரிசு வழங்கப்படலாம். தம்பதியரிடையே உறவுகள் சிறப்புறும். நண்பர்களின் ஆதரவு கிடைக்கலாம்.

**கும்பம்:** வீட்டுச் சூழ்நிலை சீராகும். கடன் கொடுக்கும் அல்லது வாங்கும் விடயங்களில் கவனம் தேவைப்படலாம். வணிகத்தில் சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம். தாய்வழி உறவுகளால் சுபச் செய்திகள் கிடைக்கப் பெறலாம்.

**மீனம்:** கடந்த காலத்தில் செய்யப்பட்ட முதலீடுகளின் வருவாய் அதிகரிக்கலாம். பணிகளில் மேலதிகாரிகளுக்கு உங்களால் மகிழ்ச்சி உண்டாகலாம். காதல் முன்மொழிதல் ஏற்படலாம். எதிர்பாராத பயணங்கள் உண்டாகலாம்.

# இரட்டை மேம்பாலங்களின் முதலாம் கட்டப் பணிகள் திட்டமிடப்பட்ட காலத்துக்குள் நிறைவு செய்யப்படும்

## ஆளுந்தரப்பு பிரதம கொறடா, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ



கொழும்பை அண்டிய பகுதிகளில் காணப்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் நிர்மாணிக்கப் படவுள்ள நீதிபதி அக்பர் மாவத்தை மற்றும் உத்தரானந்த மாவத்தையில் நிர்மாணிக்கப்படும் இரட்டை மேம்பாலங் களின் முதலாம் கட்டப் பணிகள் திட்டமிடப்பட்ட காலத்துக்குள் நிறைவு செய்யப்படும் என்று ஆளுந்தரப்பு பிரதம கொறடா, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இரட்டை மேம்பாலங்களின் மேற்பகுதி யின் பணியை நிறைவு செய்வதற்குத் தேவையான கான்கிரீட் கட்டமைப்புகளை எடுத்துச் செல்லும் பணி நேற்று(13) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார். இந்த இரட்டை மேம்பாலப் பணிகளை எதிர்வரும் ஜூன் மாதம் நிறைவு செய்வதற்காக 24 மணித்தியாலங்களும் உழைக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் பணிப்புரை விடுத்துள்ளதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள் ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கின் பிரகாரம், அபிவிருத்திக்கான பாதையில் நிலையான நாட்டை முன்னேற்றுவதற்கு நிலையான வீதி வசதிகளை மக்களுக்கு வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். எனவே, துரித அபிவிருத்தித் திட்டமாக கொழும்பு புறநகர் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக நிர்மாணிக்கப்பட்டு வரும் இரட்டை மேம்பாலத்தின் முதலாவது கட்டுமான நீதிபதி அக்பர் மாவத்தை மற்றும் உத்தரானந்த மாவத்தையின் நிர்மாணப் பணிகள் திட்டமிட்ட திகதியில் நிறைவு செய்யப்படும் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நீதிபதி அக்பர் மாவத்தையில் உள்ள மேம்பாலம் 207 மீற்றர் நீளமும் 8.4 மீற்றர் அகலமும் கொண்டது. உத்தரானந்த மாவத்தையில் உள்ள மேம்பாலம் 396 மீற்றர் நீளம் கொண்டது. இதன் அகலம் 10.4 மீற்றர்களாகும். இரண்டு மேம்பாலங்களையும் இணைக்கும் வகையில் அமைக்கப்படும் மேம்பாலத்தின் நீளம் 310 மீற்றர்களாகும். இதன் அகலம் 6.9 மீற்றர். இதற்கு 05ஆயிரத்து 270 மில்லியன் ரூபா செலவிடப்படும்.

# வவுனியாவில் எரிவாயு அடுப்பு வெடித்தது



**(வவுனியா செய்தியாளர்)**

வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலக வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் நேற்று அதிகாலையில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலக வீதியில் உள்ள வீடு ஒன்றில் இரவு சமையலறையில் உணவு தயாரித்து முடிந்த பின் வீட்டார் உறங்கியுள்ளனர். இந்நிலையில் அதிகாலை ஒரு மணியளவில் திடீரென எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியுள்ளது.

லிட்ரோ எரிவாயு நிறுவனத்துக்கு சொந்தமான 12.5 கிலோ எடை கொண்ட சிலிண்டர் அடுப்பே இவ்வாறு வெடித்துள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் வீட்டாரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சுகாதார விதிமுறைகளை மீறியோருக்கு எச்சரிக்கை

## மேல்மாகாணத்தில் 6,265 பேரிடம் சோதனை

மேல்மாகாணத்துக்குள் சுகாதார விதிமுறைகள் முறையாக பின்பற்றப்படுகின்றனவா என்பது தொடர்பில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை 06ஆயிரத்து 265 நபர்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய 641 பொலிஸ் உத்தியோகத்தர்களால் 03ஆயிரத்து 113 மோட்டார் சைக்கிள்களும், ஆயிரத்து 822 முச்சக்கரவண்டிகளும், இவ்வாறு சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன.

இதேபோன்று 06ஆயிரத்து 265 நபர்களும், சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளதோடு இவர்களில் ஆயிரத்து 178 பேருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் இவ்வாறான சோதனைகளை முன்னெடுத்து சுகாதார விதிமுறைகளை பின்பற்றாதவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# 'வீடற்றோருக்கு வீடு திட்டம்' புத்தளத்தில் ஆரம்பம்





**(ரஸீன் ரஸ்மின்)**

புத்தளம் செம்மாந்திடல் பகுதியில் வசிக்கும் வீடற்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பம் ஒன்றுக்கு புதிய வீடு நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (12) இடம்பெற்றது.

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் இராஜாங்க அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வரும் "மிகுந்து நிவஹன" எனும் அரசாங்கத்தின் வீடற்றோருக்கான புதிய வீடு வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் குறித்த பயனாளிக்கு புதிய வீடு நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளது.

இந்த புதிய வீட்டை நிர்மாணிப்பதற்காக கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் இராஜாங்க அமைச்சினால் 6 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புத்தளம் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் பிரதம அதிதியாக கலந்துகொண்டு குறித்த வீட்டுத் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டிவைத்தார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரின் மக்கள் தொடர்பாளர் அதிகாரி முராஆத், உறுப்பினரின் மணல்குன்று பிரதேச இணைப்பதிகாரி ரிஸ்வான் சாபார், சமூக ஆர்வலர் அயூர்தீன் உட்பட அரச உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்தவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் விடுத்த விசேட வேண்டுகோளுக்கிணங்க, புத்தளம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்படும் வீடற்ற குடும்பங்களுக்கு கட்டம் கட்டமாக குறித்த திட்டத்தின்கீழ் வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பதவி உயர்வின்மையால் வினைத்திறன் பரீட்சையில் தோற்ற முடியாத நிலை

## வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சுட்டிக்காட்டு

**(சாவகச்சேரி செய்தியாளர்)**

உரிய காலப்பகுதியில் பதவி உயர்வு வழங்கப்படாமையால் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தரம் மூன்றைச் சேர்ந்தவர்கள் இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்கு தோற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக வடக்கு மாகாண அரசாங்க சேவை பட்டதாரி உத்தியோகத்தர் சங்க செயலாளர் க.கஜிதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வடமாகாண அரச சேவை பட்டதாரி உத்தியோகத்தர் சங்கத்தினர் வடமாகாண நிர்வாக பிரதிப் பிரதம செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம் திகதி முதல் அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம்- 3 இல் நியமிக்கப்பட்டவர்கள் 10 வருட காலப்பகுதியில் சகல வேதன ஏற்றங்களையும் பெற்று தரம் 2 பதவி உயர்வு பெறுவதற்கான தகுதியைப் பெற்றிருந்தும் இதுவரை தரம்- 3இற்கு பதவி உயர்வு வழங்கப்படவில்லை.

அதன் காரணமாக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் கோரப்பட்ட இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்கு அவர்கள் விண்ணப்பிக்க முடியாதுள்ளது. அதேநேரம் அவர்களுக்கான பரீட்சை சந்தர்ப்பம் ஒன்றும் வீணடிக்கப்படும் நிலை காணப்படுகிறது.

எனவே, அவர்களது பதவி உயர்வுகளை விரைவாக வழங்குவதற்கும் அதுவரை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நடத்தப்படவுள்ள இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை விண்ணப்ப முடிவுத் திகதியை நீடிப்பதற்கும் ஆவண செய்ய வேண்டும் என வினயமாகக் கேட்டுக்கொள்கிறோம் என மேலும் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் வடக்கு ஆளுநர், வடமாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# குருவிட்டவில் ஒருவர் கொலை

குருவிட்ட – பொரலுவ பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். வீடொன்றுக்குள் இருவருக்கு இடையில் ஏற்பட்ட தகராறே இவ்வாறு கொலைச் சம்பவத்தில் முடிவடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது 49 வயதான ஒருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

வீட்டுக்குள்ளிருந்து எரிந்தநிலையில், குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த கொலைச் சம்பவம் தொடர்பில் தெரணியகல பகுதியை சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# பாணந்துறை துப்பாக்கிச் சூடு; மேலும் இருவர் நேற்று கைது

## சந்தேக நபர்களிடமிருந்து துப்பாக்கி, கைக்குண்டு மீட்பு

பாணந்துறையில் அம்பியூலன்ஸ் சாரதி மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோக சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவரை பொலிஸார் நேற்று (13) கைதுசெய்துள்ளனர்.

களுத்துறை குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பாணந்துறையைச் சேர்ந்த இருவரே கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் தேடப்பட்டுவந்த இருவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கைதுசெய்யப்படும்போது 09 சென்றிமீற்றர் நீளமுடைய உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட துப்பாக்கியொன்றும் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் இராணுவ சீருடைகள் இரண்டு, கைக்குண்டொன்றும் மேலதிக விசாரணைகளின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பாணந்துறை ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக கடந்த 27ஆம் திகதி அம்பியூலன்ஸ் சாரதியொருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து 08 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டது. அவர் பாணந்துறை குருப்புமுல்ல என்ற இடத்தைச் சேர்ந்த 32 வயதான நபர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையிலேயே மேலும் இரு சந்தேக நபர்கள் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதையல் தோண்டிய நால்வர் அவ்கனவில் கைது

**(அநுராதபுரம் செய்தியாளர்)**

அநுராதபுரம், கல்னேவ அவ்கன பகுதியில் புதையல் தோண்டிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய நேற்றுமுன்தினம் மாலை கல்னேவ பொலிஸ் பிரிவிலுள்ள அவ்கன எல வீதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போது புதையல் எடுக்கும் நோக்கில் அகழ்வுப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சந்தேக நபர்கள் மூவரை கைது செய்துள்ளனர்.

அத்துடன் புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்கள் சிலவற்றை கல்னேவ பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் கல்னேவ, அவ்கன மற்றும் பெம்முள்ள பகுதிகளை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்னேவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



தமிழன்
THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, பெப்ரவரி 14ஆம் திகதி, திங்கட்கிழமை

# அரசு கவனிக்க வேண்டியது...

தற்போதைய நெருக்கடியான நிலையை கருத்திற்கொண்டு அரசாங்கம் அவசர ஆக்கபூர்வமான பேண்தகு தீர்வொன்றை காண்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என எதிர்க்கட்சிகளும், சிவில் சமூக அமைப்புகளும் விடுத்துள்ள வேண்டுகோள் எமது கவனத்தை ஈர்த்துள்ளது.

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்கள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண உட்பட பலர் இணைந்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளதுடன், அரசாங்கம் மிகக் கடும் சவாலை எதிர்கொண்டுள்ளதை தாங்கள் ஏற்றுக்கொள்வதாகவும், தற்போதைய நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு கூட்டுத் திட்டமொன்றிற்கான அவசியம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் தேசிய பொருளாதாரக் கொள்கைக்கு மிகவும் சிறந்த பொருளாதாரக் கொள்கை அவசியம். இது தற்போதைய நிலைமைக்கான அடிப்படைக் காரணங்களுக்குத் தீர்வைக் காண உதவும். நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்கான பேண்தகு தீர்வொன்றை உறுதிசெய்யும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் கடனை செலுத்துவதை ஒத்திவைப்பதற்கும், கடனை செலுத்துவது குறித்த மீள் கட்டமைப்பை உருவாக்குவதற்கும் பல படி முறையிலான நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்ற யோசனையையும் அவர்கள் முன்வைத்துள்ளனர்.

செலுத்தவேண்டிய கடனை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கையானது பொருளாதார நெருக்கடியைத் தணிக்கும் என்பதுடன், பாதிக்கப்படக்கூடிய இலங்கையர்களின் நெருக்கடிகளைக் குறைப்பதற்கும் அதிகாரிகளுக்கும் உதவியாக அமையும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச கடன் சந்தையில் இலங்கை கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படும் அளவிற்கு தரப்படுத்தலில் நாடு வீழ்ச்சியடைந்துள்ளது. பயன்படுத்தக்கூடிய டொலர் கையிருப்பு ஒரு மாத இறக்குமதிக்கும் போதியதாக இல்லாத நிலை காணப்படுகின்றது என எதிர்க்கட்சிகளும், சிவில் சமூகத்தினரும் தங்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

எதிர்க்கட்சிகளும், சிவில் சமூக அமைப்புகளும் விடுத்துள்ள இந்த வேண்டுகோள் தற்போதைய சூழ்நிலையில் அவசரமாக கவனத்தில் கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும். இலங்கையைப் பொறுத்தவரை தினமும் பொருளாதார நெருக்கடி அதிகரித்துக்கொண்டே வருகிறது. ஏற்கனவே கொரோனா சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரம், மின்வெட்டு உட்பட வேறு பல காரணிகளாலும் எதிர்காலத்தில் நெருக்கடிகளை சந்திக்கப் போகின்றது என்பதை இப்போது நடக்கும் நிகழ்வுகள் துல்லியமாகக் காட்டுகின்றன.

மறுபுறம் தொழிற்சங்கங்களின் வேலைநிறுத்தமும் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்திவருகின்றது. பொருளாதார நெருக்கடியால் உழலும் மக்கள் அதிலும் துன்பத்தையே எதிர்கொண்டு வருகின்றனர். ஆனால், ஒவ்வொரு அரசியல் கட்சியும் தனது இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்காக மக்கள் கூட்டங்களைக் கூட்டுவதும், தேர்தலொன்றுக்கு தயாராவதுமாக இருக்கின்றது.

கடந்த 2008-2010ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட உலகளாவிய பொருளாதார நெருக்கடிகளின் காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டிருந்தாலும், அதன் தீவிரத்தன்மை இலங்கை மக்களை பெரிதாகப் பாதித்திருக்கவில்லை.

ஆனால், இந்த 2022இல் நமது வாழ்க்கை முறை, மிகப்பெரிதாக மாற்றமடைந்துள்ளதுடன், உலகமயமாக்கலின் விளைவாக, இந்த உலகத்துடன் மிக நெருக்கமாக மாறியுள்ளோம். எனவே, ஒருவகை ‘பிரமிட்’ போல், கட்டமைக்கப்பட்டுள்ள இந்தப் பொருளாதாரத்தில், எந்த நிலையில் ஏற்படுகின்ற பாதிப்பும் எந்தவொரு தரப்பையும் பாதிப்பதாகவே அமையப் போகின்றது. எனவே, எதிர்க்கட்சிகளும், சிவில் சமூக அமைப்புகளும் விடுத்துள்ள வேண்டுகோளை அரசு பரிசீலிக்க வேண்டும்.

# காதலாகி... கசிந்துருகி...




காதல் என்பது மனித வாழ்க்கையின் உன்னதமான அனுபவம். கவிஞர்களும், ஓவியர்களும், இலக்கியவாதிகளும், தத்துவமேதைகளும் காதல்வயப்பட்டு உணர்வுகளை அவர்களது நடையில் வெளிப்படுத்தியுள்ளனர். நம்முடைய ஆழ்மனதை மற்றொருவருக்குத் தரும்போது பரவசமான உணர்வு நம்மை வியாபிக்கிறது. அந்த உணர்வின் வெளிப்பாடுதான் காதல் என்கிறார்கள் அறிஞர்கள். மனித இனத்திற்கு களங்கமில்லாத, சுயநலமில்லாத பரவசத்தைத் தரக்கூடியது காதல். அது ஏற்படுத்தும் மயக்கம் அற்புதமானது. உலகத்திலிருந்து விடுபட வைத்து இருவருக்குமிடையே சுகமான உணர்வை ஏற்படுத்தக்கூடியது காதல்.

### காதலுக்காக ஒரு தினம்

கி.பி. 207இல் ரோம் நாட்டை ஆண்ட இரண்டாம் கிளாடியஸ், ரோமானிய வீரர்கள் பிரம்மச்சாரிகளாக இருந்தால் சலனங்கள் எதுவுமின்றி முழு ஆவேசத்துடன் போர் புரிவார்கள் எனக் கருதினார். ஆகவே, படையில் சேரும் இளைஞர்களுக்குத் திருமணம் ஆகியிருக்கக்கூடாது எனவும், அவர்கள் காதலிக்கக்கூடாது எனவும் சட்டமிட்டார் மன்னர். காதலை எப்படி ஒதுக்கிவைக்க முடியும்? வீரர்கள் இரகசியமாகக் காதலித்தார்கள். அவர்களை ஆதரித்த வெலன்டைன் என்னும் பாதிரியார் இளைஞர்களுக்கு இரகசியமாகத் திருமணம் செய்துவைத்தார். விடயம் தெரிந்து, பாதிரியார் சிறையில் தள்ளப்பட்டார். ஆனால், பாதிரியாராலேயே காதலிலிருந்து தப்ப முடியவில்லை. சிறை அதிகாரியின் பார்வையிழந்த மகள் அவருக்குப் பணிவிடை செய்ய, காதல் மலர்ந்துவிட்டது. “இறைவா, இந்தப் பெண்ணுக்கு பார்வை கொடு” என்று வேண்டி சிறையில் தவமிருந்தார் வெலன்டைன். பெண்ணுக்குப் பார்வை கிடைத்தது. இதையெல்லாம் கேள்விப்பட்ட மன்னர் இரண்டாம் கிளாடியஸ் கோபம் கொண்டு பாதிரியாரின் தலையை சீவும்படி ஆணையிட்டார். அதே ஆண்டு பெப்ரவரியில் தண்டனை நிறைவேற்றப்பட்டது. அவர் நினைவாகக் கொண்டாடப்படுவதுதான் வெலன்டைன்ஸ் டே!

### இலக்கியங்களில் காதல்

சங்க இலக்கியங்களில் காதல் மணம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. பழந்தமிழர் காதலைப் போற்றியுள்ளனர். ‘உடன்போதல்’ திருமணத்திற்கான ஒரு கௌரவமான வழி என போற்றப்பட்டுள்ளது. வள்ளுவர் காமத்துப்பாலில் அன்பின் ஆழத்தைப் புலப்படுத்தியுள்ளார். குறிப்பறிதல் என்ற அதிகாரத்தில் ‘கண்ணொடு கண்இணை நோக்கு ஒக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனும்இல’ என்கிறார். (காதலர் இருவரின் கண்களும் பார்வையால் ஒன்றாகிவிட்டால் அங்கே வாய்ப்பேச்சு தேவையில்லை). காதல் சிறப்பு உரைத்தல் என்ற அதிகாரத்தில் ‘உடம்பொடு உயிரிடை என்னமற்று அன்ன மடந்தையொடு எம்மிடை நட்பு’ என்கிறார். (எனக்கும், என் மனைவிக்கும் உள்ள தொடர்பு உடம்புக்கும், உயிருக்கும் உள்ள தொடர்பு போன்றது). கம்ப இராமாயணத்தில் “அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்” என ராமன் - சீதையின் முதல் காதலை கம்பர் அழகாகச் சித்தரித்துள்ளார்.

***சொர்க்கம் நரகம்***
***இரண்டில் ஒன்று***
***இங்கேயே நிச்சயம்***
***காதலித்துப் பார்***

என்கிறார் கவிஞர் வைரமுத்து.

“காதல், மகிழ்ச்சியையும், நிம்மதியையும், தெளிவையும் எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு நல்ல சிநேகிதியையும் கொடுக்குமாயின் சாகும்வரை காதலித்துக்கொண்டே இருக்கலாம்” என்கிறார் பாலகுமாரன்.

### காதல் ஒரு வரம்

நம் எண்ணங்களையும், ஆசைகளையும், கனவுகளையும், தாபங்களையும், எதிர்பார்ப்புகளையும் பகிர்ந்துகொள்ள ஒரு காதலி அல்லது காதலன் கிடைத்துவிட்டால், வாழ்க்கை முழுமையாகிவிடும் என்கிறார்கள் உளவியல் அறிஞர்கள். வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரிந்துகொண்டவர்களுக்கே காதலின் சக்தி புரியும். ஒருவருக்கொருவர் உடைமையாவதும், உரிமை கொண்டாடுவதும், ஆளுமை செலுத்துவதும் அல்ல காதல். இரு உள்ளங்கள் சங்கமிக்கும் நிகழ்வு அது. உண்மையில், காதலுக்காக சுயநலத்தையும், அகந்தையையும் இழப்பதில்தான் வாழ்க்கையின் இரகசியமே அடங்கியிருக்கிறது. காதலின் ஆச்சரியங்களில் ஒன்று சரணாகதி. எல்லாவற்றையும் காதலுக்கு அர்ப்பணிக்கும்போது காதலர்கள் புதுப்பிறவி எடுக்கிறார்கள். இதைப் புரிந்தவர்கள் புளகாங்கிதம் அடைகிறார்கள். தோற்றவர்கள் சபிக்கிறார்கள்.

### காதல் என்பது என்ன?

ஒரு ஆணும், பெண்ணும் வாழ்க்கைப் பந்தம் ஏற்படுத்தி, ஒருவருக்கொருவரென வாழ, மற்ற உயிரினங்களிலிருந்து வேறுபட, அன்பின் அடிப்படையில் உருவான பந்தம்தான் காதல். ஆனால், இனக்கிளர்ச்சியை காதல் என உள்ளர்த்தம் செய்துகொண்டு இளைய சமுதாயம் பயணித்து வருகிறது. தமக்கு ஆண் நண்பனோ, பெண் நண்பியோ இல்லையென்றால், நண்பர்கள் மத்தியில் சமூக அங்கீகாரம் கிடைக்காதோ என்ற ஏக்கத்தில் காதல் உருவாகி வளர்ந்து வருகிறது. இது திருமணம் வரை செல்வதில்லை. ஆபத்தில்லாமல் இருக்கும் வரை இக்காதலை கண்டுகொள்ளாமல் விட்டுவிடலாம். கதையில், கவிதையில், திரைப்படத்தில் ரசிக்க மட்டுமே இவ்வகை காதல் உதவும். இவை வாழ்வின் கனவுக் காட்சிகள். அசை போடலாம். ஆனால், வாழ்க்கைக்கு உதவாது. ஆனால், வாழ்க்கை என்பது யதார்த்தமானது. காதல் உணர்வை இயற்கை அளித்திருந்தாலும், அறிவைக்கொண்டு ஆராய்ந்து வாழ்க்கை முழுவதும் நிலையான இன்பம் துய்க்க ஏற்றவாறு முறைப்படுத்திக்கொள்வது அவசியம். ஆணோ, பெண்ணோ பொருளாதார சுதந்திரம் பெற்ற பின்னர் காதலியுங்கள். அப்போது உங்களுக்கு ஓரளவு அனுபவம் ஏற்பட்டிருக்கும்.

### காதலில் ஜெயிப்பது எப்படி?

திருமணம் ஒரு முடிவல்ல, ஆரம்பம் என்கிற நம்பிக்கை வந்தால் திருமணத்திற்குப் பிறகும் காதலை தொடர முடியும். திருமணத்திற்கு முந்தைய காதலும், பிந்தைய காதலும் ஒன்று என்கிற தவறான எண்ணம்தான் பிரச்சினைக்குக் காரணம். தற்போதுள்ள பணிச்சுமை, பொருளாதார நெருக்கடி, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு இல்லாமைதான் காதல் மணமுறிவிற்கு அடிப்படைக் காரணம். கணவன், மனைவியான பிறகு தங்களின் மன அழுத்தங்களையும், வெறுப்புகளையும் வெளியேற்றும் வடிகாலாக ஒருவரையொருவர் பயன்படுத்திக்கொள்கிறார்கள். இவ்வாறு செய்வது காதலுக்கு தரும் மரியாதையல்ல. சுதந்திரமான ‘ரொமான்டிக்’ (Romantic) காதல் வேறு. இல்லறத்தில் புதுப்பிறவி எடுக்கும் காதல் வேறு என்பதைப் புரிந்துகொண்டாலே உங்கள் வாழ்க்கையில் குளிர்ச்சியான தென்றல் வீசும். உங்களது இணையை நேசிக்கவும், மதிக்கவும் கற்றுக்கொள்ளுங்கள். எவ்வளவு நேசம் வைத்துள்ளீர்கள் என்பதை வெளிப்படுத்துங்கள். காதலில் ஜெயித்தவர்களைவிடத் தோற்றவர்கள் அதிகம். கடந்த காலத்தையே நினைத்து பரிதவித்துக்கொண்டிருந்தால், நிகழ்காலம் கைவிட்டுப் போய்விடும். மாற்றம் என்பது முடிவல்ல, முற்றுப்புள்ளியும் அல்ல. புதிய ஆரம்பம் என்று புரிந்துகொள்ள வேண்டும்.

**- அ.செந்தமிழ்ச்செல்வி**



## மண்ணையும் காதல்செய்!

**தினம் பார்த்து வருவதில்லை**
**இனம் பார்த்து வருவதில்லை**
**பணம் பார்த்து வருவதில்லை**
**சனம் பார்த்து வருவதில்லை**
**மனம் பார்த்து வருவதுதான் காதல்**

**மனிதக் காதலை மண்மீதும் செலுத்து**
**பொன் விளையும் பூமி சிரிக்கும்**
**தமிழா உன் உணர்வுக் காதலை**
**தாய் நிலத்தின் மீதும் செலுத்து**
**தமிழும் வாழும் தமிழனும் வாழ்வான்**

**உண்மைக் காதல் உயிர் உள்ளவரைக்கும்**
**ஊமைக் காதல் கண் மறையும் மட்டும்**
**உதட்டுக் காதல் பகட்டுக்காக மட்டும்**
**உள்ளத்தால் காதல் செய் எந்நாளும்**
**உறவை மட்டுமல்ல உரிமையையும்**

**பெண்மீது ஆண் காதல் கொள்**
**ஆண்மீது பெண் காதல் கொள்**
**அது தப்பில்லை ஆயினும்**
**உன் மண் மீதும் காதல் செய்**
**தன்மானம் கொண்ட தமிழனாகவே**
**தமிழையும் தினம் தினம் காதல் செய்..!**

**- அம்பிளாந்துறையூர் அரியம் -**



# இன்றைய நாளில்...


- **1556 – பேரரசர் அக்பர் முகலாயப் பேரரசராக முடிசூடினார்.**
- **1815 – கண்டி இராச்சியத்தை பிரித்தானியர் கைப்பற்றினர். கண்டி ஒப்பந்தம் மார்ச் 2இல் கையெழுத்திடப்பட்டது.**
- **1924 – ஐ.பி.எம். நிறுவனம் அமைக்கப்பட்டது.**
- **1987 – யாழ்ப்பாணம், கைதடியில் இடம்பெற்ற வெடிவிபத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் பொன்னம்மான் உட்பட ஏழு விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர்.**
- **1987 – தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதர்சனம் தொலைக்காட்சி சேவை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது.**
- **1989 – ஜி.பி.எஸ். திட்டத்தின் 24 செய்மதிகளில் முதலாவது செய்மதி விண்ணில் ஏவப்பட்டது.**
- **2011 – அரேபிய வசந்தத்தின் ஒரு பகுதியாக பஹ்ரைன் எழுச்சி ஆரம்பமானது.**

## நக்கல் நமசிவாயம்

**கெத்து எண்டால் என்னவென்று ஸ்ரீலங்காவிட்ட பாடம் படிக்கோணும் ஐஸே..!**

**இந்தியாவிட்ட கடன் வாங்குறது..! பிறகு பொருளாதாரத்த சமாளிக்க இந்தியாக்காரர்ட படகுகளையே ஏலத்தில விடுறது..!**

**முடியுமா ஆராலும் ...!?**



# 13 ஐக் கோருவதும் நிராகரிப்பதும் நாடாளுமன்றத்தின் கதிரைகளைப் பிடிக்கும் போட்டியின் தொடர்ச்சியே !

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் அரசியல் குழு அறிக்கை

இலங்கையின் அரசியலமைப்பில் இருந்துவரும் பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு இந்திய அரசாங்கம் தனது அழுத்தத்தை இலங்கை அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டும் எனத் தமிழரசுக் கட்சி உள்ளிட்ட ஆறு தமிழ்க் கட்சிகள் இணைந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடந்த மாதம் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்தனர். அதேவேளை பதின்மூன்றாம் திருத்தம் ஒற்றையாட்சிக்கு உட்பட்டதென்றும் அதனை நிராகரிக்க வேண்டும் எனவும் கூறி அதனைச் சவப்பெட்டியில் வைத்துக் கூட்டம் நடத்தியிருக்கிறது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.

இவ்விரு தமிழ்த் தேசியவாதத் தரப்புகளின் பதின்மூன்றாவது திருத்தம் பற்றிய ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளையும், வாதப் பிரதிவாதங்களையும் நோக்கும்போது, அன்றைய பொன்னம்பலம் - செல்வநாயகம் கால நாடாளுமன்றப் பதவிகளுக்காகப் போட்டியிட்டு வந்த தமிழர் மேட்டுக்குடி ஆதிக்க அரசியலின் தொடர்ச்சியினையே காணமுடிகிறது. இது ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்தைத் தொடர்ந்தும் தமிழ்த் தலைமைகள் தமது பழைமைவாதப் பிற்போக்குத் தமிழ்த் தேசியவாத நிலைப்பாடுகளாலும், தூர நோக்கற்ற கொள்கைகளாலும் ஏமாற்றி வரும் போக்கினையே வெளிக்காட்டி நிற்கிறது.

இவ்வாறு தமிழ்த் தலைமைகளிடையே இடம்பெற்று வரும் பதின்மூன்றாவது திருத்தம் பற்றிய அண்மைய விவாதம் பற்றி புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் அரசியல் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,




பதின்மூன்றாவது திருத்தம் என்பது 34 வருடங்களுக்கு முன்பு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக இலங்கையின் அரசியல் யாப்பிற்கு கொண்டுவரப்பட்ட ஒரு திருத்தமாகும். இது அன்றைய சூழலில் இலங்கையின் இன முரண்பாட்டினைப் பயன்படுத்தித் தமது பிராந்திய மேலாதிக்க நலன்களுக்காக இந்தியாவினால் வலிந்து திணிக்கப்பட்டதாகும். தமிழ் மக்கள் உள்ளிட்ட ஏனைய மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாததும், மிகக் குறைந்த அதிகாரங்களைக் கொண்டதாகவும் பதின்மூன்றாவது திருத்தம் அமைந்திருந்த காரணங்களால் எமது கட்சி அன்று பதின்மூன்றாவது திருத்தத்திற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. அதற்கு கீழ் இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தலில் பங்குகொள்ளவும் இல்லை. ஆனால், கடந்த 34 ஆண்டுகளில் தொடர்ந்து வந்த சிங்கள பௌத்த ஆளும் வர்க்கக் கட்சிகள் பல வழிகளிலும் பதின்மூன்றாவது திருத்தத்தை செயலிழக்கச் செய்யவும், இல்லாதொழிக்கவும் முயன்று வந்துள்ளன. இச்சூழலிலேயே இலங்கை அரசியல் யாப்பில் தேசிய இனப்பிரச்சினையைக் குறைந்த அளவிலேனும் அடையாளப்படுத்தும் ஒன்றாக பதின்மூன்றாவது திருத்தம் இருந்து வரும் யதார்த்தத்தை நிராகரிக்க முடியாது. பதின்மூன்றாவது திருத்தத்திலிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீளவும் உட்படுத்திக் கொள்வதுடன், நடைமுறைப்படுத்தாது விடப்பட்டவற்றை அமுல்படுத்த வேண்டும்.

அத்துடன் இன்றைய நிலைமைகளுக்கு ஏற்ப அதிகாரப் பகிர்வை விரிவுபடுத்தி உட்புகுத்த வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் எமது கட்சி நீண்ட காலத் தீர்வாக முன்வைத்து வருகின்ற முழுமையான பிராந்திய சுயாட்சிக்குரிய அடிப்படைகளை நோக்கி இப் பதின்மூன்றாவது திருத்தத்தினை விரிவுபடுத்துவதிலிருந்து ஆரம்பிக்க முடியும். இதனைச் சமாதானமாகப் பேசி சிங்கள பௌத்த பேரினவாத ஆளும் வர்க்க சக்திகளிடம் பெற்று விட முடியும் என எமது கட்சி நம்பவில்லை. ஆனால், அதனை வென்றெடுப்பதற்கு உறுதியான கொள்கை அடிப்படையிலான வேலைத் திட்டத்தையும், அதற்கான வெகுஜனப் போராட்டத்தையும் பரந்த முற்போக்கு ஜனநாயக இடதுசாரி சக்திகளுடன் இணைந்து செயற்படுத்துவதை எமது கட்சி முதன்மைப்படுத்துகிறது.

நான்கு தேசிய இனங்களையும், சிறுபான்மைச் சமூகங்களையும் உள்ளடக்கிய இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான பிராந்திய சுயாட்சியும், உட் சுயாட்சிக் கட்டமைப்புகளும் நிறுவப்படுவதையும் அதனை அரசியல் யாப்பு வாயிலாக உறுதிப்படுத்துவதையும் எமது கட்சி தேசிய இனப்பிரச்சினைக்குரிய அரசியல் தீர்வாக வலியுறுத்தி வருகிறது. அத்தகைய அமைப்பு நீண்ட காலத்திலேயே வென்றெடுக்க முடியும் என்பதால், அதனை நோக்கிய நீண்ட அரசியல் போராட்டப் பயணத்தில் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தினை நிராகரிப்பதற்குப் பதிலாக அரசியல் யாப்பு அடிப்படையில் மேலும் அதற்குரிய பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீளப்பெற்று விரிவாக்கி வலுப்படுத்தி முன்னெடுக்க வேண்டும். இதனை வலியுறுத்தி மக்களை ஐக்கியப்படுத்தும் மக்கள் திரள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதனைச் செய்யாது இந்தியாவிடம் மண்டியிட்டுக்கொள்வதோ அல்லது அமெரிக்காவிடம் கெஞ்சி நிற்பதோ அல்லது புலம்பெயர்ந்த தமிழர் மேட்டுக்குடி அமைப்புகளையும் அவர்களது பணக் கட்டுகளையும் நம்பி இனவாத முழக்கங்களை எழுப்பி வாக்குவங்கி அரசியல் செய்வதோ பயனற்றவையாகும்.

எனவே, பேரினவாத ஒடுக்குமுறையினை அனுபவித்து வரும் தமிழ்த் தேசிய இனம் இதுவரையான பட்டறிவின் ஊடாக உரிய படிப்பினையைப் பேசவேண்டும். அதற்குரிய மாற்றுச் சிந்தனை செயற்பாட்டுத் தளங்களில் இளந்தலைமுறை வழிநடக்க முன்வர வேண்டும் எனும் அறைகூவலையே எமது கட்சி விடுக்கின்றது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புத்தளத்தில் ஏலத்தில் விற்கப்பட்ட நான்கு இந்தியப் படகுகள்



*(ரஸீன் ரஸ்மின்)*

இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்தபோது கைப்பற்றப்பட்ட நான்கு இந்தியப் படகுகள் புத்தளத்தில் வெள்ளிக்கிழமை (11) ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன.

இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்தபோது கைப்பற்றப்பட்டு கற்பிட்டி ஆணவாசல் கடற்படைத்தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 4 இந்திய மீனவப்படகுகளே இவ்வாறு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளின் தலைமையில் படகு ஒன்று தலா 51 ஆயிரம் ரூபா வீதம் நான்கு படகுகளும் 2 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டன.

இந்தப் படகுகள் ஏல விற்பனைக்கு யாழ்ப்பாணம், குருநாகல், வாரியப்பொல உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 20க்கும் மேற்பட்ட கொள்வனவாளர்கள் வருகை தந்திருந்தனர்.

இவ்வாறு படகுகளைக் கொள்வனவு செய்ய வருகை தந்தவர்கள் கற்பிட்டி ஆணவாசல் கடற்படைத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகளை பார்வையிட்டதுடன், குறித்த நான்கு படகுகளையும் ஏலத்தில் கொள்வனவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட இந்தியப் படகுகள் நீருக்குள் நிறுத்தி வைக்கப்பட்டமையால் பாவனைக்கு பயன்படுத்த முடியாத அளவுக்கு பழுதடைந்துள்ளதாக வருகை தந்த கொள்வனவாளர்கள் தெரிவித்தனர்.

பழுதடையும் முன்னர் இவ்வாறு ஏலத்தில் விற்பனை செய்திருக்கலாம். அத்துடன் அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்தாலும் அது எமக்கு பிரயோசனத்தைக் கொடுத்திருக்கும்.

இப்போது இந்த படகுகளால் எந்த பிரயோசனமும் இல்லை. படகுகளை பிரித்து பழைய இரும்புக்கே விற்பனை செய்ய வேண்டும் எனவும் படகு கொள்வனவு செய்ய வருகை தந்த கொள்வனவாளர்கள் மேலும் தெரிவித்தனர்.



உடபுஸ்ஸல்லாவ டலோஸ் தோட்ட பாலசுப்பிரமணிய ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் விசேட அதிதியாகக் கலந்துகொண்டார். கடந்த 07.02.2022 அன்று விசேட பூஜைகளுடன் ஆரம்பிக்கப்பட்டு 11.02.2022 அன்று கும்பாபிஷேகம் நடைபெற்றதுடன், தொடர்ந்து 48 நாட்களுக்கான பூஜைகள் நடைபெறும்.

# மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படாததால் உயிரிழந்த படல்கம சிறுவனுக்கு கொரோனா

பெற்றோரின் அலட்சியத்தால் படல்கமவில் உயிரிழந்த சிறுவனின் பிரேத பரிசோதனையில், அவர் கொவிட்-19 தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தமை தெரிய வந்துள்ளது.

10 வயது சிறுவனொருவர் இந்த வார தொடக்கத்தில் சளி அடைப்பால் இறந்ததாகக் கூறப்பட்டது. சிறுவன் நோய்வாய்ப்பட்டதும், அவரது பெற்றோர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவில்லை என்று தெரியவருகின்றது.

மேலும், அவர்கள் தமது சமய முறைப்படி, சிறுவன் குணமடைய ஜெபம் செய்துள்ளனர்.

எனினும், சிறுவன் உயிரிழந்தார். அதையடுத்து, சிறுவன் உயிர்த்தெழ வேண்டி ஜெபம் செய்தனர்.

இந்த விவகாரம் தெரிய வந்ததையடுத்து, சிறுவனின் தாய், தந்தை மற்றும் பாட்டி ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர். தந்தை மற்றும் பாட்டி ஆகியோர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். தாய் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

# சமுர்த்தி கொடுப்பனவு இன்றுமுதல் அதிகரிப்பு

சமுர்த்தி பயனாளர்களுக்கு வழங்கப்படும் சமுர்த்தி மேலதிக கொடுப்பனவை நூற்றுக்கு 28 சதவீதமாக அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இந்த அதிகரிப்பு இன்று (14) முதல் நடைமுறைப்படுத்தப்படுமென இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் 17 இலட்சத்து 67 ஆயிரம் குடும்பங்கள் சமுர்த்தி கொடுப்பனவை பெறுகின்றன. இவர்களுக்காக சமுர்த்தி மேலதிக கொடுப்பனவை 28 சதவீதமாக அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்கமைய, இதுவரையில் வழங்கப்பட்ட 3,500 ரூபா மேலதிக கொடுப்பனவு பெற்ற குடும்பங்களுக்கான கொடுப்பனவு 4, 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் 2, 500 ரூபா மேலதிக கொடுப்பனவை பெற்றுக்கொண்ட குடும்பமொன்றுக்கு 3,200 மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும். 1,500 ரூபா பெற்ற குடும்பங்களுக்கு 1,900 ரூபா பெற்றுக்கொடுக்கப்படும்.



மலையக மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் 'ஒரு பிடி அரிசி' என்ற எண்ணக்கருவிற்கு அமைவாக, ஒரு இலட்சம் வறிய குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ், டயகம நட்போன் தோட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 37 வறிய குடும்பங்களுக்கு அரிசியும், பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளும் இப்பேரவையின் ஏற்பாட்டாளரும், மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினருமான ஆர்.இராஜாராம் தலைமையிலான குழுவினரால் வழங்கி வைக்கப்பட்டன. (தலவாக்கலை நிருபர்)

# அரியவகைக் கழுகுடன் ஒருவர் கைது

*(ரஸீன் ரஸ்மின்)*

சட்டவிரோதமான முறையில் அரிய வகை வெள்ளை நிறக் கழுகு ஒன்றை வளர்த்து வந்த ஒருவர் புத்தளத்தில் நேற்று (12) கைதுசெய்யப்பட்டுள்ளார்.



புத்தளம் பாலாவி இரண்டாம் கட்டை பகுதியிலுள்ள வீடொன்றில் வைத்தே சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில், குறித்த வீட்டில் சோதனை செய்தபோதே சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து WHITE BELLIED SEA EAGLE HALIEETUS LEUCOGWTER என்ற இனத்தைச் சேர்ந்த அரிய வகை வெள்ளை நிறக் கழுகு கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

குறித்த கழுகு விற்பனை செய்வதற்காக சந்தேக நபர் வீட்டில் வைத்து வளர்க்கப்பட்டு வந்ததாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸாரும், புத்தளம் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஹொரணை – கொழும்பு வீதியை பயன்படுத்துவோருக்கான அறிவிப்பு

போகுந்தர பாலத்தின் திருத்தப்பணிகள் காரணமாக ஹொரணை – கொழும்பு வீதியின் போக்குவரத்து நேற்று முதல் காலவரையறையின்றி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, காலை 6 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை கொழும்பு நோக்கிப் பயணிக்கும் வாகனங்கள் இரண்டு வழிகளை (லேன்களை) பயன்படுத்த முடியும். ஹொரணை நோக்கி பயணிக்கும் வாகனங்கள் ஒரு வழியை பயன்படுத்த முடியும்.

எவ்வாறாயினும், பிற்பகல் 3 மணிக்குப் பின்னர், மறுநாள் காலை 6 மணி வரை ஹொரணை மற்றும் கொழும்பு நோக்கி பயணிப்பவர்களுக்கு இரண்டு வழிகள் வழங்கப்படும்.

பயணிகள் பஸ்கள் தவிர அனைத்து பெரிய வாகனங்களும் போகுந்தர பாலத்தில் காலை 6 மணி முதல் 9 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் அனுமதிக்கப்பட மாட்டாது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கட்டுபெத்த, இரத்மலானை, பொரலஸ்கமுவ மற்றும் மஹரகம ஊடாக மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு பொலிஸார் சாரதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பாடசாலை மாணவர்களுக்கு 10 மொழிகளை கற்பிக்கும் திட்டத்தை ஆரம்பிக்க உத்தேசம்

பாடசாலை மாணவர்களுக்கு 10 வெளிநாட்டு மொழிகளைக் கற்பிப்பதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், ஆங்கிலம், அரபு மற்றும் ஹிந்தி உள்ளிட்ட மொழிகளுடன், பிரான்ஸ், ஸ்பெய்ன், ஜேர்மன், இத்தாலி, சீனா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளின் மொழிகளையும் கற்கும் வாய்ப்பு மாணவர்களுக்கு ஏற்படுவதாக இராஜாங்க அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, இணையவழி முறைமையில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சர்வதேசக் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து, கூட்டாக முன்னெடுக்கப்படும் இந்த வேலைத்திட்டம் தொடர்பில், நாடு முழுவதுமுள்ள பாடசாலைகளின் அதிபர்களை தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.



ஸ்ரீ சத்ய சாய் சர்வதேசப் பாடசாலையில் 2022 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்களை உள்வாங்கும் நிகழ்வு கடந்த 11.2.2022 அன்று வெள்ளிக்கிழமை பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தலவாக்கலை லிந்துலை நகர சபையின் முன்னாள் தலைவர் அசோக சேபால, கொட்டகலை தேசிய பாடசாலையின் பிரதி அதிபர் யோகேஸ்வரன், சத்ய சாய் வித்யா நிலைய பணிப்பாளர் வைத்தியர் வே.கருணைராசன், அதிபர் க.உமாதர்சினி ஆகியோர் கலந்துகொண்டனர். (தலவாக்கலை நிருபர்)

# 1000 ரூபா வேதன அதிகரிப்பு என்ற நாடகத்தினால் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தினசரி இன்னல்

## தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வடிவேல் சுரேஷ் எம்.பி. குற்றச்சாட்டு





பெருந்தோட்டத் தொழிலாளர்களின் 1000 ரூபா வேதனம் அதிகரிப்பு என்ற நாடகம் காரணமாக நாளுக்கு நாள் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

நேப்பியர் தோட்ட கீழ்ப் பிரிவு மற்றும் மேல் பிரிவு சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு மின் இணைப்பு வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

வண்ணங்களும் எண்ணங்களும் மாறிய பொழுதும் எண்ணங்கள் ஒன்றாக இருக்க வேண்டும். தேர்தல் காலங்களில் ஒரு சிலருக்கு தேயிலை இனித்தது. இன்று அது கசக்கிறது. ஆயிரம் ரூபா பெருந்தோட்ட மலையக மக்களுக்கு வழங்கி விட்டதாக மார்தட்டிக்கொள்ளும் ஒருசில அரசியல்வாதிகளுக்கு இது புரியவில்லை. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் முகம்கொடுக்கும் இன்னல்கள் பல. ஆயிரம் ரூபா அடிப்படை வேதனமாக வழங்குவதாக கூறி பெருந்தோட்ட மலையக மக்களின் சலுகைகளை இல்லாதொழித்து ஆயிரம் ரூபா என்ற போர்வையில் 500 ரூபா வழங்குவதே தோட்டக் கம்பனிகளின் கபட நாடகத்தின் உச்சம். பெருந்தோட்டத் தொழிலாளர்களை மனிதராகக்கூட மதிக்காமல் அவர்களால் செய்ய முடியாத வேலைப் பளுவை அவர்கள் மேல் திணித்து மனிதாபிமானமற்ற ரீதியில் அடாவடி செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள்.

அபிவிருத்தி என்ற போர்வையில் பசுந்தோல் போர்த்திய புலிகள் சில பெருந்தோட்ட மலையக மக்களின் இருப்பை சூறையாட முயற்சிக்கின்றார்கள். இவை அனைத்துக்கும் உச்சக்கட்டம் மரத்திலிருந்து விழுந்தவனை மாடு முட்டிய கதையாக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியில் அரசாங்கம் கை வைப்பது.

பெருந்தோட்ட மக்களை பொறுத்தவரை சிறிது சிறிதாக சேமித்து வைத்திருக்கும் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியே அவர்களுடைய இறுதி நம்பிக்கை. இதில் கிடைக்கும் பணமே பலரது கல்யாணம், வீடு, வாகனக் கனவை நிர்ணயிக்கிறது. அக் கனவுகளில் மண் அள்ளிப் போடும் செயற்பாட்டிலா அரசாங்கம் ஈடுபடுகின்றது என்ற ஒரு கேள்வி நம் மத்தியில் நிலவுகின்றது. பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் பொறுப்பற்ற வீதியில் நடந்து கொண்டால் நாடாளுமன்றத்திலும் போராட்டங்கள் தொடரும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நிவித்திகல இசைக் கச்சேரி தாக்குதல் தொடர்பில் 6 பேர் பொலிஸாரால் கைது

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

நிவித்திகல நகரில் இடம்பெற்ற இசைக்கச்சேரி ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் 06 சந்தேக நபர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், இச்சம்பவம் தொடர்பில் மேலும் பல சந்தேக நபர்கள் தேடப்பட்டு வருவதாகவும் இத்தாக்குதல் சம்பவத்தால் 14 இலட்சம் ரூபா பெறுமதி கொண்ட இசைக்குழுவின் உபகரணங்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளை நடத்திவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

இத்தாக்குதலில், இதனை நடத்திய இசைக் கலைஞர்கள் உட்பட ஏற்பாட்டாளர்கள் பலர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இசைக்கச்சேரி நுழைவுப் பிரவேசத்துக்கு ஒருவரிடம் 300 ரூபா அறவிடப்பட்டதாகவும் ஆனால், இசைக்கச்சேரி இரண்டு மணித்தியாலங்களில் நிறுத்தப்பட்டதால் வருகை தந்திருந்த இளைஞர் குழு ஒன்றுடன் ஏற்பட்ட வாக்குவாதம் தாக்குதல் வரை நீடித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கினிகத்தேனை குளத்தில் ஆணொருவரின் சடலம் மீட்பு

(கினிகத்தேனை நிருபர்)

கினிகத்தேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெனிவத் தோட்டத்தின் குளமொன்றில் இருந்து 62 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் ஒன்றை நேற்று முன்தினம் 12ஆம் திகதி மீட்டுள்ளதாக கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் மூன்று பிள்ளைகளின் தந்தை ஆவார். இறுதியாக வீட்டாருடன் தொலைபேசியில் உரையாடியிருந்த வேளையிலே காணாமல் போயிருந்தார். இதனை தொடர்ந்து இவரின் உறவினர்கள் இரவு முழுவதும் காணாமல் போனவரை தேடியுள்ளனர்.



இந்நிலையில், நேற்று கெனிவத் 3ஆம் பிரிவில் உள்ள குளம் ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக கினிகத்தேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பன்றிக்கு வைத்த மின்சாரப் பொறியில் சிக்கி இருவர் பலி

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பன்றிகளை வேட்டையாட வைக்கப்பட்ட மின்சாரப் பொறியில் சிக்கி இருவர் பரிதாபமாக பலியான சம்பவம் பெல்மதுளை சிங்ஹபுர பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இரத்தினக்கல் அகழ்வதற்காக நேற்று முன்தினம் இரவு மேலும் நண்பர்கள் இருவருடன் இவர்கள் இருவரும் வயல்வெளியில் சென்றுகொண்டிருந்த போது, பன்றிகளை வேட்டையாடுவதற்காக வைக்கப்பட்டிருந்த மின்சாரப் பொறியில் சிக்கி பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தின்போது, பலியான இருவரும் முறையே 38 மற்றும் 31 வயதுகளை உடைய குடும்பஸ்தர்கள் எனவும் ஏனைய இருவரும் தெய்வாதீனமாக உயிர்த்தப்பியுள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை பெல்மதுள்ளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சமூக ஊடகங்கள் வெறுக்கத்தக்க பேச்சுகளை இலகுவாக மக்களிடம் சந்தைப்படுத்துகின்றன

## தேசிய சமாதான சபையின் செயற்றிட்ட அதிகாரி நிரோசா எந்தனி



(கண்டி நிருபர்)

வெறுப்புப் பேச்சுகள் வீட்டையும் நாட்டையும், முழு உலகையுமே குழப்பி விடுகிறது. சமூக ஊடகங்கள் இதனை மிக இலகுவாக சந்தைப்படுத்துகின்றன என்று தேசிய சமாதான சபையின் செயற்றிட்ட அதிகாரி நிரோசா எந்தனி தெரிவித்தார்.

கண்டி செயலகத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார். கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு ஒழுங்கு செய்த, வெறுப்பூட்டும் பேச்சுகளை தவிர்ந்து கொள்வது பற்றிய பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்வின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் சனத்தொகை எண்ணிக்கையை விட அதிக எண்ணிக்கை ஸ்மார்ட் தொலைபேசிகள் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நாம் நவீன யுகத்தில் பின் செல்ல முடியாது. இருப்பினும், தேவைகளுக்கு ஸ்மார்ட் தொலைபேசிகளை பயன்படுத்துவதில் தவறில்லை. ஆனால், அதற்கு அடிமையாகி விடக்கூடாது. அதனூடாக எட்டப்படும் வெறுப்புப் பேச்சுகளால் வன்முறைகளே அதிகரிக்கும் என்றார்.

கண்டி பிரிவுக்கான மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி சுஹாசினி ரத்நாயக்கா பேசும் போது தெரிவித்ததாவது,

வெறுப்பூட்டும் பேச்சுகள் வீட்டிலே ஆரம்பித்து இறுதியில் பொலிஸ் நிலையங்களிலே முடிவடைகிறது. எனவே, இப்படியான நிலைகள் ஏற்படாதிருக்க சமயத் தலைவர்கள், பொதுமக்களை விழிப்படையச் செய்ய வேண்டும் என்றார்.

கண்டி சர்வமத அமைப்பின் அழைப்பாளர் காமினி ஜயவீர தெரிவித்ததாவது,

வெறுப்பூட்டும் பேச்சுகளை தவிர்ந்து கொள்வது தொடர்பாக தேசிய சமாதான சபையுடன் இணைந்து கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்தார்.

மனித உரிமைகள் செயற்பாட்டாளர் திருமதி ரேணுகா மல்லியகொட தெரிவித்ததாவது,

வெறுப்புப் பேச்சுகள் எந்த அடிப்படையில் வந்தாலும் அதனைத் தடுத்தல் வேண்டும். சகல மோதல்களுக்கும் அதுவே காரணமாகிறது என்றார். இதன்போது மேலும் பலரும் உரையாற்றினர்.

# அரசாங்க ஊழியர்களுக்கு 5000 ரூபா கிடைத்துள்ளது: தொழிலாளர்களுக்கு கோதுமை மா கிடைக்கவில்லை!

## மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஸ்ரீதரன்



அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட 05ஆயிரம் ரூபா மாதாந்த நிவாரணக் கொடுப்பனவு அரசாங்க ஊழியர்களுக்கு கிடைத்துள்ளது. ஆனால், தோட்டத் தொழிலாளர்களுக்கு 15 கிலோ கோதுமை மா வழங்கப்படும் என்று வெளியான அறிவிப்பு இதுவரை நடைமுறைக்கு வராதிருப்பது உழைக்கும் தொழிலாளர்களின் எதிர்பார்ப்பில் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என தொழிலாளர் தேசிய சங்கத்தின் நிதிச் செயலாளரும், மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான சோ. ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை ஏற்றம், சமையல் எரிவாயு, பால்மா உட்பட முக்கிய பொருட்களுக்கான தட்டுப்பாடு போன்றவற்றைக் கருத்திற்கொண்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் அரசாங்கம் அரசாங்க ஊழியர்களுக்கு மாதாந்தம் 05ஆயிரம் ரூபா வீதம் ஒரு வருடத்துக்கு நிவாரணம் வழங்குவதற்கு முன்வந்துள்ளது. அதனடிப்படையில் கடந்த மாதம் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தோடு 05ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், ஓய்வூதியம் பெறுகின்ற அரசாங்க ஊழியர்களுக்கு கடந்த மாத நிலுவையோடு, இம்மாத ஓய்வூதியத்தோடு சேர்த்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

அதேநேரம், தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதார நிலைமையை உணர்ந்து மாதாந்தம் ஒரு கிலோ 80 ரூபா என்ற அடிப்படையில் தலா 15 கிலோ கோதுமை மாவை நிவாரணமாக வழங்கப்போவதாக உறுதியளித்திருந்தது. மேலும், கோதுமை மா 05 ஆம் திகதி கிடைக்கவுள்ளதாக மலையக அரசியல்வாதிகள் ஊடக சந்திப்புகளில் தெரிவித்திருந்தார்கள். ஆனால், இதுவரை எதுவுமே கிடைக்கவில்லை. இது கோதுமை மாவை எதிர்பார்த்திருந்த தொழிலாளர்கள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கம் கடந்த இரண்டு வருடங்களாக மலையகத்தில் குறிப்பிடத்தக்க அபிவிருத்திப் பணிகள் எதனையும் ஏற்படுத்தவில்லை. வீடமைப்பு, பல்கலைக்கழகம் அமைத்தல் எல்லாமே வெறும் அறிக்கைகளாகவே இருந்து வருகின்றன. அதேபோல்தான் கோதுமை மாவுக்கான அறிவிப்பும் இருந்து விடுமோ என்ற ஐயத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு கடந்த ஏப்ரல் மாதம் அறிவிக்கப்பட்ட ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு இன்று வரை கிடைக்கவில்லை. தோட்டங்களில் வேலை நாட்களும் குறைவாகவே உள்ளன. வேலைப் பளுக்களும் அதிகரித்துள்ளன. நிர்வாகங்களின் கெடுபிடிகளுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் தொழிலாளர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றார்கள். ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 150 ரூபாவை எட்டி விட்டது. அரிசியின் விலையும் அதிகரித்த வண்ணம் உள்ளன.

இந்நிலையில், அரசாங்கம் அறிவித்த 15 கிலோ கோதுமை மாவின் மூலம் ஓரளவு சமாளித்துக் கொள்ளலாம் என்று தொழிலாளர்கள் எதிர்பார்த்திருந்தார்கள். அதுவும் கைகூடாமல் உள்ளது. எனவே, அரசாங்க ஊழியர்களுக்கு 05ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளதுபோல, நிரந்தர மற்றும் தற்காலிக தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை உணர்ந்து அறிவிப்பட்ட 15 கிலோ கோதுமை மாவை காலம் தாழ்த்தாமல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# பாத்ததும்பறை மத்தியஸ்த சபைக்கு புதிய உபதலைவர்



(கண்டி நிருபர்)

பாத்ததும்பறை மத்தியஸ்த சபைக்கு புதிய உபதலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். வெற்றிடமாகக் காணப்பட்ட மேற்படி பதவிக்கு மடவளை, நாப்பாகவைச் சேர்ந்த டபிள்யூ. டபிள்யூ. ஹேமகீர்த்தி பத்பேரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

கண்டி மாவட்ட செயலகத்தில் கணக்காய்வுப் பகுதியில் இவர் வகிக்கும் பதவிக்கு மேலதிகமாக இது வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 06 மாதங்களுக்கு மேலாக உபதலைவர் ஒருவர் இன்றி இயங்கியதன் காரணமாக இலங்கை மத்தியஸ்த சபை ஆணைக்குழுவினால் இவருக்கான புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நியமனக் கடிதத்தை பாத்ததும்பறை மத்தியஸ்த சபைத் தலைவர் எச்.எம். சந்ரரத்ன பண்டாவினால் ஹேமகீர்த்தி பத்பேரியவிடம் கையளிக்கப்பட்டது.

இவ்வைபவம், வத்துகாமம் யடிராவன மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. பாத்ததும்பறை மத்தியஸ்த சபையின் இதர அங்கத்தவர்களும் இதன்போது பிரசன்னமாகியிருந்தனர்.

# ரஜமஹா விகாரையில் தங்கக் கலசங்கள் திருட்டு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

சப்ரகமுவ மாகாணத்தின் மிகவும் பழைமை வாய்ந்த விகாரைகளில் ஒன்றான ரம்புக்கன ரஜமஹா விகாரையில் தொல்லியல் பெறுமதி மிக்க தங்க படிக கலசங்கள் திருடப்பட்டுள்ளன.

இங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த 05 தங்கக் கலசங்களும் 04 படிக கலசங்களும் நேற்று முன்தினம் திருடப்பட்டுள்ளதாகவும் இவை தெதிகம ரஜமஹா விகாரை பூமியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் பெறுமதிமிக்க கலசங்கள் எனவும் இவ்விடயமாக இவ்விகாரையின் விகாராதிபதி பிக்குகள் வழங்கிய தகவல்களை அடுத்து விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் அமர்நாத்தில் அமைந்துள்ள பாரதத்தின் மகிமை வாய்ந்த சிவத்தலமான அமர்நாதர் (பனிலிங்கம்) தரிசனம் கண்டி பிரம்மக்குமாரிகள் ராஜயோக நிலையத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. கண்டியிலுள்ள இந்திய உதவித் தூதுவர் டாக்டர் ஆத்திரா எஸ். பிரதம அதிதியாகவும் கண்டி பெசன் நிறுவன உரிமையாளர் முத்தையாப்பிள்ளை ஸ்ரீகாந்தன் விசேட அதிதியாகவும் கலந்துகொண்டனர். அதிதிகள் வரவேற்கப்படுவதையும் டாக்டர் ஆத்திரா எஸ். மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (கண்டி இராமன்)

தமிழன்
# வணிக உலகம்
Business world
www.thamilan.lk
GROWTH

## ‘கைத்தொழில் 2022’ கண்காட்சியில் மக்கள் வங்கி கூடத்துக்கு சிறந்த வரவேற்பு

கைத்தொழில் 2022 கண்காட்சி (Industry 2022) கடந்த 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.




மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ மக்கள் வங்கியின் காட்சிக்கூடத்தைப் பார்வையிடுவதையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கடன்வசதிகள் தொடர்பாக வாடிக்கையாளருக்கு தெளிவூட்டுவதையும் படங்களில் காணலாம்.

இங்கு மக்கள் வங்கியின் கூடமொன்று நிறுவப்பட்டிருந்ததுடன் அங்கு வருகை தந்திருந்த பலரது கவனத்தையும் அக்கூடம் கவர்ந்திருந்தது. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கடன் வசதித் திட்டங்கள் தொடர்பாக அக்கூடத்தில் அறிவூட்டப்பட்டது. அதே போல் மக்கள் வங்கியின் டிஜிட்டல் சேவையின் பிரதிநிதிகளால் மக்கள் வங்கி வழங்கிடும் அதிநவீன டிஜிட்டல் வங்கி வசதிகள் வழங்கப்பட்டதுடன், நாட்டில் முன்னணி வகிக்கும் விற்பனை நிலையங்களில் பொருட்களை கொள்வனவு செய்திடும் போது விசேட விலைக்கழிவுகளை வழங்கிடும் பீபள்ஸ் கடனட்டைகளை பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்கவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டல்களுக்கமைய இலங்கை தொழில்நுட்ப அபிவிருத்தி சபை ஒழுங்கு செய்திருந்த இந்த கைத்தொழில் கண்காட்சியில் இந்நாட்டில் முன்னணி வகிக்கும் 20 கைத்தொழில்களை பிரதிநிதித்துவப்படுத்தி முன்னோடியாய் திகழும் கைத்தொழிற்சாலை உரிமையாளர்கள் தமது 300 கூடங்களை காட்சிப்படுத்தியிருந்தனர்.

தேசிய தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளில் முதலீடு செய்திடும் சந்தர்ப்பங்களையும் புதிய சந்தை வசதிகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் அவர்களுக்கு புதிய சந்தை சவால்கள், தொழில்நுட்பம் மற்றும் நடைமுறை சவால்களை எதிர்கொள்ளும் சூழலையும் அமைத்துக் கொடுக்கும் நோக்கத்துடன் இடம்பெற்ற இந்தக் கண்காட்சியில் தேசிய கைத்தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் இது தொடர்பாக ஆர்வம் கொண்டுள்ளோருக்கு நிதி வசதிகள் பெற்றுக் கொடுத்தல் மற்றும் நிதியியல் சார் அறிவுரைகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடனேயே மக்கள் வங்கி கலந்து கொண்டது.

இலங்கை டிஜிட்டல் வங்கித்துறையில் முன்னோடியான மக்கள் வங்கி நாடு முழுவதும் வியாபித்திருக்கும் தமது 741 கிளை மற்றும் சேவை நிலையங்களுடன் 8000க்கும் அதிகமான ஊழியர்களையும் கொண்டுள்ளது. மேலும் 14 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கு தங்கள் சேவைகளை வழங்குவதுடன் 19 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர் தொடர்புகளைக் கொண்டிருக்கும் நாட்டின் மிகப்பெரிய நிதிச் சேவை வழங்குனர்களாகவும் திகழ்கின்றனர்.

கடந்த 60 ஆண்டு காலமாக விவசாயம், காணி விற்பனை, வணிக அபிவிருத்தி, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு ஏற்றுமதி, இறக்குமதி கைத்தொழில் ஆகியவற்றுக்கு தமது பங்களிப்பினை வழங்கி நாட்டின் அபிவிருத்திக்கும் நிதி சக்தி வாய்ந்த பிரஜைகளை உருவாக்குவதற்கும் தேவையான பலத்தை வழங்கிட மக்கள் வங்கி முன்னணியில் செயற்படுகிறது.

## ‘டொப் 50’ பெண்கள் விருதுகள் 2021இல்

### மிகச்சிறந்த நிறுவனக் கலாசார விருதினைத் தனதாக்கியிருந்த AIA!

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற ‘டொப்50’ தொழில்சார் மற்றும் தொழில் புரியும் பெண்கள் விருதுகள் 2021இல் AIA இன்ஷூரன்ஸ் ‘மிகச்சிறந்த நிறுவனக் கலாசாரம்’ விருதினை வெற்றி பெற்றதில் மிகவும் பெருமிதம் கொள்கின்றது. மேலாண்மையிலுள்ள பெண்களினால் (WIM) 2011 இல் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டமானது, சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் (IFC) மற்றும் அவுஸ்திரேலியா அரசாங்கத்தின் கூட்டாண்மையுடன் பணி செய்யும் பெண்களினால் மிகவும் வினைத்திறனாகவும் மேம்படுத்தப்படுகின்றது. உண்மையில் இவ்விருதுகளானது, இலங்கையில் பெண்களினால் வழிநடத்தப்படும் நிறுவனங்களையும் மற்றும் அவர்கள் தடம்பதிக்கும் முன்னோடியான சாதனைகளையும் அடையாளப்படுத்திக் கௌரவிப்பதையே நோக்காகக் கொண்டுள்ளது. மேலும், ஒவ்வொரு வருடமும் அதிகரித்துச் செல்லும் மிகவும் திறமையான விண்ணப்பதாரிகளை மதிப்பிடும் பணி மிகவும் கடினமானதொன்றாகவே அமைந்துள்ளது.




AIA இன் பிரதான நிறைவேற்று அதிகாரி நிகில் அத்வானி கருத்துத் தெரிவிக்கையில், ‘முதன் முறையாக இந்த விருதினை வெற்றி பெற்றிருப்பதானது எனக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கின்றது. மேலும் புதிய ஆண்டுக்கு ஒரு மிகச்சிறந்த தொடக்கத்தையே இது வழங்கியிருக்கின்றது. வேறுபாடுகளைக் கொண்டாடும் மற்றும் பின்னூட்டங்களை ஊக்குவிக்கும் ஒரு ஆதரவான சூழலை உறுதிப்படுத்துவது AIA ஸ்ரீலங்காவின் முதன்மையான வியாபார முன்னுரிமைக்குரிய விடயமாகவும் திகழ்கின்றது. எங்களுடைய ஊழியர்களுடன் இணைந்து ஒத்துழைப்பான, வெளிப்படையான மற்றும் பரிபூரணமான பணிச்சூழல் ஒன்றை உருவாக்கியிருப்பதில் நாங்கள் பணிவு கலந்த மகிழ்ச்சியினைத் தெரிவிக்கின்றோம். இந்த முக்கியமான விருதானது மகிழ்ச்சி நிறைந்த மற்றும் அதிகாரமளிக்கும் நிறுவனக் கலாசாரத்தை உருவாக்குவதில் AIA இன் வெற்றியைப் பறைசாற்றுவதுடன் பழைய தலைமுறையினர் தொடக்கம் மிலேனியல் வரை மற்றும் தற்போதைய தலைமுறை Z உட்பட அனைத்துத் தலைமுறையினரின் மத்தியிலுள்ள மிகச்சிறந்த திறமையானவர்களைத் தொடர்ச்சியாகக் கவர்ந்து நிறுவனத்துடன் தக்க வைப்பதற்கும் இந்நிறுவனக் கலாசாரம் மிகவும் உதவுகின்றது’ எனத் தெரிவித்திருந்தார்.

மிகவும் செழுமையான பாரம்பரியம் மற்றும் புதுமைகள் நிறைந்த மனநிலையுடன் எங்களுடைய உறுதியான நிறுவனக் கலாசாரத்தில் இணைவதற்காகப் புதிய கண்ணோட்டம், கூட்டு மனப்பான்மை மற்றும் தீவிரமான ஆர்வமுடைய சாத்தியமான ஊழியர்களுக்கும் AIA அழைப்பு விடுக்கின்றது.

## அவுஸ்திரேலியாவை சார்ந்த ஒரு BOI நிறுவனமான Autogroup International

## இலங்கையில் தனது 20ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றது

இலங்கை வாகனத்துறையில் முன்னணி நிறுவனமான Autogroup International(AGI), இலங்கையில் தனது தயாரிப்பு வரிசையின் 20ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றது. இலங்கை முதலீட்டுச் சபையின் அனுசரணையில் நிறுவப்பட்டு 100வீத அவுஸ்திரேலியாவுக்குச் சொந்தமான இந்த நிறுவனம் கடந்த இருபது வருடங்களாக அமெரிக்க இடது பக்க திருப்புச் சக்கர வாகனங்களை வலது பக்கத் திருப்புச் சக்கர வாகனங்களாக மாற்றி வெளிநாட்டு வாகனச் சந்தையில் தனது நிபுணத்துவத்தை வெளிப்படுத்தி வருகின்றது. Auto Group International நிறுவனம், 160 இலங்கைப் பணியாளர்களை உள்ளடக்கி சர்வதேச நிபுணத்துவங்களுடன் இலங்கை வாகனத்துறையில் நுழைந்து 20 ஆண்டுகள் நிறைவடையும் இம் மைல்கல்லைக் குறிக்கும் வகையில், 60இற்கும் மேற்பட்ட புதிய இலங்கைப் பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்ய உத்தேசித்து இருப்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது. நிறுவனத்தின் உற்பத்தித் திறனை மேலும் அதிகரிக்க மில்லியன் கணக்கான அமெரிக்க டொலர்களை பாரிய அளவில் முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளது. அதே நேரத்தில், Autogroup International நிறுவனமானது, ரூ.2 மில்லியன் பெறுமதியான “பீட்டர் ஹில் புலமைப் பரிசில் திட்டம்” நன்கொடையாக வழங்கும் திட்டத்தை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரிலும் இலங்கையிலும் அதி நவீன உற்பத்தி வசதிகளுடன் கூடிய உற்பத்தியாளரான Autogroup International, அதன் சிறந்த தானியங்கிப் பொறியியல் நிபுணத்துவத்தை வெளிப்படுத்தியுள்ளது. மேலும் அதி சக்தி வாய்ந்த எஞ்சினைக் கொண்ட, அதிக செயற்திறன் மிக்க விளையாட்டு நோக்கக் கார்கள், பிக்கப் டிரக்குகள், சொகுசு SUV கள் மற்றும் அனைத்து வகையான சிறப்பு நோக்க அமெரிக்க வாகனங்கைளையும் இடமிருந்து வலமாகப் பக்க மாற்றம் செய்வதில் உலகளாவிய ரீதியில் முன்னோடியாகத் திகழ்கின்றது. AGI ஆனது வலது பக்கத் திருப்புச் சக்கர வாகனங்களை உபயோகிக்கின்ற 50இற்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள வாடிக்கையாளர் சார்பாக வாகனமொன்றைக் கொள்வனவு செய்தல், ஏற்கனவே உள்ள வாகனங்களை மாற்றியமைத்தல் மற்றும் உலகெங்கிலும் உள்ள மொத்த மற்றும் சில்லறை வாகன வாடிக்கையாளர்களுக்கு கப்பலேற்ற வசதி மற்றும் காப்பீட்டு வசதி என்பவற்றைச் செய்து கொடுத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு இத்துறையில் குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றி வருகின்றது.

தற்போது நிறுவனமானது, Chevrolet Camaro and Silverado, Cadillac Escalade, Lincoln Navigator, Ford F150, F250 and F350, Ford Bronco, Dodge RAM and Challenger, GMC Yukon, Denali and Sierra, Hummer H2 மற்றும் H3 மொடல்களையும் Toyota Tundra போன்ற ஜப்பானிய மற்றும் வட அமெரிக்க மொடல்களையும் மாற்றியமைப்பதில் நிபுணத்துவம் பெற்றுள்ளது.



Autogroup International இன் ஸ்தாபகரும் இணைத் தலைவருமான பீட்டர் ஹில், இலங்கையில் 20 வருடங்களின் தனித்துவமான பயணம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், 20 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் ஆரம்பித்து அண்மைக்காலத்தில் இதனை வெற்றிகரமான வணிகமாக மாற்றியுள்ளோம். இக்காலத்தில் நாமும் பல சவால்களை எதிர் கொண்டோம். சர்வதேச மட்டத்திலான தேர்ச்சியையும் நிபுணத்துவத்தையும் கொண்ட எமது இலங்கைக் குழுவினாலேயே இந்தச் சவால்கள் அனைத்தையும் முறியடித்து இந்த வெற்றியை எங்களால் அடைய முடிந்தது.

வெளிநாட்டு சந்தைகளை இலக்காகக் கொண்டு அமெரிக்க வாகனங்களுக்கு பெறுமதி சேர்க்கும் நோக்கத்துடன் இலங்கை முதலீட்டு சபையின் கீழ் Autogroup International நிறுவப்பட்டது. அதி நவீன வசதிகளுடன் கூடிய அதன் தயாரிப்புக் கூடம் நுகர்வோருக்கு எளிதாக அணுகக் கூடியவாறு, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் கொழும்புத் துறைமுகம் என்பவற்றுக்கு அண்மையில் அமைந்த கடுவெல நகரில் நிறுவப்பட்டுள்ளது. கடுவெல நகரில் அமையப் பெற்றுள்ள அதி நவீன உபகரணங்களைக் கொண்ட தயாரிப்புக் கூடமானது வெல்டின், வடிவமைப்பு உருவாக்கம், ஃபைபர் கிளாஸ் மற்றும் பிளாஸ்டிக், அபோல்ஸ்டர், உலோகத் தட்டு, ஓட்டோ எலக்ட்ரிக்கல் மற்றும் மோட்டார் இயந்திரவியல் சார்ந்த துறைகளில் நிபுணத்துவம் பெற்ற உள் நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பொறியியலாளர்களையும் R&D குழுவையும் உள்ளடக்குகின்றது.

Autogroup International நிறுவனத்தின் நிறைவேற்று இணைத் தலைவர் றொப் ஹில் தனது எண்ணங்களை வெளிப்படுத்துகையில், சமீபத்தில் எனது தந்தையிடமிருந்து பொறுப்பேற்ற பின்னர், இலங்கையில் 60 புதிய குழு உறுப்பினர்களை உடனடியாக பணியமர்த்துவதன் மூலம் எங்களது திட்டங்களின் வளர்ச்சிக்கு உதவுவது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். எங்கள் சேவையை விரிவுபடுத்த பல மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்வதும் எமது வருங்காலத் திட்டமாகும்.

கடந்த 20 வருடங்களாக, இலங்கையில் உள்ள நூற்றுக்கணக்கான திறமையான நபர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதில் Autogroup International குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றி வருகின்றது. கொவிட்-19 தொற்றுப் பரவலின்போது, குழுவின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதிப்படுத்த நிறுவனம் அதன் முழு ஆதரவை வழங்கியது. AGI இன் நிலையான வளர்ச்சியின் மூலம் கருதப்படுவது என்னவெனில், இலங்கையின் பொருளாதாரத்துக்கு அமெரிக்க டொலர்களின் முக்கிய பங்களிப்பாளராக நிறுவனம் மாறியுள்ளது என்பதாகும். எதிர்காலத்தில் அதன் தயாரிப்பு வெளியீட்டை அதிகரிக்கவும், இலங்கையில் திறமையான பணியாளர்களை மேலும் மேம்படுத்தவும் உதவுகின்ற ஒரு பெரிய திட்டத்துக்காக மில்லியன் கணக்கான அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யவும் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

திகதி 12.02.2022
சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4676
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 12,531,330.00
ஆங்கில எழுத்து: P
வெற்றி இலக்கங்கள்: 3 7 3 0 3 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 43,400,374.00

கொவிசெத
Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2971
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,683,560.00
ஆங்கில எழுத்து: M
வெற்றி இலக்கங்கள்: 29 42 64 70
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 65,054,876.40

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம்: 1024
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை: ரூ. 35,158,100.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 235,660,982.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: C
சுப்பர் இலக்கம்: 09
வெற்றி இலக்கங்கள்: 46 60 64 70
மெகா அதிர்ஷ்ட இலக்கம்: 05100
இலட்சாதிபதிக்கான அதிர்ஷ்ட இலக்கம்: 46140
மோட்டார் வாகனத்துக்கான அதிர்ஷ்ட இலக்கம்: 2708670

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 706
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,504,040.00
ஆங்கில எழுத்து: B
வெற்றி இலக்கங்கள்: 32 62 67 76
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 97,015,788.80

ஹந்தஹன
ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0017
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,501,300.00
இலக்கினம்: கடகம்
வெற்றி இலக்கங்கள்: 06 09 17 25
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 2,759,838.24

ஜாதிக சம்பத
JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1210
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,074,980.00
வெற்றி இலக்கினம்: ரிஷபம்
வெற்றி இலக்கங்கள்: 2 3 8 8 2 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 12,128,881.20

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# திருக்கேதீஸ்வர ஆலய வளைவு உடைக்கப்பட்ட வீதியின் முகப்பில் திடீர் கிறிஸ்தவ சொரூபம்

## அகில இலங்கை சைவ மகா சபை கடும் கண்டனம்

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வளைவு உடைக்கப்பட்ட வீதியின் முகப்பில் கிறிஸ்தவ சொரூபம் திடீரென அமைக்கப்பட்டமைக்கு அகில இலங்கை சைவ மகா சபை கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அகில இலங்கை சைவ மகா சபை வெளியிட்ட அறிக்கையில்,

வரலாற்று பெருமைமிகு பாடல் பெற்ற ஈஸ்வரமான திருக்கேதீஸ்வரத்தில் அதன் தனித்துவத்தை சிதைக்கும் வகையில் - சைவர்களின் மனதை மீள மீள புண்படுத்தும் வகையில் திருக்கேதீஸ்வர வளைவு உடைக்கப்பட்ட வீதியின் முகப்பில் மிகப் பெரிய கிறிஸ்தவ சொரூபம் அமைக்கப்பட்டு நேற்று முன்தினம் (12) திறக்கப்பட்டுள்ளது.



வழக்கு நீதிமன்ற நிலுவையிலுள்ள வேளையில், இதனை உயர் மதப் பீடங்களின் ஆளுகையின்கீழ் இயங்கும் அண்மைய ஆண்டுகளில் பெருமெடுப்பில் பண்டைய ஒப்பந்த நடைமுறைகளுக்கு மாறாக கட்டப்பட்ட தேவாலய நிர்வாகம் மேற்கொண்டுள்ளது.

மன்னார் உயர் அரச அதிகாரிகளுக்கு முன்கூட்டியே அறிவித்தும் சொரூபம் அமைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுவது மிகுந்த அவதானத்துக்குரிய விடயமாகும்.

இது தொடர்பாக திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாகம் பொலிஸ் முறைப்பாடொன்றை செய்துள்ள நிலையில், வரலாற்றுக் கால தமிழ்ச் சைவர்களின் மரபுரிமையான திருக்கேதீஸ்வர திருக்கோவில் நிர்வாகத்துக்கு ஒட்டுமொத்த தமிழ்ச் சைவர்களின் ஆதரவை வெளிப்படுத்தி நிற்கின்றோம்.

மத நல்லிணக்கத்தை பாதிக்கும் இச்செயலுக்கு உறுதுணை வழங்காது மன்னார் ஆயர் இல்லம் சொரூபத்தை திருக்கேதீஸ்வர நுழைவாயிலான அவ்விடத்திலிருந்து அகற்ற தேவாலய நிர்வாகத்தை பணிக்க வேண்டும்.

அரச உயர் அதிகாரிகள் இனியும் அசமந்தப்போக்குடன் நடந்துகொள்ளாது மத நல்லிணக்கத்துக்கு ஊறு விளைவிக்கும், தொல்லியல் மரபுரிமைகளில் மாற்றம் செய்யும், தனித்துவத்தை சீர்குலைக்கும் செயற்பாடுகளை தடுத்துநிறுத்த வேண்டுவதுடன், சர்ச்சைக்குரிய சொரூபத்தை அகற்ற உடனடி நடவடிக்கை எடுக்குமாறு சைவத்தமிழர்கள் சார்பாக அகில இலங்கை சைவ மகா சபையினராகிய நாம் கேட்டு நிற்கின்றோம் - என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னார் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அமைச்சர் டக்ளஸ் தலைமையில் ஆராய்வு



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர்களை வலுப்படுத்தும் நோக்குடன் கடற்றொழிலாளர் அமைப்புகளை புனரமைத்து சீர்படுத்தும் வகையிலான கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (12) காலை 9 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெலின் ஒருங்கமைப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் மன்னார் நகர பிரதேச செயலாளர் எம்.பிரதீப், கடற்றொழில் உதவிப் பணிப்பாளர், கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

மேலும் மாவட்டத்திலுள்ள கிராமிய கடற்றொழிலாளர் சங்கம் மற்றும் மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

மன்னார் மாவட்டத்திலுள்ள கிராமிய கடற்றொழிலாளர் சங்கம் மற்றும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் நிர்வாகங்களை சீர்படுத்தி, தேவையான பதிவுகளை மேற்கொண்டு கடற்றொழிலாளர் நலன்சார் செயற்பாடுகளை வலுப்படுத்துவது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இதன்போது மன்னார் மாவட்டத்திலுள்ள மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவந்தனர்.

குறிப்பாக மன்னார் பள்ளிமுனை கிராம மீனவர்கள் உள்ளடங்கலாக மாவட்டத்தில் சில பகுதிகளில் மீனவர்கள் கடலுக்கு தொழிலுக்குச் செல்லும்போது கடற்படையினரின் சோதனை நடவடிக்கைகளினால் தாங்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

கடற்கரையில் மீனவர்களை சோதனை மற்றும் பதிவுகளை மேற்கொள்ள கடற்படையினர் நீண்டநேரத்தை செலவிடுவதால் தாமதித்தே தாங்கள் தொழிலுக்குச் செல்வதாலும், இதனால் தமது தொழில் நடவடிக்கை தாமதிப்பதாகவும், எனவே, உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு தாமதமின்றி தொழிலுக்குச் செல்ல கடற்படையினர் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கையை முன்வைத்தனர்.

மேலும், மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்துக்கு பாஸ் மற்றும் ஏனைய பதிவுகள் மற்றும் அனுமதியை பெற்றுக்கொள்ளச் செல்லும் மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

சில அனுமதிகளை பெற்றுக்கொள்ள சென்றால் 5 முதல் 6 நாட்கள் வரை குறித்த அலுவலகத்துக்கு சென்று வரவேண்டிய நிலை உள்ளதாகவும், எனவே, குறித்த திணைக்களத்தில் மக்களுக்கான பணி மற்றும் தேவைகள் உரிய நேரத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கையை முன்வைத்தனர்.

மீனவர்கள் மாவட்டம் விட்டு வேறு மாவட்ட கடல் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டுவரும் நிலையில், மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும், குறிப்பாக வேறு மாவட்ட மீனவர்கள் மன்னாரிலிருந்து மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்வதினால் மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இதன்போது மன்னார் மாவட்டத்திலுள்ள கிராமிய கடற்றொழிலாளர் சங்கம் மற்றும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் நிர்வாகங்களை சீர்படுத்தி, தேவையான பதிவுகளை மேற்கொண்டு கடற்றொழிலாளர் நலன்சார் செயற்பாடுகளை வலுப்படுத்தி மீனவர்களின் பிரச்சினைகளுக்கு வெகு விரைவில் உரிய தீர்வை பெற்றுக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அமைச்சர் உறுதியளித்தமை குறிப்பிடத்தக்கது.

# வன்னி மாவட்டத்தின் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் முகமாக நடமாடும் சேவை

(வவுனியா நிருபர்)

வன்னியின் மூன்று மாவட்டங்களிலும் காணப்படும் காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான காணி அமைச்சின் நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் 27ஆம் திகதி வவுனியாவில் இடம்பெறவுள்ளது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கே.காதர் மஸ்தானின் ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தான், வன்னியின் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்ற பல்வேறுபட்ட காணி தொடர்பான பிரச்சினைகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கவனத்துக்கு கொண்டுவந்ததுடன், அவற்றுக்கு விரைவான தீர்வுகளை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டிருந்தார்.

அதனடிப்படையில் காணி அமைச்சருக்கு ஜனாதிபதி வழங்கிய ஆலோசனைக்கமைவாக, நாடாளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தானுடன் கலந்துரையாடிய அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன, வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய நடமாடும் சேவை ஒன்றினை வவுனியாவில் எதிர்வரும் 27ஆம் திகதி நடத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறு பணித்துள்ளார்.

இதன்போது வனவள விலங்குகள் பாதுகாப்புத் திணைக்களங்கள் என்பவற்றின் அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். எனவே, வன்னி மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு இதன்போது தீர்வு காணப்படும் -என்றுள்ளது.

# சாவகச்சேரியில் கொரோனாவால் மூதாட்டி மரணம்

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி, நுணாவில் மேற்கு பகுதியைச் சேர்ந்த 78 வயதான மூதாட்டி ஒருவர் கொவிட் நோய்த் தொற்று காரணமாக நேற்று முன்தினம் (12) சனிக்கிழமை இரவு உயிரிழந்துள்ளார்.

தொற்றுக்கிலக்கான குறித்த மூதாட்டி வீட்டில் தனிமைப்படுத்தலில் இருந்துள்ளார். இந்நிலையில் சனிக்கிழமை இரவு நோய்த் தாக்கம் தீவிரமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அம்பியூலன்ஸ் மூலம் அனுப்பிவைக்கப்பட்டபோது வழியில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# இரணைதீவில் 12 இந்திய மீனவர்கள் கைது!




அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து கிளிநொச்சி, இரணைதீவுக்கு அண்மையாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 02 படகுகளில் இருந்த 12 தமிழக மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் நாச்சிகக்குடா கடற்படை முகாமுக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளனர். பரிசோதனைகளின் பின்னர் சட்ட நடவடிக்கைக்காக கிளிநொச்சி நீரியல்வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்படுவர்.

# மன்னாருக்கு குளிர்பானங்கள் ஏற்றிவந்த வாகனம் மீது ரிப்பர் மோதி விபத்து



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் பெரிய பாலம் பிரதான சோதனைச் சாவடி அருகில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (12) காலை 06 மணியளவில் குளிர்பான பொருட்களை மன்னாருக்கு ஏற்றி வந்து நிறுத்திவைக்கப்பட்டிருந்த லொறி மீது மாந்தை மேற்கு பிரதேசத்திலுள்ள கூராய் ஆற்றுப் பகுதியிலிருந்து மணல் ஏற்றிவந்த ரிப்பர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. குறித்த விபத்தில் இரண்டு வாகனங்களும் சேதமடைந்து வாகனத்தில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர்த் தப்பியுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு சென்ற மன்னார் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# எமக்கு நடக்கும் அநீதியை நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்களும் திரும்பிப் பாருங்கள்

## வவுனியா மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கம்

(வவுனியா நிருபர்)

எமக்கு நடக்கும் அநீதியை நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்களும் திரும்பிப் பாருங்கள் - என வவுனியா மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட சங்கத்தின் செயலாளர் சிவானந்தம் ஜெனிற்றா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் ஜனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவித்து இடம்பெற்ற போராட்டத்தின் பின் நேற்று முன்தினம் (12) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி பல்கலைக்கழகத்தை திறந்துவைப்பதற்காக வந்துள்ளார். நாம் இதுவரைகாலமும் எமது உறவுகளைத் தேடி தெருவில் நின்று 13 வருடங்களாக போராடி வருகின்றோம். கையில் ஒப்படைக்கப்பட்ட உறவுகளையே தேடுகின்றோம். இந்த நாட்டில் நீதி மறுக்கப்பட்டபோதும் நாம் சர்வதேசத்தை நோக்கித்தான் நீதிக்காக போராடிக்கொண்டிருக்கின்றோம்.

கொலைக் குற்றவாளியாக இருந்தவர் தற்போது இந்த நாட்டின் ஜனாதிபதியாக வந்து வவுனியாவிலுள்ள பல்கலைக்கழகத்தை திறந்து வைக்கின்றார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதற்கு இருக்கிறார்கள். எமது பகுதியில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டிய நிலையில் சிங்கள



மொழிக்கு முன்னுரிமை கொடுத்து பெயர்ப் பலகையை மாற்றியுள்ளார்கள். அப்படியான வற்றை தட்டிக் கேட்க வேண்டியவர்கள் அமைதியாக இருக்கின்றார்கள்.

எமது உறவுகள் இதுவரை நீதிக்காக போராடிக்கொண்டு இருக்கிறார்கள். இதுவரை நீதி கிடைக்கவில்லை. அதனால் ஜனாதிபதி இங்கு வந்தபோது நாம் எதிர்ப்பைக் காட்டுகின்றோம். நான் வீட்டில் புறப்பட்டதிலிருந்து இங்கு வரும்வரை அரச புலனாய்வுத்துறையினர் பின்தொடர்ந்து வந்துகொண்டிருந்தார்கள். எமது உறவுகளை அங்கும் இங்குமாக மறித்து ஒன்றுசேரவிடாது தடுத்துள்ளார்கள். அப்படியான நிலையிலும் நாம் இங்கு வந்துள்ளோம். நாம் ஜனாதிபதியுடன் கதைக்க வரவில்லை.

ஜனாதிபதியிடம் நான்கு கேள்விகள் கேட்க வேண்டும். கொலையை செய்த குற்றவாளி ஜனாதிபதியாக இருக்கிறார். மக்களை ஏமாற்றித்தான் செயற்படுகிறார்கள். எமக்கு நீதி மறுக்கப்பட்டுள்ளது. எனவே, சர்வதேசம் இந்த நாட்டு ஜனாதிபதியை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் ஏற்றி நீதியைப் பெற்றுத் தரவேண்டும். இதனை வலியுறுத்தி நாம் பல வருடமாக போராடுகின்றோம்.

இந்த மண்ணில் எமக்கு நீதியைப் பெற கருத்து சுதந்திரத்தைக்கூட பரிமாற முடியவில்லை. எம்மை மிகவும் வேதனைக்குரியதாக நடத்துகிறார்கள். கொவிட்டை பொருட்படுத்தாமல் நாம் செத்தாலும் பரவாயில்லை. எமது உறவுகள்தான் வேண்டும் என போராடுகின்றோம்.

எமக்கு நடக்கும் அநீதியை நாடாளுமன்ற உறுப்பினர்களும், மக்களும் திரும்பிப் பாருங்கள். எமக்கான பாதைகள் மறிக்கப்படுகின்றன. அரச புலனாய்வாளர்கள் அச்சுறுத்துகின்றார்கள். எமது உறவுகளுக்காகவே போராடுகிறோம். மார்ச்சில் நடைபெறும் ஐ.நா. கூட்டத்திலாவது சர்வதேசம் நீதியைப் பெற்றுத் தர வேண்டும். நாம் இழப்பீட்டையோ அல்லது மரணச் சான்றிதழையோ கோரவில்லை. நீதியே வேண்டும் – என்றார்.

# கண்ணகைபுரத்தில் வாழ்வாதாரப் பயிர்களை அழித்து காட்டுயானைகள் அட்டகாசம்

கிளிநொச்சி கண்ணகைபுரம் பகுதியில் காட்டுயானைகள் புகுந்து பெருமளவான பயன்தரு தென்னை மரங்களை அழித்துள்ளன.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கண்ணகைபுரம் கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு புகுந்த காட்டு யானைகள் வாழ்வாதாரப் பயிர்களான தென்னை மற்றும் ஏனைய பயன்தரு மரங்களை அழித்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன், ஸ்கந்தபுரம் ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக காட்டு யானைகளின் தொல்லை காணப்பட்டாலும் கண்ணகைபுரம் கிராமத்தில் காட்டு யானைகள் பாதிப்பு இல்லாத நிலை காணப்பட்டது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு புகுந்த காட்டுயானைகள் இவ்வாறு பெருமளவான பயன்தரு மரங்களை அழித்துள்ளன.

இவ்வாறு காட்டு யானைகளின் தாக்கத்துக்கு உள்ளாகியமை தொடர்பில் கிராம அலுவலரிடம் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், கிராம



அலுவலர் சம்பவம் தொடர்பில் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

குறிப்பாக, அக்கராயன் ஸ்கந்தபுரம் முட்கொம்பன் பகுதிகளுக்கான யானை வேலிகளை அமைக்கின்றபோது இந்தப் பிரதேசங்களில் காட்டு யானைகளை கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும் என்றும் பிரதேச விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# 'ஈகைப்பேரொளி முருகதாசன்' 13ஆம் ஆண்டு நினைவேந்தல்



இலங்கை அரசின் தமிழர் மீதான இனப்படுகொலை உச்சம் பெற்றிருந்தவேளையில், இலங்கை அரசின் தமிழர் மீதான இனப்படுகொலையிலிருந்து உறவுகளை காக்கக்கோரி 12.02.2009 அன்று ஜெனீவா ஐ.நா. முன்றலில் தன்னைத் தீயில் எரித்து ஈகைச் சாவடைந்த ஈகைப்பேரொளி முருகதாசனின் 13ஆம் ஆண்டு நினைவேந்தல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

# மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் எதிர்கொள்ளும் சவால்களின் தன்மை ஒரு பொருட்டல்ல!

## ஜனாதிபதி கோட்டாபய தெரிவிப்பு

## ஜனாதிபதி மீது வைத்த நம்பிக்கையும் அவ்வாறே உள்ளது; தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவோம் – தொழில் வல்லுநர்கள் தெரிவிப்பு









பொதுமக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் போது எதிர்கொள்ளும் சவால்களின் தன்மை மற்றும் அளவு என்பன ஒரு பொருட்டல்ல என்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார். கொவிட் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரும் அதே சமயம், நாட்டின் அபிவிருத்திப் பணிகளும் முன்னெக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று, சுமார் இரண்டு வருட காலமாக நாட்டை மூடி வைத்ததால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி, தற்போது படிப்படியாகக் கட்டியெழுப்பப்பட்டு வருகின்றது என்றும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழில் வல்லுநர்களுடனான முதலாவது மாநாடு, ஜனாதிபதி மாளிகையில் கடந்த வெள்ளிக்கிழமை (11) மாலை இடம்பெற்றது. இதன் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி எதிர்பார்க்கும் இலக்கை அடைவதற்குத் தேவையான பலத்தைப் பெற்றுக்கொடுத்து, தேசிய வேலைத்திட்டத்தை வெற்றிகொள்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக, இந்த மாநாட்டில் கலந்துகொண்டிருந்த தொழில் வல்லுநர்கள் தெரிவித்தனர். ஜனாதிபதியின் வேலைத்திட்டங்கள் தொடர்பில், பெரும்பாலான மக்கள் நேர்மறைச் சிந்தனையுடனேயே காணப்படுகின்றனர். அதனால், குறுகிய அரசியல் நோக்கத்தில் முன்னெடுக்கப்படும் போலிப் பிரசாரங்களைப் புறக்கணிப்பதாக, அங்கு கூடியிருந்தவர்கள் குறிப்பிட்டனர். முழு உலகமும் பெரும் பொருளாதாரச் சிக்கல்களை எதிர்கொண்டுள்ள இத்தருணத்தில், இலங்கையானது படிப்படியாக முன்னோக்கி நகர்ந்து வருகின்றது என்றும் அவர்கள் எடுத்துரைத்தனர். ஜனாதிபதியினால் ஆரம்பிக்கப்பட்ட புதிய விவசாயப் புரட்சிக்கு, அந்தத் துறைகளில் முழுநேரம் வேலை செய்யும் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில்முனைவோரின் ஆதரவை, தேவைப்படும் எந்த நேரத்திலும் வழங்கத் தயாராக இருப்பதாகத் துறைசார் நிபுணர்கள் தெரிவித்தனர். மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி வலுக்களை நோக்கி நகர்வதற்கான தேவையை எடுத்துரைத்த நிபுணர்கள், அதற்காகப் பிரவேசிக்கும்போது எதிர்கொள்ளும் தடைகளைத் தகர்த்தெறிய, அரசாங்கத்துக்கு நிபந்தனையற்ற உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகக் கூறினர்.

கல்வி, கொள்கைகள், சமூக விஞ்ஞானம், விவசாயம், ஆராய்ச்சி, நீர் மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி வலுக்கள், மருத்துவப் பொறியியல் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் உள்ளிட்ட பல துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய பலரும், ஜனாதிபதி தலைமையிலான இந்த மாநாட்டில் கலந்துகொண்டிருந்தனர். அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மத்திய வங்கியின் ஆளுநர், ஜனாதிபதியின் செயலாளர், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் உள்ளிட்ட பலரும் இந்த மாநாட்டில் பங்கேற்றிருந்தனர்.

# மங்கள சமரவீர போன்ற ஜனநாயகவாதிகள் ஆட்சிக் கதிரையில் அமர்ந்திருந்தால் நாடு பொருளாதார ரீதியில் முன்னேறியிருக்கும்

## சிறுபான்மை மக்களையும் அரவணைத்து அரசியல் செய்த பெருமகன் அவர் – ரிஷாட் எம்.பி.

மங்கள சமரவீர போன்ற ஜனநாயகவாதிகள் நாட்டின் ஆட்சித் தலைவராக இருந்திருந்தால், இந்த நாடு பொருளாதார ரீதியில் பாரிய முன்னேற்றத்தை அடைந்திருக்கும் என்று மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை (11) முன்வைக்கப்பட்ட மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தொடர்பான அனுதாபப் பிரேரணையின்போது, அவர் ஆற்றிய இரங்கல் உரையில் மேலும் கூறியதாவது,

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர மறைந்தாலும், இந்த நாட்டில் 'மங்கள சமரவீர' என்ற அவருடைய நாமம், அவருடைய கொள்கை, கோட்பாடு மற்றும் அவர் மேற்கொண்ட அரசியல் போன்றவை ஒரு வரலாறாக இருக்கும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது.

நான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக வருவதற்கு முன்னரேயே, மங்கள சமரவீரவுடன் நெருக்கத்தைக் கொண்டிருந்தேன். என்னுடைய அரசியல் வாழ்க்கைக்கு முன்னர், அப்பொழுது நான் வயதிலே சிறியவனாக இருந்தாலும், மங்கள சமரவீரவின் மிக நெருங்கிய நண்பர்களான ஸ்ரீபதி சூரிய ஆரச்சி, ருவன் பேர்டினன்டஸ் போன்றவர்களோடு நானும் இணைந்து, நால்வரும் ஒன்றாக பல சந்திப்புகளிலும், கூட்டங்களிலும், பல நல்ல விடயங்களிலும் கலந்துகொண்டு உரையாடியிருக்கின்றோம். அரசியலுக்குள் நான் பிரவேசிப்பதற்கு, எனக்கு பல வகையிலும் உதவி செய்தவர் மங்கள சமரவீர.

அதுமாத்திரமல்லாமல், அவர் அமைச்சராக இருந்த காலத்தில், எந்தவொரு அமைச்சை அவர் பொறுப்பெடுத்தாலும், அதில் பல சாதனைகளை நிலைநாட்டியவர். அதுபோன்று, சந்திரிகா அம்மையார் மற்றும் மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக ஆட்சிக் கதிரையில் அமர்த்தியதிலும், சஜித் பிரேமதாசவை கடந்த தேர்தலில் ஒரு ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தியதிலும் பாரிய பங்களிப்புகளை செய்தவர்.

அவர் மறைந்த செய்தியைக் கேள்வியுற்ற பொழுது மிகவும் வேதனையாக இருந்தது. அவர் இறந்தபொழுது நான் சிறையிலிருந்தேன்.



அவர் சுகயீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில், நான் சிறையிலிருந்து நாடாளுமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்த ஒரு சந்தர்ப்பத்தில், தொலைபேசியூடாக அவரது நண்பர் ருவனிடம், மங்கள சமரவீரவின் உடல்நலம் குறித்து விசாரித்தேன். அத்துடன், நான் சஜித் பிரேமதாசவை சந்தித்து, "உங்களுடைய இந்த அரசியல் உயர்வில் மலிக் சமரவிக்கிரமவும், மங்கள சமரவீரவும் செய்த தியாகங்களை அருகிலிருந்து அவதானித்தவன் நான். அந்த வகையில், அவருடைய இந்த இக்கட்டான தருணத்தில், அரசோடும், சுகாதார அமைச்சரோடும் பேசி, அவருக்குத் தேவையான உதவிகளை செய்துகொடுங்கள்" என்று வேண்டினேன்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கடைசிவரை வேட்பாளராக நின்ற அவர், தேர்தலிலிருந்து விலகியபோது, "ஏன் இந்த முடிவை எடுத்தீர்கள்?" என்று, நான் அவரிடம் வினவினேன். அதற்கு அவர், "என்னுடைய கொள்கையிலிருந்து நான் மாறவில்லை. என்னுடைய அறிக்கைகளும், செயற்பாடுகளும் ஐக்கிய மக்கள் சக்தியினுடைய வாக்கு வங்கியினைக் குறைக்கும் என்று, அதிலுள்ள சிலர் எண்ணுவார்கள் எனின், நான் இந்த அரசியலிலிருந்து ஒதுங்கி நிற்பேன். என்னுடைய நாடாளுமன்ற ஆசனம் மற்றும் எனது அரசியல் அதிகாரம் இல்லாமலானாலும் பராவாயில்லை. ஆனால், நான் உயிரோடு இருக்கும் வரை என்னுடைய கொள்கை வாழ வேண்டும்" என்று கூறினார்.

நான் அநியாயமாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த பொழுது, எனது கைதினைக் கண்டித்து, முதன்முதலாக டுவிட்டரில் அறிக்கைவிட்ட ஒரே பௌத்த பொதுமகனும், ஒரே அரசியல்வாதியும் அவரே! அதேபோன்று, அப்பாவி தமிழ் இளைஞர்கள் பாதிக்கப்பட்ட பொழுது அவர்களுக்காக, தமிழ் சமூகத்துக்காக பேசியவரும் அவரே! ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கு பிறகு முஸ்லிம் மதகுருமார், இளைஞர்கள் அநியாயமாக தண்டிக்கப்பட்ட பொழுது, காடையர்கள் பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்திய பொழுது, அவற்றுக்கு எதிராகவும் துணிந்து குரல் கொடுத்த ஒரே அரசியல் தலைவர் மங்கள சமரவீர. எனவே, அவ்வாறான ஒரு ஆளுமை மிக்க, நல்ல மனம் கொண்ட அரசியல்வாதியை, இந்த நாடு இழந்து நிற்கின்றது.

இந்த நாட்டின் சுதந்திரத்துக்கு பின்னர் வந்த ஒவ்வொரு ஆட்சியாளரும் "இனவாதம்" என்ற நஞ்சைக் கக்கி, இனவாதத்தை விதைத்து, இந்த நாட்டை கடன் சுமையில் தள்ளியிருக்கின்றார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்தத் தலைவர்கள், அவர்கள் ஆட்சிக் கதிரையில் அமர்வதற்காக மேற்கொண்ட இனவாத செயற்பாடுகள், நிச்சயமாக இந்த நாட்டுக்கு செய்த துரோகங்களாக பார்க்கப்படும்.

அவ்வாறனவர்களின் வரிசையில், மங்கள சமரவீர போன்ற ஒருவர், நாட்டின் ஆட்சித் தலைவராக, ஜனாதிபதியாக இருந்திருந்தால், இந்த நாடு பொருளாதார ரீதியில் பாரிய முன்னேற்றத்தை அடைந்திருக்கும். மஹதீர் முஹம்மட் மற்றும் சிங்கப்பூர் ஜனாதிபதி போன்ற பலரை, இன்று தங்களுடைய தேவைக்காக பயன்படுத்துகின்ற பேச்சாளர்கள், அன்று மங்கள சமரவீர போன்ற கொள்கையுடைய ஒருவரை இந்த ஆட்சிக் கதிரையில் அமர்த்தியிருந்தால், இந்த நாடும் அவ்வாறு முன்னேற்றமடைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அவ்வாறான ஒருவருடைய இழப்பு, குறிப்பாக, சிறுபான்மை சமூகத்தைப் பொறுத்தவரையில் பாரிய இழப்பாகும். சிங்கள, தமிழ் மற்றும் இஸ்லாமிய அரசியல்வாதிகளுக்கு, ஒரு முன்னுதாரண புருஷராக மங்கள சமரவீர வாழ்ந்து காட்டியிருக்கிறார். ஆகையால், அவர் மறைந்தாலும் அவருடைய கொள்கை வாழ வேண்டும் என்று நான் வேண்டிக்கொள்கின்றேன் என்று கூறினார்.

# "நான் இன்னும் உயிர்ப்புடன் இருக்கின்றேன்" அஷ்ரப் சிஹாப்தீன் நூல் வெளியீட்டு விழா




(அஷ்ரப் ஏ சமத்)

பல்துறை ஆளுமை கொண்டவரும் எழுத்தாளரும் ஒளி, ஒலிபரப்பாளருமான அஷ்ரப் சிஹாப்தீன் மொழிபெயர்த்த "நான் இன்னும் உயிர்ப்புடன் இருக்கின்றேன்" (பெண் ஆளுமைகளின் உரைகள்) நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை (12.02.2022) கொழும்பு அல்-ஹிதாய வித்தியாலய கூட்ட மண்டபத்தில் இ.ஓ.கூ.தா முஸ்லிம் சேவை உதவிப் பணிப்பாளர் பாத்திமா றினுஸியா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரும், சிங்கப்பூர் இலங்கைத் தூதுவராகவும் கடமையாற்றிய பேரியல் அஷ்ரப் கலந்துகொண்டார். நூலின் முதற்பிரதியை இம்ரான் நைனார் பெற்றுக் கொண்டார். வரவேற்புரையை கவிஞர் பாத்திமா ஸிமாரா, சட்டத்தரணி பாத்திமா, நூல் பற்றிய விமர்சன உரையை நுஸ்ரா சருக், மௌலவியா, நஸ்லின் ரஃீத், மௌலவியா அகீலா பத்தீன் ஆகியோரும் நிகழ்த்தினார்கள். இவ்விழாவில் முஸ்லிம் பெண் சட்டத்தரணிகள், எழுத்தாளர்கள் மௌலாவியா, பெண் கவிஞர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு நூலின் பிரதிகளையும் பிரதம அதிதியிடமிருந்து பெற்றுக்கொண்டனர். முகநூல் நண்பர் வட்டத்தின் உறுப்பினர்கள் அஷ்ரப் சிஹாப்தீனுக்கு நினைவுச் சின்னமொன்றையும் வழங்கி கௌரவித்தனர்.

மேற்குலகில் வாழும் இஸ்லாமிய செயற்பாட்டாளர்களான பெண் ஆளுமைகள் பதின்மரின் கருத்தாழம் மிக்க உரைகளின் மொழிபெயர்ப்பான இந்நூல் மிகப் பொருத்தமான தலைப்புகளில் நம் கவனயீர்ப்புக்குரிய காத்திரமான கருத்துகளை கொண்டனவாயும், சிந்திக்கவும், செயற்படவும் தூண்டுவனவாயும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அநீதிகளையும், அராஜகங்களையும் கண்டு அஞ்சித் துவண்டு போகாது, முடங்கி விடாது அவற்றைத் தட்டிக் கேட்டு அவற்றுக்கெதிராக குரல் கொடுப்பதோடு, அவற்றைக் களையவும் முயற்சி செய்வது நமது கடமை என்ற செய்தியும் இந்நூலில் உள்ளது. இஸ்லாமிய நாடுகளின் பெண்களின் திறமையான உரைகள் இந்நூலில் தமிழ்மொழி மாற்றம் செய்யப்பட்டு அடங்கியுள்ளன.

# இலங்கையின் முக்கிய விசாரணை அதிகாரி அமெரிக்காவுக்கு தப்பியோடியதாக தகவல்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பிரதான விசாரணை அதிகாரி ஒருவர் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் உதவி பொலிஸ் அத்தியட்சகராக பதவி உயர்வு பெற்ற குறித்த அதிகாரி அமெரிக்காவிற்கு தப்பிச் சென்றுள்ளதாக உளவுத்துறை வட்டாரங்கள் தேசிய பாதுகாப்பு சபையில் தெரிவித்துள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின்போது பெயரிடப்பட்ட சாரா ஜஸ்மின் என்ற புலஸ்தினி மகேந்திரன் மன்னாரில் இருந்து படகில் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றதாக குறித்த அதிகாரியே ஈஸ்டர் தின தாக்குதல் விசாரணை ஆணைக்குழுவுக்கு அறிவித்திருந்தார்.

சாய்ந்தமருது குண்டுவெடிப்பில் இருந்து சாரா தப்பிச் சென்றதை தனது உளவாளிகள் இருவர் நேரில் பார்த்ததாகக் கூறி உளவுத்துறையினரின் சாட்சியத்தை அந்த அதிகாரி ஆணைக்குழுவில் முன்வைத்திருந்தார்.

இந்த அதிகாரிதான் சாரா ஜஸ்மின், பொலிஸ் பரிசோதகரால் அழைத்துச் செல்லப்பட்டதாக தெரிவித்திருந்தார். இதன்படி, பொலிஸ் பரிசோதகர் அபுபக்கரை அந்த அதிகாரி கைதுசெய்திருந்தார்.

இரண்டு ஆண்டுகளாக தடுப்புக் காவலில் இருந்த பொலிஸ் பரிசோதகர் அபூபக்கர் பொய் சாட்சியம் அளித்து சிறையில் அடைக்கப்பட்டிருப்பது தற்போது தெரியவந்துள்ளது.

பதவி உயர்வு எதிர்பார்த்து ஆணைக்குழுவில் பொய்யான சாட்சியங்களை தயாரித்த குற்றச்சாட்டில் உயிர்த்த ஞாயிறு விசாரணை அதிகாரி ஒருவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினரும், பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரும் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. உயிர்த்த ஞாயிறு விசாரணை ஆணைக்குழுவின் நேரில் கண்ட சாட்சிகளின் கூற்றுப்படி, சம்பவம் நடந்த போது இரு உளவாளிகளும் பல மாதங்களாக வவுனியா மற்றும் கிழக்கு மாகாணத்திற்கு வெளியே இருந்துள்ளனர்.

பின்னர் இரு உளவாளிகளின் விசாரணையின்போது உயிர்த்த ஞாயிறு விசாரணை அதிகாரியின் வேண்டுகோளின் பேரில் பொய்யான சாட்சியங்களை வழங்கியதாக அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

இதன்படி, உயிர்த்த ஞாயிறு விசாரணை ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு அமைய பொலிஸ் பரிசோதகர் அபூபக்கர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்குமாறு பொலிஸ் திணைக்களம் சட்டமா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. எவ்வாறாயினும், உயிர்த்த ஞாயிறு தின விசாரணை ஆணைக்குழுவின் பொலிஸ் அதிகாரி திணைக்களத்திற்கு அறிவிக்காமல் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

# விவசாயிகளுக்கு உதவ களமிறங்கும் இராணுவம் ; அனைத்து பயிர் நிலங்களுக்கும் தலா ஒருவர்



## திட்டங்கள் தயாரென இராணுவ தளபதி அறிவிப்பு

அடுத்த சிறுபோக பயிர் செய்கையின்போது விவசாயிகளுக்கு உதவுவதற்காக நாட்டில் உள்ள அனைத்து வயல்கள் மற்றும் பயிரிப்படும் இடங்களுக்கு தலா ஒரு இராணுவ வீரர் அனுப்பி வைக்கப்படுவார் என இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். நாட்டின் பயிர்ச்செய்கையை உயர்ந்த இடத்திற்கு கொண்டு செல்வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் விசேட ஆலோசனையின் பேரில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக அனைத்து திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. கமத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளுடன் இணைந்து ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு விவசாயிகளுக்கு தேவையான உரத்தை விநியோகிப்பது முதல் அறுவடை செய்யப்படும் வரை அனைத்து உதவிகளும் இராணுவத்தினரால் வழங்கப்படும்.

கொவிட் தடுப்பூசி செலுத்துவதில் இராணுவம் வழங்கிய உயர் பங்களிப்பை போன்று விவசாயத்தை முன்னேற்றவும் இராணுவத்தினர் உச்சளவிலான இராணுவ தளபதி தெரிவித்துள்ளார். பங்களிப்பை வழங்கத் தயாராக இருக்கின்றனர். விவசாயத்தை முன்னேற்ற பல்வேறு தரப்பினர் முன்வைத்துள்ள யோசனைகளும் இதன்போது கவனத்தில் கொள்ளப்படும். வடக்கு, கிழக்கு உட்பட தெரிவு செய்யப்பட்டுள்ள பயிர் நிலங்களில் ஏற்கனவே இராணுவத்தினரை பயன்படுத்தி பல்வேறு பயிரிடும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் இராணுவ தளபதி தெரிவித்துள்ளார்.

# தேயிலை உற்பத்தியின் வளர்ச்சிக்கு ஒருங்கிணைந்த தாவர ஊட்டச்சத்து முகாமைத்துவத் திட்டம் அமுலில்

## அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவிப்பு







தற்போது எதிர்கொள்ளும் சவால்களுக்கு மத்தியில் தேயிலைக் கைத்தொழில்துறையின் அபிவிருத்திக்கு ஒருங்கிணைந்த தாவர ஊட்டச்சத்து முகாமைத்துவத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சு தயாராக இருப்பதாகப் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் வைத்திய கலாநிதி ரமேஷ் பத்திரண தெரிவித்தார். கடந்த வியாழக்கிழமை (10) நடைபெற்ற பெருந்தோட்ட அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் இரசாயன உரத் தட்டுப்பாடு நிலவுகின்ற போதிலும், 2020 ஆம் ஆண்டை விட 2021 ஆம் ஆண்டளவில் மொத்த தேயிலை உற்பத்தி 21 மில்லியனால் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் வலியுறுத்தினார்.

இரசாயன உரத் தட்டுப்பாட்டினால் மாத்தறை மற்றும் ஏனைய பிரதேசங்களில் உள்ள சிறு தேயிலை விவசாயிகள் பலர் சிரமங்களை எதிர்நோக்கியிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமண வீரசிங்க குறிப்பிட்டார். இரசாயன உரங்களின் விலை அதிகரித்துள்ள நிலையில், தேயிலைத் தோட்டங்களுக்கு இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதற்கான நடைமுறையை அரசாங்கம் ஒழுங்குமுறைப்படுத்துவது பொருத்தமானது எனச் சுட்டிக்காட்டிய வீரசுமண வீரசிங்க, தேயிலை பயிர்ச்செய்கைக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட இரசாயன உரங்களில் சில ஏனைய பிரதேசங்களில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகக் கூறினார். சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து கூட்டுறவு முகாமைத்துவத் திட்டத்தின் ஊடாக தேயிலைத் தோட்டங்களுக்கு நீர் விநியோகம் செய்வதற்கான செலவில் 50 வீதத்தை அரசாங்கம் வழங்கும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மேலும், தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தை 1000 ரூபாவாக உயர்த்தும் நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் கேட்டறிந்தார். இது தற்போது நீதிமன்றத்தின் முன்னிலையில் உள்ள பிரச்சினை என்பதால் கருத்து வெளியிடுவதைத் தவிர்த்துள்ள போதிலும், தம்மைப் பொறுத்தவரை, இந்த நிலைமையைத் தீர்ப்பதற்கு கூட்டொப்பந்தம் வேண்டும் என்று அமைச்சர் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் புஷ்பகுமாரவின் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், பெருந்தோட்டக் கைத்தொழில்துறையின் அபிவிருத்திக்காக எந்தவொரு முறைகேடுகளையும் தடுப்பதற்கு தமது அமைச்சு முடிந்தளவு முயற்சியை எடுக்கும் என்றும், அத்துமீறி நடந்துகொள்ளும் எவரையும் பாதுகாக்க வேண்டிய தேவை இல்லையென்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இங்கு இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர முன்வைத்த கோரிக்கைக்கு அமைய, குருநாகல் மாவட்டத்தில் தென்னங்கன்று நாற்றுகளை உருவாக்கும் திட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரள முன்வைத்த முன்மொழிவின் பேரில் தேங்காய் எண்ணெய் அரைக்கும் இயந்திரங்கள் மற்றும் தேங்காய் துருவல் இயந்திரங்களை விநியோகிக்கும் திட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமண வீரசிங்கவின் வேண்டுகோளுக்கிணங்க, மாத்தறை நில்வள பிரதேசத்தில் 30 வருடங்களுக்கும் மேலாக அபிவிருத்தி செய்யப்படாமல் இருக்கும் நெல் வயல்களில் தென்னை உற்பத்தியை துரிதப்படுத்தும் திட்டம் போன்ற யோசனைகளுக்கும் அமைச்சுசார் ஆலோசனைக் குழு அங்கீகாரம் வழங்கியது.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜகத் புஷ்பகுமார, சிவஞானம் சிறிதரன், பழனி திகம்பரம், எம்.ராமேஸ்வரன், சம்பத் அத்துக்கோரள, வீரசுமண வீரசிங்க, அமரகீர்த்தி அத்துக்கோரள ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்தாவிடின் மூன்று மாத காலத்தில் நெருக்கடி ஏற்படலாம்

## இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு எச்சரிக்கை

குளிர்சாதனப் பெட்டி, சலவை இயந்திரம், குளிரூட்டி, மின்னழுத்தி உள்ளிட்ட அதிக மின்சாரம் செலவாகும் மின் இயந்திரங்களின் பாவனையை கட்டுப்படுத்திக் கொள்ளுமாறும்,



மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் எதிர்வரும் மூன்று மாத காலத்தின் பின்னர் மின் துண்டிப்பை ஏற்படுத்த வேண்டிவரும் எனவும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுத் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

இலங்கை மின்சார சபையானது எதிர்வரும் மூன்று மாத காலத்திற்கும் மின் துண்டிப்பை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி கோரியுள்ளது. இதனால், மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்தத் தவறும் பட்சத்தில் மின் விநியோகத்தை தடை செய்வதற்கான அவசியம் ஏற்படும்.

தற்போதுள்ள நிலையில், மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையான காலப்பகுதியில் மின்சாரத் தேவை அதிகமாக காணப்படுகிறது. இந்த காலப்பகுதியில் மின்சார பாவனையாளர்கள் மின்சாரத்தை குறைவாக பயன்படுத்திக் கொள்வது சிறந்தது.

குறிப்பாக குளிர்சாதனப் பெட்டி (ப்ரிட்ஜ்), சலவை இயந்திரம் (வொஷிங் மெஷின்), குளிரூட்டி (ஏ.சி.), மின் அழுத்தி (அயன் பொக்ஸ்) உள்ளிட்ட அதிக மின்சாரம் செலவாகும் மின் இயந்திரங்களின் பாவனையை கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். மேலும், தேவைக்கு அதிகமாக மின் விளக்குகளைப் பயன்படுத்த வேண்டாம்.

இவ்வாறு மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்தாவிட்டால் எதிர்வரும் மூன்று மாத காலத்தில் மின் துண்டிப்பை ஏற்படுத்த வேண்டி வரும்" என்றார்.

# செயலிழந்த மின்னுற்பத்தி நிலையம்; மீண்டும் மின்தடை ஏற்பட வாய்ப்பு

கெரவலப்பிட்டி மேற்கு முனைய மின் உற்பத்தி நிலையம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நேற்று முன்தினம் இரவு செயலிழந்தது.

அத்துடன், களனிதிஸ்ஸ செஜிட்ஸ் மின் உற்பத்தி நிலையத்தின் உற்பத்திப் பணிகளும் நேற்று முன்தினம் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மேற்கு முனை நிலையத்தின் 270 மெகாவோட்கள் தேசிய மின் உற்பத்தி நிலையத்திற்கு சேர்க்கப்பட்ட நிலையில், செஜிட்ஸ் மின் உற்பத்தி நிலையத்தின் 130 மெகாவோட் தேசிய கட்டமைப்பிற்குள் சேர்க்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மின் உற்பத்தி நிலையங்கள் செயலிழந்ததனைத் தொடர்ந்து நாட்டின் பல பகுதிகளில் மின்தடை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுவதாக பொதுப் பயன்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், செஜிட்ஸ் மின் உற்பத்தி நிலையம் நேற்றிரவு மீண்டும் வழமைக்கு திரும்பியுள்ளதுடன், கெரவலப்பிட்டிய மேற்கு முனைய மின் நிலையம் செயலற்ற நிலையில் உள்ளதென தெரிவிக்கப்படுகின்றது.

# வண்ணாத்திவில்லு வெடிபொருட்கள் களஞ்சிய விவகாரம்; ட்ரயல் அட்பார் நீதிபதிகள் முன்னிலையில் விசாரணை

## புத்தளம் மேல் நீதிமன்றில் மூவர் கொண்ட குழாம் விசாரிக்கும்

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் - வண்ணாத்திவில்லு, லக்டோ தோட்டத்தில், வெடிபொருட்களை சேகரித்து களஞ்சியப்படுத்தும் மற்றும் உற்பத்தி செய்யும் இடமொன்றினை முன்னெடுத்து சென்றமை தொடர்பில், தேசிய தௌஹீத் ஜமாஅத் எனும் தடைசெய்யப்பட்ட அமைப்பின் முக்கியஸ்தரான நௌபர் மௌலவி உள்ளிட்ட 6 பேருக்கு எதிராக சட்ட மா அதிபர் புத்தளம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கின் சாட்சி விசாரணைகளை எதிர்வரும் ஏப்ரல் 4 ஆம் திகதி ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகார வழக்கு புத்தளம் மேல் நீதிமன்றில் அமைக்கப்பட்டுள்ள மூவர் கொண்ட சிறப்பு ட்ரயல் அட்பார் நீதிபதிகள் குழாம் முன்னிலையில், கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது.

இதன்போதே இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. அத்துடன் தொடர்ச்சியாக இவ்வழக்கினை விசாரணை செய்ய திகதிகளைக் குறித்த சிறப்பு நீதிமன்றம், ஏப்ரல் 4 ஆம் திகதிக்கு மேலதிகமாக மே 30,31 ஆம் திகதிகளிலும், ஜூன் 1,7,9 ஆம் திகதிகளிலும் அவ்விசாரணைகளை முன்னெடுப்பது எனவும் தீர்மானித்தது.

இதற்காக 9, 11 முதல் 15 வரையிலான சாட்சியாளர்களுக்கு சாட்சியம் வழங்க மன்றில் ஆஜராகுமாறு அறிவித்தலும் முதற்கட்டமாக அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வழக்கில், மரணமடைந்துள்ள மொஹம்மட் சஹ்ரான் ஹாஷிம் மற்றும் அச்சு மொஹம்மது அஹமது ஹஸ்தூன் ஆகியோருடன் இணைந்து, வண்ணாத்திவில்லு பகுதியில் வெடிபொருட்களை சேகரிக்கும் மற்றும் தயாரிக்கும் இடமொன்றினை முன்னெடுத்து சென்றதாக பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் 6 பேருக்கும் எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதுடன், குற்றப் பகிர்வுப் பத்திரமும் கையளிக்கப்பட்டுள்ளது.

நாசகார அல்லது பயங்கரவாத செயற்பாடுகளை முன்னெடுக்கும் எண்ணத்துடன் வண்ணாத்திவில்லு பகுதியில் வெடிபொருட்களை சேகரிக்க சதி செய்தமை, யூரியா நைட்ரேட், நைட்ரிக் அசிட், தோட்டாக்கள் உள்ளிட்ட வெடிபொருட்களை சேகரித்தமை, வெடிபொருட்களை உற்பத்தி செய்தமை தொடர்பில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் 2 (1) பிரிவின் கீழும், 3 (2) ஆம் பிரிவின் கீழும் பிரதிவாதிகளுக்கு எதிராக விசேட குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வெடிபொருள் சேகரிப்பு, தயாரிப்பு, ஆயுத பயிற்சி உள்ளிட்டவற்றுக்கு உதவி ஒத்தாசை புரிந்தமை தொடர்பில் அனைத்து பிரதிவாதிகளுக்கும் எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இதனைவிட, முதல் பிரதிவாதியான அபூ தஹ்தா எனப்படும் மொஹம்மட் முபீஸ் மீது, பயங்கரவாதத்துக்கு நிதியளித்தலை தடுக்கும் சர்வதேச இணக்கப்பாட்டு சட்டத்தின் 3 ஆம் உறுப்புரையின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆயுத களஞ்சியத்துடன் கூடிய வண்ணாத்திவில்லு லக்டோ தோட்டத்தின் ஒரு பகுதியை ஆயுதப் பயிற்சிகளை முன்னெடுக்க அபூ உமர் எனும் சாதிக் அப்துல்லாஹ்வுக்கு வழங்கியமை தொடர்பில் அந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக குற்றப் பத்திரிகை தமிழ்மொழி மூலம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அதனுடன் கூடிய இணைப்புகள் தமிழ் மொழியில் வழங்கப்பட்டிருக்காத நிலையில், அவற்றைப் பெற்றுக்கொடுக்க வழக்குத் தொடுநர் சட்ட மா அதிபர் இணக்கம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் 1,2 ஆம் பிரதிவாதிகளுக்காக மட்டும் சட்டத்தரணிகளான மொஹம்மட் அக்ரம், நதீஹா அப்பாஸ், மொஹம்மட் சாஜித் ஆகியோருடன் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ருஷ்தி ஹபீப் அந்த இணைப்புக்களில் தமிழ் மொழி பெயர்ப்பை வழங்க சட்ட மா அதிபர் இணங்கிய போதிலும் சில மொழிபெயர்ப்புக்கள் இன்னும் கிடைக்கவில்லை என்று தெரிவித்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, வழக்குத் தொடுநர் சட்ட மா அதிபருக்காக ஆஜரான அரச சட்ட வாதி அவற்றை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்க முடியும் என தெரிவித்தார்.

அதன்படி அந்த மொழிபெயர்ப்பு ஆவணங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க நீதிமன்றம் சட்ட மா அதிபருக்கு அறிவித்தது.

இந்நிலையில், முதல் இரு பிரதிவாதிகளுக்காகவும் மன்றில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ருஷ்தி ஹபீப், அவர்கள் சார்பில் எழுத்து மூலம் பிணைக் கோரிக்கை சமர்ப்பணத்தினை முன் வைத்திருந்தார்.

நீண்டகாலமாக அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதன் பின்னணியில் அவர் இந்த கோரிக்கையை முன் வைத்தார்.

அது தொடர்பில் பிணைக் கோரிக்கை வாதத்தை சாட்சி விசாரணைகளின் ஆரம்பத்திலேயே முன்வைக்க தான் எதிர்ப்பார்ப்பதாகவும் அவர் கூறிய நிலையில், அதற்கு சட்ட மா அதிபர் தரப்பு பதில் வாதங்களை முன்வைக்க வேண்டியுள்ளதால் அது குறித்த நடவடிக்கைகள் ஏப்ரல் 4 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டன.

# இலங்கைத் தமிழர் நலன் சார்ந்த பிரச்சினைகளை தீர்க்குமாறு இந்தியா தொடர்ந்து வலியுறுத்துகிறது

## மத்திய வெளியுறவுத்துறை இணையமைச்சர் முரளிதரன்

இலங்கைத் தமிழர் நலன் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்க்குமாறு அந்நாட்டு அரசிடம் இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருவதாக மத்திய வெளியுறவுத்துறை இணையமைச்சர் வி.முரளிதரன் தெரிவித்துள்ளார். லோக்சபாவில் கேள்வி நேரத்தின்போது பேசியபோதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

இலங்கைத் தமிழர் நலனுக்கு இந்தியா தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. அங்கு தமிழர் உட்பட அனைத்து சமூக மக்களுக்கும் அமைதி, சமத்துவம், நீதி, கண்ணியமான வாழ்க்கை கிடைக்க வேண்டுமென, இலங்கை அரசிடம் இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது.இதை, ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின், 46ஆவது மாநாட்டிலும் இந்தியா எடுத்துரைத்துள்ளது. நியாயமான அதிகாரப் பகிர்வு உட்பட, இலங்கைத் தமிழர்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்தால் ஒருங்கிணைந்த இலங்கை



உருவாகும் என அந்நாட்டு அரசிடம் இந்தியா தெரிவித்துள்ளது. தமிழ் சமூகத்தின் நியாயமான குரலுக்கு மதிப்பளிப்பது, ஒட்டுமொத்த இலங்கையின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்தியா நம்புகிறது. பலமுறை நடந்த இரு தரப்பு பேச்சுவார்த்தைகளிலும் இந்தக் கருத்தை இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. தமிழர்கள் வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஏராளமான அடிப்படை கட்டமைப்பு வசதித் திட்டங்களை இந்தியா மேற்கொண்டு வருகிறது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# புதிய வகை வைரஸ் காய்ச்சல் பரவுகிறது

(உக்குவளை நிருபர் -)

நாட்டின் பல இடங்களிலும் அண்மைக்காலமாக ஒருவகை வைரஸ் காய்ச்சல் பரவிவருவதைக் காணமுடிகிறது. சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை இவ்வைரஸ் காய்ச்சல் தொற்றுக்கு ஆளாகிவருகிவதுடன், வயதானவர்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

உடற்சோர்வு மற்றும் குளிரோடு ஆரம்பமாகும் இவ்வைரஸ் காய்ச்சல் சுமார் 4 அல்லது 5 நாட்கள் இருப்பதுடன், சற்று சளியுடன் கூடிய தும்மலும் காணப்படுகிறது. அத்துடன் உடம்பு மூட்டுக்களில் சிறிது வலியும் காணப்படுகின்றது. மேலும்,வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பால் இவ்வைரஸ் காய்ச்சலுக்கு அவர்களால் சிகிச்சைபெறமுடியாத நிலையேற்பட்டுள்ளது. மேலும், உடனடி நிவாரணம் பெறக்கூடிய பெனடோல் மற்றும் பெரசிட்டமோல் மருந்துகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.

தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டவர்களுக்கும் இக்காய்ச்சல் காணப்படுவதால் முகத்துக்கு மூலிகை ஆவிபிடித்தல், இயன்றவரை மூலிகைக் கஷாயம் வைத்துப் பருகுதல் என இயன்றவரை சுகாதாரப்படி நடந்து கொள்வதாகவும் அறியமுடிகிறது. இவ்வைரஸ் காய்ச்சல் பாதிப்பை ஏற்படுத்தாத சாதாரணமானதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# உயர்தர பரீட்சைகளை முன்னிட்டு புதிய வழிகாட்டல்கள் வெளியீடு

இம்முறை க.பொ.த. உயர்தர பரீட்சைகளை முன்னிட்டு புதிய வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு நாளுக்கான கால அட்டவணையை கருத்திற்கொண்டு புதிய வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன தெரிவித்தார்.

அனைத்துப் பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கும் இந்த வழிகாட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளன. பரீட்சை நாளில் வழங்கப்பட வேண்டிய வினாத்தாள்கள், அவற்றின் பகுதிகள், அதற்காக வழங்கப்பட வேண்டிய காலம் உள்ளிட்டவை அதில் அடங்குகின்றன.

அத்துடன் பரீட்சை குறித்து மாணவர்களுக்கும் பொறுப்புள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வினாத்தாளுக்கு 3 மணித்தியாலங்கள் வழங்கப்பட்டிருப்பின், அந்த காலத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளுமாறும் மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இதேவேளை, வைத்தியசாலையுடன் இணைந்த பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்றும் உயர்தர மாணவர்கள், அன்ரிஜன் அல்லது பி.சி.ஆர். பரிசோதனை பெற்று 7 நாட்களின் பின்னர் வீடுகளுக்குச் சென்று பரீட்சைக்குத் தோற்ற முடியும் என குடும்ப சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் டொக்டர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்தார்.

# பாணந்துறை கடற்கரையில் வீசப்பட்டிருந்த கடிதங்கள்

## விசாரணை ஆரம்பம்

பாணந்துறை பிரதான தபால் அலுவலகத்தினால் விநியோகிக்கப்படவிருந்த சுமார் 99 கடிதங்கள் பாணந்துறை, பிங்வத்த கடற்கரையில் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தபால் திணைக்களத்தின் விசாரணை பிரிவும் இது குறித்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தபால் திணைக்களம் குறிப்பிட்டது.

பாணந்துறை பிங்வத்த கடற்கரையில் கடிதங்கள் கிடப்பதாக பொலிஸாருக்கு நேற்று முன்தினம் தகவல் கிடைத்ததை அடுத்து பொலிஸார் தபால் அலுவலக அதிகாரிகளிடம் வாக்குமூலம் பதிவுசெய்ததாக தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்தார்.

தபால் ஊழியர் ஒருவராலேயே கடிதங்கள் காணாமலாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், குறித்த கடிதங்களை பொலிஸாரே விநியோகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூர் வளர்ச்சி ஆதரவு திட்டத்தில் கல்முனை முற்றாக புறக்கணிப்பு

## நீதி கோருகிறார் மாநகர சபை உறுப்பினர் அப்துல் மனாப்

(நூருல் ஹுதா உமர்)



மாகாண சபையினால் உள்ளூராட்சி மன்றங்களை பலப்படுத்தும் நோக்கில் அறிமுகம் செய்யப்பட்ட உள்ளூர் வளர்ச்சி ஆதரவு (Local Development Support Project -LDSP) திட்டத்தில் கல்முனை முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளது. திட்டமிடலின்போது உள்வாங்கப்பட்ட கல்முனை, திட்டம் அமுல்படுத்தப்பட்டபோது புறக்கணிக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் தலையிடுமாறு பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர் உட்பட மாநகரத்தை ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சகல உறுப்பினர்களிடமும் தனிப்பட்ட முறையிலும் பேசினேன். எல்லோரும் மௌனமாக இருக்கிறார்கள். மாநகர சபையினால் வரி அறவிடுவதில் மட்டுமே கல்முனைக்கு முன்னுரிமையளிக்கப்படுகிறது. அபிவிருத்தி சார்ந்த எல்லா விடயங்களிலும் கல்முனை புறக்கணிக்கப்படுவது வருத்தமளிக்கிறது - என கல்முனை மாநகர சபை உறுப்பினர் எம்.எச்.எம். அப்துல் மனாப் தெரிவித்தார்.

அவரது காரியாலயத்தில் ஊடகவியலாளர்களை நேற்று (13) சந்தித்துப் பேசிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

கல்முனை மாநகர சபையினால் திட்டத்தின் ஆரம்பத்தில் சாய்ந்தமருதுக்கு பாலமொன்றும் மருதமுனை மற்றும் கல்முனைக்கு தலா ஒரு கலாசார மண்டபமும் தமிழ் மக்களுக்கான ஒதுக்கீட்டில் வீதி அபிவிருத்திக்குமென கலந்துரையாடல்கள் நடைபெற்று தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் சாய்ந்தமருது, மருதமுனை ஆகிய பிரதேசங்களின் முதல்கட்ட வேலைத்திட்டம் ஆரம்பமாகியுள்ள நிலையில், கல்முனை முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர ஏனைய பிரதேச மக்களின் ஒற்றுகூடல்கள், நிகழ்வுகளை நடத்த வாசிகசாலை மண்டபம், மக்கள் மண்டபம் என்றும் இன்னோரன்ன பெயர்களிலும் பொது மற்றும் தனியார் மண்டபங்கள் பல்வேறு இடங்களில் உள்ளன. ஆனால், கல்முனையில் ஆபத்திற்கு ஒதுங்கக்கூட ஓர் இடமில்லை என்பதை எல்லோரும் அறிவர். இறுதியாக பிரதேச செயலக நில ஒதுக்கீட்டில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக அது மருதமுனைக்கு கைநழுவிப் போயுள்ளது. 2021இல் மீண்டும் அந்தத் திட்டம் அமுல்படுத்தப்பட்டபோதும் கல்முனை புறக்கணிக்கப்பட்டுள்ளது. கல்முனை மாநகரில் கலாசார மண்டபமொன்றை கட்ட கல்முனையைச் சேர்ந்த சகல மாநகர சபை உறுப்பினர்களும் கலந்துரையாடி கிரீன்பீல்ட் பிரதேசத்தில் அமைக்க திட்டமிட்டோம். அந்தத் திட்டங்களில் தொடர்ச்சியாக கல்முனை புறக்கணிக்கப்பட்டு வருவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக உள்ளது.

இது தொடர்பில் கடந்த 2021 டிசம்பர் மாத மாநகர சபை அமர்வில் கேள்வியெழுப்பினேன். 2022இல் கல்முனைக்கும் கிடைக்க நடவடிக்கை எடுப்பதாக கூறப்பட்டது. ஆனால், இப்போது ஏனைய மூன்று ஊர்களுக்கும் வேலைத்திட்டத்தின் ஆரம்ப வேலைகள் நடக்கின்றன. கல்முனையில் எதுவும் நடக்கவில்லை. மீண்டும் புறக்கணிக்கப்படுகிறது. இந்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி கல்முனைக்கு நீதி பெற்றுத்தர முன்வர வேண்டும் - என்றார்.

# அம்பாறையில் அடைமழை காரணமாக அறுவடை தாமதம் - விவசாயிகள் கவலை



(நற்பிட்டிமுனை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் அறுவடை காலத்தில் பெய்துவரும் அடை'மழை காரணமாக சடயந்தலாவை விவசாயக் கண்ட வயல்நிலங்கள் முற்றாக இதுவரை அறுவடை செய்ய முடியாதிருப்பது குறித்து விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேல்கண்டம், நடுக்கண்டம், கட்டக்காடு, கிழக்கண்டம் பள்ளக்காடு பிரதேசங்களிலுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல்நிலங்களே இதில் அடங்குவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

ஏக்கரொன்றுக்கு பத்து தொடக்கம் பதினைந்து மூடைகளே விளைவதாகக் குறிப்பிடும் விவசாயிகள் தனியார் கடந்த போகத்தைவிட இவ்வருடம் கூடிய விலை கொடுத்து நெல்லை வாங்குவதாகவும் அரசாங்கம் நெல்லை உத்தரவாத விலையில் கொள்வனவு செய்வதாக வெளிவந்த செய்தி ஆறுதல் அளிப்பதாகவும் குறிப்பிடுகின்றனர்.


66 கிலோ கொண்ட சிவப்பு நெல் ஆறாயிரம் ரூபாவுக்கும் வெள்ளை நெல் ஐயாயிரம் ரூபாவுக்கும் நன்றாக காய்ந்த நெல் ஆறாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கும் தனியாரால் கொள்வனவு செய்யப்படுவதாகவும் மேலும் குறிப்பிடுகின்னர்.

குத்தகைக்கு காணிபெற்று வேளாண்மை செய்வோர் பெரும்போகத்தில் அதிகரித்த விலைக்கு யூரியா பெற்று வயல்களுக்கு இட்டதனால் அடுத்த சிறுபோக குத்தகைக்கு காணி பெறுவதில் ஆர்வம் செலுத்தாத நிலையில் காணப்படுகின்றனர்.

இதேவேளை, சடயந்தளாவ, சவளக்கடை விவசாயக் கண்டங்களில் நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகள் பலர் தமக்குரிய சேதனப் பசளைகளுக்குரிய அரச மானியம் இதுவரை வழங்கப்படாதது குறித்து கவலையும் தெரிவிக்கின்றனர்.

ஆண்டாண்டுகாலமாக அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக அறுவடை காலத்தில் அறுவடையின்போது மழை பெய்வதும் ஓய்வதும் இடம்பெற்று வருவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

### போடியார் புலம்பல்!



**புலிகளை தோற்கடித்தார் மகிந்த.. கொரோனாவை தடுத்தார் கோட்டா.. இப்படி புகழந்து பேசினார் அமைச்சர் ஜோன்சன். சரிடா தம்பி அப்ப மக்கள பட்டினி போட்டு சாகடித்தார் பசீல் .. இதயும் ஒள்ளுப்பம் சொல்லு பார்பம்.. அண்ணன் தம்பிமார் ஆட்சிலதாண்டா தம்பி சனமெல்லாம் திண்டாடுதுகள். கண்ண கசக்கி பார்த்து பொய்சொல்லோணும் அமைச்சரே!**

# ஏறாவூர் இலங்கை போக்குவரத்துச் சபையில் புதிய கணக்காளர் அலுவலக திறப்புவிழா





(வாழைச்சேனை நிருபர்)

சுமார் 24 வருடகாலமாக இயங்கிவரும் ஏறாவூர் இ.போ.ச. போக்குவரத்துச்சாலையில் புதிதாக அமைக்கப்பட்ட தனியான கணக்காளர் அலுவலகத் திறப்புவிழா சம்பிரதாயபூர்வமாக நடைபெற்றது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் கிழக்குப் பிராந்திய நலன்புரி பிரிவிற்கான மனித வள பிரதி முகாமையாளர் சேனநாயக்க சுமித் இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் ஏறாவூர்ச்சாலை 1998ஆம் ஆண்டில் உப சாலையாகத் திறக்கப்பட்ட காலம் தொடக்கம் தற்போதுவரை மட்டக்களப்பு மற்றும் வாழைச்சேனை ஆகிய சாலைகளினாலேயே நிதிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் ஊழியர்கள் தமக்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களையும் தாமதத்தினையும் எதிர்நோக்கி வந்ததாக சுட்டிக்காட்டப்பட்டது.

இதையடுத்து ஊழியர்களது நலன்களைக் கருத்திற்கொண்டு தற்போதைய சாலை முகாமையாளர் மேற்கொண்ட அயராத முயற்சியின் பயனாக தனியான கணக்காளர் அலுவலகம் ஒன்றைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர்ச்சாலை முகாமையாளர் எம்.எம்.சைனி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிராந்திய மனித வள பிரதி முகாமையாளர் சன்ஜீவ உமேஷ், நிதி முகாமையாளர் சமன் ரத்னாயக்க, செயலாற்று முகாமையாளர் எம்.உவைஸ் மற்றும் பொதுஜன பெரமுன தொழிற்சங்க இணைப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின்போது அதிதிகளுக்கு நினைவுச்சின்னங்கள் கையளிக்கப்பட்டன. ஏறாவூர்ச்சாலை கிழக்குப் பிராந்தியத்தில் மிக நீண்டகாலமாக தொடர்ச்சியாக இலாபத்தில் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பட்டிருப்பு தேர்தல் தொகுதிக்குரிய அமைப்பாளர் நியமனம்



(மட்டக்களப்பு நிருபர்)

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பட்டிருப்பு தேர்தல் தொகுதிக்குரிய அமைப்பாளராக முன்னாள் பிரதி அமைச்சர் சோமசுந்தரம் கணேசமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார். அக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவினால் கொழும்பில் அமைந்துள்ள கட்சித் தலைமைக் காரியாலயத்தில் வைத்து இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.


ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் யாப்பின் 62ஆவது சரத்தின் மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2022ஆம் ஆண்டுக்கான பட்டிருப்பு தேர்தல் பிரிவின் அமைப்பாளராக நீங்கள் நியமிக்கப்பட்டுள்ளீர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதன்படி, கட்சி யாப்பின் 6.9 முதல் 6.16 வரையிலான பிரிவுகள் மூலம் தொகுதி அமைப்பாளராக உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கான தலைமையையும் பொறுப்பையும் உங்களுக்கு வழங்குகிறது. (அந்த ஷரத்துகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.)

மேலும் இந்த நியமனத்தை நீங்கள் ஏற்றுக் கொண்டதாக கட்சியின் பொதுச் செயலாளருக்கு எழுத்துபூர்வமாக தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என அவருக்கு வழங்கப்பட்டுள்ள நியமனக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அடைமழையால் குளங்களில் நீர்மட்டம் உயர்வு



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக பலத்த மழை பெய்து வருகின்றது. இந்நிலையில் மாவட்டத்தின் சிறிய மற்றும் பெரிய குளங்களின் நீர் மட்டங்களும் அதிகரித்துள்ளதாக அக்குளங்களுக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உன்னிச்சைக் குளத்தின் நீர்மட்டம் 32 அடி 10 அங்குலம், உறகாமம் குளத்தின் நீர்மட்டம் 14 அடி 11 அங்குலம், வாகனேரிக்குளத்தின் நீர்மட்டம் 18 அடி 9 அங்குலம், கட்டுமுறிவுக்குளத்தின் நீர்மட்டம் 11 அடி 8 அங்குலம், அக்குளத்தில் 2 அங்குல மேலதிக நீர் வெளியேற்றப்படுகின்றது, கித்துள்வெவ குளத்தின் நீர்மட்டம் 8 அடி 5 அங்குலம், வெலிக்காக்கண்டிய குளத்தின் நீர்மட்டம் 15 அடி 5 அங்குலம், புனானை அணைக்கட்டு 7 அடி 9 அங்குலமாக நீர்மட்டம் உயர்ந்துள்ளதாக பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிவரையில் கடந்த 24 மணித்தியாலங்களில் உன்னிச்சைப் பகுதியில் 39 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், உறுகாமம் பகுதியில் 50 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், வாகனேரி பகுதியில் 116.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், பதிவாகியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

# கொரோனா தொற்று எம்மைவிட்டு இன்னும் பிரியவில்லை; மூன்றாவது தடுப்பூசியை அனைவரும் பெற்றுக்கொள்ளவும்

## கிழக்கு சுகாதாரப் பணிப்பாளர் தௌபீக் தெரிவிப்பு







(பொலிவேரியன் நிருபர்)

நாட்டில் கொவிட் தொற்று அதிகரித்துக்கொண்டே செல்கிறது. கொவிட்டானது எம்மைவிட்டு இன்னும் பிரியவில்லை. இதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அறிவுறுத்தப்படுகின்ற மூன்றாவது டோஸ் தடுப்பூசியை அனைவரும் செலுத்துவதைத் தவிர வேறு வழியில்லை - என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் டாக்டர் ஜெமில் ஞாபகார்த்த வைத்தியசாலையின் மற்றுமொரு கிளையினைத் திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்,

இன்றைய காலகட்டத்தில் எமக்கு இந்த கொவிட் நோய் பல விதத்திலும் உருமாறி திரிபுமாறி எம்மை பயமுறுத்திக்கொண்டிருக்கின்றது. கொவிட் எம்மை விட்டு இன்னும் பிரியவில்லை. துக்ககரமான செய்தி, நாட்டில் கொவிட் அதிகரித்துக்கொண்டே போகிறது. மரணங்களின் அளவு ஓரளவு அதிகரித்திருக்கிறது.

ஆனால், இதற்கு நாங்கள் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அறிவுறுத்தப்படுகின்ற தடுப்பூசி செலுத்துவதைத் தவிர, வேறு வழியில்லை. அதற்காக எமது அரசாங்கம், எமது ஜனாதிபதி சிறப்பாக திட்டமிட்டு தடுப்பூசியை எடுப்பதற்கும் போடுவதற்கும் சிறந்த முயற்சிகளைச் செய்தார்கள். அந்த முறையில் தடுப்பூசியை ஆரம்பத்திலே எல்லோரும் போட்டோம். ஆனால், இன்று போடுகின்ற வேகமும் அதனுடைய பயமும் அச்சமும் அதிகரித்திருக்கின்றன. அதை மறந்து இந்த மூன்றாவது டோஸ் பூஸ்டர் தடுப்பூசியை எல்லோரும் எடுக்கவேண்டும். ஆகவே, இளம் சிறார்கள் அதாவது, 12 வயதுக்கு மேற்பட்ட எல்லா வயதினருக்கும் இந்த பைசர் தடுப்பூசி வழங்கப்படுகின்றது. இதை நீங்கள் கட்டாயம் எடுக்கவேண்டும். இந்த நோயிலிருந்து நாம் மீள்வதற்கும் ஓரளவு எம்மைக் காப்பதற்கும் அதைத் தவிர வேறு வழியில்லை.

பூஸ்டர் போட்டவர்கள் நிறையப் பேர் அன்ரிஜன் பொசிடிவ்வாக இருந்தாலும் அதனுடைய தாக்கங்களும் அவர்களுக்கு ஏற்படுகின்ற நோய் அறிகுறிகளும் மிகவும் குறைவு. இதனை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் என்ற முறையில் அதை வலியுறுத்துவது எனது கடமையாகும். அத்தோடு, நாம் அணியும் முகக்கவசமும் பிரதானமான ஒன்று. நம் எல்லோருடைய முகக்கவசமும் வாய்க்குக் கீழ் இருக்கின்றன. உண்மையில் சாப்பிடுகையில் மாத்திரம்தான் முகக்கவசத்தை திறக்க வேண்டும். நாம் அதை மறந்துவிட்டோம். ஆகவே, ஆகக்குறைந்தது நீங்கள் சனநெரிசலான இடங்கள், திருமண வீடுகள், மரண வீடுகள், இவ்வாறான வைபவங்களுக்கு செல்லும்போது, மக்களுடன் பழகும்போது முகக்கவசம் கட்டாயம் அணிய மறக்காதீர்கள். ஆனால், பொலிஸுக்குப் பயந்து, பாதையிலே போகும் போதும், சைக்கிள் மற்றும் மோட்டார்சைக்கிளில் போகும்போதும் இதை அணிவதை நான் பார்த்திருக்கிறேன். எம்மவர்கள் போய் ஆக்களோடு சேரும்போது முகக்கவசத்தை கழற்றி விடுகின்றனர். அதில் எந்தப் பிரயோசனமும் இல்லை. ஆகவே, அந்தவிடயத்தில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

ஆகவே, நாங்கள் எல்லோரும் ஊர் பேதங்களை மறந்து, பிரதேச வாதங்களை மறந்து இங்கு இருக்கின்ற எல்லா வைத்தியசாலைகளும் ஒரு வைத்தியசாலைபோன்று இயங்க வேண்டும். அப்போதுதான் எமது மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க முடியும். ஆகவே, நாங்கள் அவற்றிலும் கண்ணாக இருக்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

# சாய்ந்தமருதில் அஷ்ரப் ஞாபகார்த்த புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு



(பாலமுனை நிருபர்)


இலங்கை துறைமுக அதிகாரசபையின் முஸ்லிம் மஜ்லிஸின் ஏற்பாட்டில் மர்ஹும் அஷ்ரப் ஞாபகார்த்த புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு மற்றும் ஓய்வுபெற்ற இலங்கை துறைமுக அதிகார சபையின் உத்தியோகத்தர்களை கௌரவிக்கும் நிகழ்வு என்பன கடந்த சனிக்கிழமை சாய்ந்தமருது லீமெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றன.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் முஸ்லிம் மஜ்லிஸின் தலைவரும் பிரதம பொறியிலாளருமான ஏ.எம்.நவ்பர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அதிதிகளாக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை, கலாசார பீடாதிபதி கலாநிதி எம்.எம்.பாசில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் முன்னாள் பதிவாளர் ஏ.எல்.ஜவ்பர் சாதிக், முன்னாள் புனர்வாழ்வு அமைச்சின் இணைப்பாளர் சட்டத்தரணி எஸ்.எம்.அப்துல்லா, முஸ்லிம் மஜ்லிஸ் செயலாளர் சட்டத்தரணி எம்.ஆர்.எம்.றம்சீன் உட்பட முஸ்லிம் மஜ்லிஸின் உறுப்பினர்கள் உயர்பீட உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது இலங்கை துறைமுக அதிகார சபையின் முஸ்லிம் மஜ்லிஸின் உப பொருளாளரும் ஓய்வுபெற்ற துறைமுக அதிகார சபையின் பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தருமான ஏ.எல்.எம்.இஸ்மாயிலின் சிறந்த சேவையினை பாராட்டி கௌரவிக்கப்பட்டதுடன், கடந்த ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் அனைத்து பாடங்களிலும் திறமைச் சித்திபெற்ற மாணவர்களுக்கு மர்ஹும் அஷ்ரப் ஞாபகார்த்த புலமைப்பரிசில் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# அடைமழை காரணமாக திருமலையில் தாழ்நிலப் பிரதேசங்கள் நீரில் மூழ்கின

## முறையற்ற வடிகான் பராமரிப்பே காரணமென பொதுமக்கள் விசனம்


(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை நகரை அண்டிய பெரும்பாலான தாழ்நிலப் பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் கடந்த இரண்டு தினங்களுக்கு அதிகமாக தொடர்ச்சியாக பெய்துவந்த அடைமழை காரணமாக திருகோணமலை நகரை அண்டிய பெரும்பாலான தாழ்நிலப் பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அதன்படி திருகோணமலை நகரை அண்டிய துளசிபுரம், அலஸ் தோட்டம், முகம்மதியா நகர் மற்றும் சிறிமாபுர போன்ற பிரதேசங்கள் அரை அடிக்கு மேல் மழைநீர் தேங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு மழை நீர் தேங்கியுள்ள பிரதேசங்களில் மக்கள் தமது வீடுகளிலேயே பாதுகாப்பாக இருப்பதாகவும் குறித்த பிரதேசங்களில் சுமார் 150இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது

மேலும், திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட்டை, கிண்ணியா மற்றும் மூதூர் பிரதேசத்தின் பெரும்பாலான தாழ்நிலப் பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் நேற்று முன்தினம் இரவுமுதல் தாம் அன்றாட வேலைகளை செய்ய முடியாது உறங்குவதற்கு மாற்றுவழி இல்லாமல் பெரும் அவஸ்தைப்படுவதாகவும் பிரதேச மக்கள் கவலை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறிருக்கையில், உரிய முறையில் வடிகான்கள் அமைக்கப்படாமையினாலும் அமைக்கப்பட்ட வடிகான்கள் உரிய முறையில் பராமரிப்பு இல்லாமையால் தாம் ஒவ்வொரு மழை காலங்களிலும் பெரும் அவஸ்தைப்படுவதாகவும் உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்துமாறும் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# நாற்றுமேடை உற்பத்தியாளர்களுக்கு அட்டாளைச்சேனையில் செயலமர்வு





(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

சௌபாக்கியா தேசிய விவசாய வீட்டுத்தோட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின்கீழ், அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட நாற்றுமேடை உற்பத்தியாளர்களுக்கான பயிற்சி செயலமர்வு உதவி பிரதேச செயலாளர் எவ்.நஹீஜா முஸாபிர் தலைமையில் அட்டாளைச்சேனை மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் எம்.ஜே.எம்.நிஹ்மத்துல்லாஹ், அம்பாறை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சனீர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியதுடன், வளவியலாளர்களாக அம்பாறை மாவட்ட கரையோர விவசாய பாடவிதான ஆசிரியர் என்.சுந்தரமூர்த்தி, அட்டாளைச்சேனை விவசாய விரிவாக்கல் நிலையத்தின் விவசாயப் போதனாசிரியர் ஏ.எச்.ஏ.முபாறக் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களான எச்.எம்.நாஸீக் அஹமட், எஸ்.ரேணுக்கா, விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.எஸ்.சபானா, வி.விஸ்வானந்தி, எம்.ஏ.சிபானா பானு மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

# தேசிய ஒலிம்பிக் குழுவின் அங்கத்தவராக ஆசிரியர் அலியார் பைசர் நியமனம்



(மாளிகைக்காடு நிருபர்)

தேசிய ஒலிம்பிக் குழுவின் அங்கத்தவராக சாய்ந்தமருதைச் சேர்ந்த உடற்கல்வி ஆசிரியர் அலியார் பைசர் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதத்தினை தேசிய ஒலிம்பிக் குழு 01.02.2022 திகதியிட்டு அனுப்பிவைத்துள்ளது. விளையாட்டுத்துறையின் பல்வேறு பிரிவுகளிலும் முதன்மை வகிக்கும் இவர், அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரியில் உடற்கல்வி ஆசிரியராக பயிற்சிபெற்று, கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றியதுடன், தற்பொழுது நிந்தவூர் அல்-அஸ்ரக் தேசிய பாடசாலையில் உடற்கல்வி ஆசிரியராக சேவையாற்றி வருகிறார்.

அலியார் பைஸர் ஆசிரியர், இலங்கையின் தேசிய விளையாட்டுச் சங்கங்களையும், சம்மேளனங்களையும் ஆளும் நிறுவனமானதும் சர்வதேச ஒலிம்பிக் கவுன்சிலின் நேரடி பிரதிநிதியாகவும் செயற்படும் தேசிய ஒலிம்பிக் கவுன்சிலின் அதியுயர் குழுவான கல்விக்குழு உறுப்பினராக 2022/ 2026 நான்கு ஆண்டுகள் காலப்பகுதிக்கு தெரிவுசெய்யப்பட்டு கிழக்கு மாகாணத்திற்கும் கல்முனை பிரதேசத்திற்கும் வரலாற்று தடயத்தைப் பதித்து பெருமை சேர்த்துள்ளார்.

விளையாட்டுத்துறையில் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி அதிகமான வீரர்களுக்கு விளையாட்டுத்துறைசார் தொழில் தகைமைகளை ஏற்படுத்தி தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் வாய்ப்புகளைப் பெற வழிகாட்டியாகவும் திகழ்ந்துள்ள இவர், கிழக்கு மாகாணத்தில் பல விளையாட்டு ஆளுமைகளை உருவாக்கியுள்ளார். 2020ஆம் ஆண்டு சர்வதேச ஒலிம்பிக் கவுன்சிலினால் நடத்தப்பட்ட தேசிய அணி முகாமையாளர்களுக்கான விசேட விளையாட்டு நிர்வாக பயிற்சிநெறியில் உயர்தரம் சித்தியடைந்தது மட்டுமல்லாது IOC யின் Athletes 365 பாடநெறிகள் இரண்டிலும் அதியுயர் சித்தியடைந்துள்ளார். இதன் மூலம் விளையாட்டுத்துறையில் சிறந்த நிர்வாக அனுபவத்தைக் கொண்டுள்ளார்.


குறிப்பாக, இவர் பட்மின்டன், காற்பந்து, தடகளம் போன்ற துறையில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக தடம்பதித்துள்ளார். கிரிக்கெட்டில் பயிற்றுவிப்பு, நடுவர், புள்ளிக்கணிப்பாளர் ஆகிய மூன்று துறைகளிலும் சித்தியடைந்து தகைமை படைத்துள்ளார். 2012இல் ஈரானில் நடைபெற்ற U-19 ஆசிய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு மத்தியஸ்தராக கடமையாற்றியதுடன், சிறந்த நடுவர் என்ற விருதையும் பெற்றுள்ளார்.

அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் செயலாளரான இவர், முன்னாள் இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கத்தின் மத்தியஸ்தர் குழு தவிசாளராகவும் இணைப்பாளராகவும் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் மட்டு/அம்பாறை மாவட்ட இணைப்பாளராகவும் பயிற்றுவிப்பாளராகவும் கல்வி அமைச்சின் கல்முனை வலய இணைப்பாளராகவும் இருந்துள்ளார். இவர் கிழக்கு மாகாணத்தில் கிண்ணியா, மூதூர், ஓட்டமாவடி, கல்குடா, காத்தான்குடி மற்றும் அக்கரைப்பற்று உதைபந்தாட்ட லீக்குகள் உருவாக்குவதற்கு தீவிரமாக இயங்கியவராவார். கல்முனை ஸாஹிராக் கல்லூரியில் பல விளையாட்டுகளை புதிதாக அறிமுகம்செய்து இப்பாடசாலையை தேசிய மட்ட போட்டிகளில் வெற்றிகளையும் சாதனைகளையும் ஏற்படுத்தி இப்பாடசாலை பெட்மின்டன் அணியை மலேசியாவுக்கு அழைத்துச்சென்று வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

இவர், இலங்கை பெட்மின்டன் சங்கத்தின் உதவிப் பொதுச்செயலாளரும், கிழக்கு மாகாண பெட்மின்டன் சங்கத்தின் ஸ்தாபகராகவும், செயலாளராகவும் சாய்ந்தமருது ஹொலி ஹீரோஸ் விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபக பொதுச் செயலாளரும் கல்முனை ஸாஹிராக் கல்லூரியின் பழைய மாணவரும் ஆவார். பிரதேச முக்கிய அமைப்புகளின் நிர்வாகியாகவும் செயற்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# திருமலையில் காட்டு யானைகள் அட்டகாசம்



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை - கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வானாறு, ஆயிலியடி கிராமங்களுக்குள் நேற்று முன்தினம் (12) இரவு புகுந்த காட்டு யானைகள் பல சேதங்களை ஏற்படுத்தியுள்ளது.

சுமார் 3 - 5 யானைகள் ஊருக்குள் புகுந்து பேக்கரி உற்பத்திப் பொருட்களை உண்டதோடு, அதன் உபகரணங்களை வெளியில் எடுத்து வீசியுள்ளது. இதனால் பேக்கரி உரிமையாளர்கள் தாம் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றார்.


இதனையடுத்து 15இற்கும் மேற்பட்ட தென்னை மரங்களை துவம்சம் செய்துள்ளதாக அதன் உரிமையாளர் தெரிவித்தார்.

இதேவேளை, இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுமார் 300 ஏக்கருக்கும் மேற்பட்ட வேளாண்மைச் செய்கை காணிக்குள் புகுந்து சுமார் இரண்டு ஏக்கருக்கும் மேற்பட்ட நெல்லை அழித்துள்ளதாக விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன், கடை ஒன்றுக்குள் வைக்கப்பட்டுள்ள வாழைக்குலைகளை சாப்பிட்டுள்ளதோடு, சிறு சேதத்தையும் ஏற்படுத்தியுள்ளதாக கடைக்காரர் கூறினார்.

இரவில் தூங்கமுடியாது பயமாக உள்ளதாகவும், யானையைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# அம்பாறை மாவட்டத்தில் பெய்துவரும் அடைமழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(பாலமுனை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக பெய்துவரும் அடைமழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், உள் வீதிகளில் நீர் தேங்கி நிற்பதால் போக்குவரத்து செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாமுனை, திராய்க்கேணி, உதுமாபுரம் உள்ளிட்ட தாழ்நிலப் பிரதேசங்களிலுள்ள வீதிகள் நீரில் மூழ்கி காணப்படுவதால் அப்பிரதேசத்தில் வசித்துவருகின்றவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

தொடராக பெய்துவரும் அடைமழையினால் தாழ்நிலப் பிரதேசங்களில் வெள்ள அபாயமும் ஏற்பட்டுள்ளதோடு, மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது க.பொ.த. உயர்தரப் பரீட்சை நடைபெறும் காலம் என்பதால் மாணவர்கள் பல சிரமங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

மீன்பிடித் தொழிலும் வெகுவாக பாதிப்படைந்துள்ளது. தொடர் மழையினால் அறுவடைக்குத் தயார் நிலையிலுள்ள வயல்கள் அறுவடை செய்யமுடியாமல் திண்டாடுகின்ற நிலை காணப்படுகின்றது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மழையுடன் கூடிய காலநிலை தொடருமானால் தாழ்நிலப் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் இடம்பெயரக் கூடிய சூழ்நிலை காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# முன்பள்ளி மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு திருமலையில்




(கிண்ணியா நிருபர்)

திருகோணமலையில் இயங்கிவரும் சக்ஸஸ் முன்பள்ளியின் இவ்வருடத்திற்கான (2022) ஆரம்ப நிகழ்வான, புதிய பிள்ளைகளை வரவேற்கும் நிகழ்வு முன்பள்ளி பாலர் பாடசாலையின் ஆசிரியை என்.ததேசினி தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பாலர் பாடசாலை மாணவர்கள் இதன்போது உற்சாக வரவேற்பளிக்கப்பட்டதுடன், கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

குறித்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பாலர் பாடசாலை பணியக அதிகாரி ஷர்மிலா, முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் அமுதியா மற்றும் முன்பள்ளி பாடசாலை அதிபர் எம்.ஏ.சாசியா, பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# திருமலையில் ஒன்றரை கிலோ கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

(பதுர்தீன் சியானா)

திருகோணமலை - கப்பல்துறை பகுதியில் கேரளா கஞ்சா ஒரு கிலோ 680 கிராமுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (12) இடம்பெற்றுள்ளது.

சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் விற்பனைசெய்வதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தபோதே கந்தளாய் - சூரியபுர விசேட பொலிஸ் அதிரடிப் படையினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து சோதனையிட்டபோது, குறித்த நபரிடமிருந்து கஞ்சா கைப்பற்றப்பட்டதாகவும் விசேட பொலிஸ் அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் திருகோணமலை - கப்பல்துறை பகுதியைச் சேர்ந்த டேவிட் சுசந்த குமார (38 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேக நபரை சீனக்குடா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதுடன், திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.





மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜீ.சுகுணன் முதன்முதலாக கதிரவெளி வாகரை வைத்தியசாலைகளுக்கு விஜயம்செய்து வைத்தியசாலை அபிவிருத்தி குறித்து வைத்தியர்களுடன் உரையாடுவதைப் படங்களில் காணலாம். (நற்பிட்டிமுனை நிருபர்)

# அம்பாறை பிரதேச செயலக பசுமைப்பூங்கா திறப்புவிழா




(அக்கரைப்பற்று நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் முதல் முறையாக பிரதேச செயலக அலுவலக நடவடிக்கைகளை SYSCGAA எனும் கணினிமயப்படுத்தும் வேலைத்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்றதுடன், பசுமைப் பூங்கா திறப்புவிழாவும் சௌபாக்கியா வீட்டுத்தோட்டங்களுக்கான மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் என்.எச்.எம்.சித்திரானந்தா கலந்துகொண்டதுடன் அமைச்சின் மேலதிக செயலாளர் கே.ஜி.தர்மதிலக்க மற்றும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்துகொண்டனர்.

நிகழ்விற்கு வருகை தந்த அதிதிகளுக்கு பிரதேச செயலாளர் தலைமையிலான உத்தியோகத்தர்கள் மகத்தான வரவேற்பளித்தனர். பின்னர் அதிதிகள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

இதன் பின்னர் பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றிலும் பங்கேற்றனர்.

இங்கு உரையாற்றிய அமைச்சின் மேலதிக செயலாளர் ஞலளஉபயய எனும் கணினிமயப்படுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பித்தல் தொடர்பிலும் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் அமைச்சில் உதவிச் செயலாளராக கடமையாற்றியபோது இத்திட்டத்தினை அறிமுகப்படுத்தியதனையும் கொரோனா காலகட்டத்தில் அவர் அமைச்சில் ஆற்றிய பங்களிப்பு தொடர்பிலும் ஞாபக மூட்டினார்.

இதன் பின்னர் அமைச்சின் செயலாளர் உள்ளிட்டவர்கள் மரக்கன்று நடும் நிகழ்வில் இணைந்துகொண்டார். தொடர்ந்து பிரதேச செயலக வளாகத்தில் அமைந்துள்ள பசுமைப்பூங்காவினையும் திறந்துவைத்தார். பின்னர் சமுர்த்தி சௌபாக்கியா வீட்டுத்தோட்ட வேலைத்திட்டத்திற்கமைய 2 ஆயிரத்து 580 பயனாளிகளுக்கு பயன்தரு மரக்கன்றுகள் வழங்கும் திட்டத்தையும் ஆரம்பித்துவைத்ததுடன், சௌபாக்கியா வாழ்வாதார அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நடமாடும் விற்பனைகூடம் ஒன்றினையும் சமுர்த்தி பயனாளி ஒருவருக்கு வழங்கினார்.

# குமாரபுரம் படுகொலை நினைவேந்தலை அனுஷ்டிக்க முயன்ற பொதுமக்களை புலனாய்வாளர்கள் அச்சுறுத்தல்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடும் கண்டனம்

(கிண்ணியா நிருபர்)

மூதூர் - குமாரபுரம் கிராமத்தில் இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட அழித்தொழிப்பு நடவடிக்கையின்போது கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்களின் நினைவேந்தலை உறவுகள் அனுஷ்டிக்க முனைந்தபோது புலனாய்வாளர்கள் கடும் அச்சுறுத்தலை மேற்கொண்டதனைத் தாம் கடுமையாகக் கண்டிப்பதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

மக்கள் முன்னணியின் பிரதிப் பொதுச் செயலாளர் இ.ஸ்ரீஞானேஸ்வரன் நேற்று முன்தினம் (12) விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையின்படி 11.02.1996 அன்று சுற்றிவளைக்கப்பட்டு குமாரபுரம் மக்கள் படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகியபோது கர்ப்பிணிப் பெண்கள் உட்பட 26 பேர் குறித்த சம்பவத்தில் பலியானதுடன் 25பேர் காயமடைந்தனர். அப்படுகொலையின் 27ஆம் ஆண்டு நினைவேந்தலைச்செய்ய முற்பட்ட கிராம மக்கள், தொடர்ச்சியான அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இந்த அச்சுறுத்தலின் உச்ச நடவடிக்கையாக கடந்த 10ஆம் திகதி கொல்லப்பட்ட மக்களின் உறவினர்களைச் சந்தித்த புலனாய்வாளர்கள் தாம் நீதிமன்ற தடை உத்தரவைப் பெற்றிருப்பதாகவும் நினைவேந்தினால் கைதுசெய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அச்சுறுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு சிலரது பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களை நினைவேந்தலைச் செய்ய செல்லவேண்டாம் எனவும் அச்சுறுத்தியுள்ளனர்.

இவ் அச்சுறுத்தலினால் கொல்லப்பட்ட உறவுகளைக் கூட நினைவேந்தப் பயந்து சில உறவினர்கள் 11ஆம் திகதி வழமையாக நடத்தப்படும் பொங்கல் நிகழ்விலும் மாலை நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ள இடத்தில் நிகழும் நினைவேந்தலிலும் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான அச்சுறுத்தல்கள் ஒருபோதும் தமிழினத்தை நிம்மதியான வாழ்வுக்கு இட்டுச்செல்லப்போவதில்லை என்பதுடன் சர்வதேச விசாரணையொன்றின் ஊடாக தமிழருக்கான நீதி கிடைக்கும் மட்டும் தமிழ் மக்கள் தமது உரிமைகளை நிலைநாட்டப் போராடவேண்டியிருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

குறித்த அச்சுறுத்தல் விடயத்தை உரிய சான்றுகளுடன் ஐக்கிய நாடுகள் சபையின்மனித உரிமை ஆணையாளருக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் - நான்கு செயலகங்களின் செயலர்களாக முஸ்லிம்களை நியமிக்குக!

## கிழக்கின் கேடயம் கோரிக்கை

(மாளிகைக்காடு நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் எம்.பிக்கள் அதிகமாக இருப்பதனால் தமிழ் மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்று கூறி அம்பாறையில் மேலதிக அரசாங்க அதிபராக தமிழ் சகோதரர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அதே நிலைதான் மட்டக்களப்பில் முஸ்லிம்களுக்கு இருக்கிறது. அங்கு ஒரு மேலதிக அரசாங்க அதிபராக முஸ்லிம் சகோதரர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் எனும் கோரிக்கையையும், மட்டக்களப்பில் உள்ள நான்கு முஸ்லிம் பிரதேச செயலகங்களுக்கும் முஸ்லிம் நிர்வாக சேவை அதிகாரிகள் பிரதேச செயலாளர்களாக நியமிக்கப்பட வேண்டும். இதற்கான முன்னெடுப்புகளை மட்டக்களப்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல எம்.பிக்களும் ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டும் என "கிழக்கின் கேடயம்" கோரிக்கையை முன் வைக்கிறது.




கிழக்கின் கேடயத்தின் பிரதான செயற்பாட்டாளரும், அக்கரைப்பற்று மாநகர உறுப்பினருமான எஸ்.எம்.சபீஸ் நேற்று முன்தினம் (12) ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அல்ஹாபிழ் இஸட்.நஸீர் அஹமட், கடந்த காலங்களில் மட்டக்களப்பில் முஸ்லிம் நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு நடக்கும் அநீதிகள் தொடர்பில் பொதுவெளிக்கு முன்வந்து வெளிப்படையாக பேசியிருந்தார். மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி காரியாலயத்துக்கு முஸ்லிம் நிர்வாக சேவை அதிகாரியை நியமிக்க கோரிக்கை முன்வைத்த பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்த சூழ்நிலையில், தமிழ்த் தலைமைகள் அரசியல் அழுத்தம் கொடுத்து தமிழ் சகோதரர் ஒருவரை அந்த வெற்றிடத்துக்கு நியமித்துள்ளார்கள்.

அதன் பின்னர் ஏறாவூர் நகரசபையில் உள்ள முஸ்லிம் நிர்வாக சேவை அதிகாரி ஒருவர் வாகரை பிரதேச செயலகத்துக்கு பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டபோது அதனை உடனடியாக இடைநிறுத்தி அந்த வெற்றிடத்துக்கும் தமிழ் சகோதரர் ஒருவரை நியமித்துள்ளார்கள். இங்கு என்ன நடக்கிறது என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

அநீதிகளானது உண்மைக்கு புறம்பாக மட்டுமின்றி நீதிக்கு புறம்பாகவும் இருக்கிறது. இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாக உள்ள தமிழ் சகோதரர் ஒருவரை எந்த வெற்றிடத்துக்கும் எங்கும் நியமிக்கலாம். ஆனால், மட்டக்களப்பில் உள்ள முஸ்லிம் இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளை அவர்களது தகுதிக்கு ஏற்ற இடங்களில் சேவையாற்ற வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும். இங்கு எங்களினால் இனப்பாகுபாடு பார்க்கப்படவில்லை. நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டுங்கள் என்றே கேட்கிறோம்.

இது தொடர்பிலான கோரிக்கை மகஜரை முஸ்லிம் எம்.பிக்கள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் முக்கிய அமைச்சர்களிடம் கையளித்துள்ளதாக அறிகிறோம். மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் நிர்வாக சேவை அதிகாரிகள் மிகக்கவனமாக தங்களுடைய நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மட்டக்களப்பில் உள்ள நிறைய பிணக்குகளுக்கு தீர்வாக முஸ்லிம் மேலதிக அரசாங்க அதிபர் நியமனமும், மட்டக்களப்பில் உள்ள நான்கு முஸ்லிம் பிரதேச செயலகங்களுக்கும் முஸ்லிம் நிர்வாக சேவை அதிகாரிகள் பிரதேச செயலாளர்களாக நியமிக்கப்படுவதன் மூலம் அமையும் என்று நம்புகிறோம். யார் பாதிக்கப்பட்டாலும் அநீதிகளை கண்களை மூடிக்கொண்டு பார்த்துக்கொண்டிருப்பது மனித இயல்பாக அமையாது. அநீதிகள் இழைக்கப்படும் விடயத்தில் கிழக்கின் கேடயம் தொடர்ந்தும் ஜனநாயக ரீதியாக குரல்கொடுத்து போராடும் என்றார்.

# திருகோணமலை மாவட்ட செயலகத்தில் தமிழ் பாரம்பரிய கலைகளின் சங்கமம்



(கிண்ணியா, நிலாவெளி நிருபர்கள்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் திருகோணமலை மாவட்ட செயலகம் ஏற்பாடு செய்த "தமிழ் பாரம்பரிய கலைகளின் சங்கமம்" நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (11) திருகோணமலை மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

தொன்று தொட்டு பேணப்பட்டு வந்த தமிழ் பாரம்பரியங்களை பேணிப் பாதுகாப்பதன் அவசியம், அவற்றின் முக்கியத்துவம் உட்பட பல விடயங்கள் இதன்போது கலைஞர் பெருமக்களால் எடுத்துரைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கலைஞர்கள் உட்பட துறைசார் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

# வவுணதீவில் கசிப்புடன் வியாபாரி ஒருவர் கைது



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வவுணதீவு பிரதேசத்தில் மோட்டார்சைக்கிள் ஒன்றில் 10 போத்தல் கசிப்பை வியாபாரத்துக்காக எடுத்துச் சென்ற ஒருவரை கடந்த வெள்ளிக்கிழமை (11) கைதுசெய்ததுடன், 10 போத்தல் கசிப்புடன் மோட்டார்சைக்கிள் ஒன்றையும் மீட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிசந்த அப்புஹாமி தெரிவித்தார்.

விசேட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய, சம்பவதினத்தன்று காலை வவுணதீவு முள்ளாமுனையில் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது மோட்டார்சைக்கிள் ஒன்றில் பனையறுப்பான் பிரதேசத்தில் இருந்து கரவெட்டி பிரதேசத்துக்கு உரைப்பை ஒன்றில் 10 போத்தல் கசிப்பை வியாபாரத்துக்காக கொண்டு சென்றபோது கைதுசெய்தனர். இதில் கைதுசெய்யப்பட்டவர் 26 வயதுடைய இளைஞன் எனவும் இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# கார் – முச்சக்கரவண்டி மோதி விபத்து; சிறுவர்கள் மூவர் உட்பட ஐவர் படுகாயம்



(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி வீதி இலிங்க நகர் பகுதியில் ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்தினம்(12) நண்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் 03 சிறுவர்கள் உட்பட ஐவர் பலத்த காயங்களுடன் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, திருகோணமலை - கண்டி வீதியினூடாக நகர் புரத்தை நோக்கி வருகைதந்த சொகுசு கார் ஒன்று திருகோணமலை ஐ.ஓ.சி எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்காக வலதுபக்கம் திரும்பியபோது, திருகோணமலை நகர்ப் பகுதியில் இருந்து வந்த முச்சக்கரவண்டி காருடன் மோதி தனியார் நிறுவனம் ஒன்றுக்கு சொந்தமான கெப் ரக வாகனத்தில் மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு விபத்துக்குள்ளான முச்சக்கரவண்டியில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சிறுவர்கள் உட்பட சிறுவர்களின் தாய் மற்றும் முச்சக்கர வண்டியின் சாரதி காயங்களுடன் திருகோணமலை பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை திருகோணமலை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# இயற்கை உர உற்பத்தி தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் - 2022



(மட்டக்களப்பு நிருபர்)

விவசாய இராஜாங்க அமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷவின் தலைமையில் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மற்றும் மாவட்டச் செயலாளர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கிய இயற்கை உர உற்பத்திக்கான தேசிய வேலைத்திட்டம் நிகழ்நிலை ஊடாக நாடளாவிய ரீதியில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் இயற்கை உரங்களை கொள்வனவு செய்தல், உற்பத்தியாளர்களை மேம்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்தும் வேலைத்திட்டம் என்பன தொடர்பாக மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்நிலையில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயற்கை உர உற்பத்தியை அதிகரிப்பது மற்றும் இயற்கை உர உற்பத்தியில் ஏற்படும் பிரச்சினைகள், உரம் விற்பனையை விரிவுபடுத்துதல், சேமிப்பு வசதிகளை விரிவுபடுத்துதல், உரம் உற்பத்திக்கு தேவையான உபகரணங்களை வழங்குதல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், 231 ஆவது இராணுவப் படைப்பிரிவின் பிறிகேட் கொமாண்டர் திலீப பண்டார, மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த் மற்றும் விவசாயத் திணைக்களத்தின் உயரதிகாரிகள் மற்றும் ஏனைய அரச அதிகாரிகள் மற்றும் இயற்கை உர உற்பத்தியாளர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# எண்ணம்போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றம் நடத்தும் பௌர்ணமி கலைவிழா!

எண்ணம் போல் வாழ்க்கை கலை, இலக்கிய மன்றம் நடத்தும் "எண்ணம் போல் பௌர்ணமி நயம்" பௌர்ணமி கலை இலக்கிய நிகழ்வு-01, எதிர்வரும் 16ஆம் திகதி மாலை 04 மணிக்கு திருகோணமலை உவர்மலையிலுள்ள சமூக கற்கைகள் நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

கனக.தீபகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், மகுடம் வெளியீடான பிரபல பெண் எழுத்தாளரான ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் "நேற்றைய மனிதர்கள்" சிறுகதைத் தொகுப்பு பற்றிய உரையாடல் அரங்கேறவுள்ளது.

இந்நிகழ்வின் பேச்சாளர்களாக திருமலை நவம், பானு சுதாகரன், திருமலை மதன், வசுமதி நிர்மல் மற்றும் லலித்தா ஆகியோர் பங்குகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் இணையவழி மூலமாகவும் பங்குபற்றலாம். இணைய விரும்புபவர்கள் meeting id-8837404 4875. Pass code-GY5LFB எனும் இணைப்பை ஏற்படுத்தி இவ் இலக்கியச் சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுக்கின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# பட்டிருப்பில் கணிதப் பாட மாணவர்களுக்கு ஏற்பட்ட இடையூறுக்கு நீதியான விசாரணை வேண்டும்

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(மட்டக்களப்பு நிருபர்)

மாவட்டத்தின் ஐந்து கல்வி வலயங்களிலும் சிரேஷ்ட தரத்தில் இருக்கின்ற கல்விப் பணிப்பாளர்கள் இருக்கும்போது கனிஷ்ட தரத்தில் இருக்கின்ற கல்விப் பணிப்பாளரிடம் பரீட்சை மேற்பார்வையாளர்களை நியமிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இதனாலேயே பட்டிருப்பில் இணைந்த கணிதம் பரீட்சையின்போது குளறுபடி ஏற்பட்டது. மாணவர்களுக்கு ஏற்பட்ட இடையூறுக்கு நீதியான, பக்கச்சார்பற்ற நடுநிலையான விசாரணையை முன்னெடுக்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் பொ.உதயரூபன் தெரிவித்தார்.

மட்டு. ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் (12) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் பட்டிருப்பு கல்வி வலயத்தில் இணைந்த கணிதம் உயர்தரப் பரீட்சையின்போது இடம்பெற்ற குளறுபடி தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் அன்றைய தினம் பிரதி பரீட்சை ஆணையாளருடன் தொடர்புகொண்டு கேட்டபோது, அச்சமயம் அப்பரீட்சையில் கடமையாற்றியவர்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருப்பதாக நிலைமையை எமது பொதுச்செயலாளரிடம் விளக்கியிருந்தார்.

இருந்தும் இந்தப் பரீட்சை தொடர்பில் மாணவர்களுக்கு ஏற்பட்ட இடையூறுக்கு நீதியான, பக்கச்சார்பற்ற நடுநிலையான விசாரணையை இலங்கை ஆசிரியர் சங்கம் மீண்டும் வலியுறுத்துகின்றது.

அண்மைக் காலமாக பட்டிருப்பு கல்வி வலயத்தினுடைய கல்வி வளர்ச்சி ஒரு துரிதமான நிலையில் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. கடந்த முறை இடம்பெற்ற உயர்தரப் பரீட்சையில் மாவட்ட ரீதியில் மருத்துவத்துறையில் பட்டிருப்பு மகா வித்தியாலய மாணவன் தெரிவு செய்யப்பட்டிருப்பதோடு, அதேவேளை கல்லாறில் 26ஆவது நிலையில் பொறியியல் பீடத்துக்கு மாணவியொருவர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

மேலும், 52 மாணவர்கள் இணைந்த கணிதம் பாடத்துக்குத் தோற்றியபோது அதில் 50 வீதமான மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்திருந்தார்கள். மற்றும் ஏனைய பாடங்கள் தொடர்பிலும் பட்டிருப்பின் கல்வி வளர்ச்சி மிக உயர்வாகக் காணப்பட்டதோடு 50 வீதமான மாணவர்கள் சகல துறைகளிலும் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்று வலயத்துக்கு பெருமையைச் சேர்த்திருக்கின்றார்கள். அத்துடன் கடந்த உயர்தரத்தில் வர்த்தகத்துறையில் மாவட்டத்தின் ஐந்து வலயங்களிலும் முதலாவது இடத்தை பட்டிருப்பு வலயம் பெற்றிருக்கின்றது.

இவ்வாறு இருக்கையில், மேற்குறிப்பிட்ட சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது. அதற்கு




பரீட்சை மேற்பார்வையாளர்களைத் தற்காலிகமாக இடைநிறுத்தியிருக்கின்றபோதும், இந்த மேற்பார்வையாளர்களை யார் நியமித்தது என்பது தொடர்பிலும் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இதற்கு பரீட்சைகள் ஆணையாளர் பொறுப்புக் கூற வேண்டும்.

ஏனெனில், மட்டக்களப்பு கல்வி வலயத்தில் இருந்து பெரும்பாலான அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இந்த வருடம் கடமைப் பொறுப்புகள் கையளிக்கப்படவில்லை. பரீட்சை தொடர்பில் நீண்ட காலம் அனுபவத்துடன் மேற்பார்வையாளர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு புதிதாக நியமனங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும்.

மாவட்டத்தின் ஐந்து கல்வி வலயங்களிலும் சிரேஷ்ட தரத்தில் இருக்கின்ற கல்விப் பணிப்பாளர்கள் இருக்கும்போது கனிஷ்ட தரத்தில் இருக்கின்ற கல்விப் பணிப்பாளரிடம் பரீட்சை மேற்பார்வையாளர்களை நியமிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

அதேநேரம் பரீட்சை மேற்பார்வை கடமைகளில் முழு நேரமாக ஈடுபட வேண்டியவர்கள் நேற்றைய தினம் பரீட்சை பகுப்பாய்வு என்று சொல்லி மட்டக்களப்பு கல்வி வலயத்தில் நடத்துகின்றார்கள். இது தொடர்பில் நேரடியாக மாகாணக் கல்விப் பணிப்பாளரிடமும், பிரதிப் பரீட்சை ஆணையாளரிடமும் தெரிவித்திருந்தோம். அவர் முழு நேரமும் பரீட்சைக் கடமையில் ஈடுபட வேண்டியவர். சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்யும் கடமையில் எவ்வாறு ஈடுபட முடியும்.

இவ்வாறான விடயங்கள் தொடர்பில் நீதியான விசாரணை மேற்கொள்வது மட்டுமல்லாமல், இந்த மாணவர்களுக்குப் பொருத்தமான நடவடிக்கையை பரீட்சைகள் திணைக்களம் மேற்கொள்ள வேண்டும். இதுதொடர்பில் நாங்கள் பரீட்சைகள் பிரதி ஆணையாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், கல்விச் செயலாளர் ஆகியோரிடம் தெரிவித்திருக்கின்றோம். மேலும் மாகாண ஆளுநருடனும் கலந்துரையாடவுள்ளோம் என்று தெரிவித்தார்.



# கர்நாடக உயர்நீதிமன்றத்தில் இன்று 'ஹிஜாப்' விசாரணை

## உடுப்பியில் இன்றுமுதல் 5 நாட்களுக்கு 144 தடை உத்தரவு



கர்நாடக உயர்நீதிமன்றத்தில் ஹிஜாப் தொடர்பான வழக்கின் விசாரணை இன்று நடைபெறவுள்ளது.

இந்நிலையில், கர்நாடகாவின் உடுப்பி மாவட்டத்தில் இன்றுமுதல் (14ஆம் திகதி) 19ஆம் திகதிவரை 144 தடை உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

**இன்று 'ஹிஜாப்' விசாரணை**

கர்நாடக உயர்நீதிமன்றத்தில் ஹிஜாப் தொடர்பான வழக்கின் விசாரணை இன்று நடைபெறவுள்ளது.

இன்றைய விசாரணையைப் பொறுத்தே கல்லூரிகள் திறப்பது குறித்து முடிவெடுக்கப்படும் என்று கர்நாடக முதலமைச்சர் பசவராஜ் பொம்மை தெரிவித்துள்ளார்.

பத்தாம் வகுப்பு வரையிலான பாடசாலைகள் இன்று திறக்கப்படவுள்ளன. எனினும், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்கு 16ஆம் திகதிவரை விடுமுறை நீடிக்கப்பட்டுள்ளது.

கல்லூரிகள் திறப்பது குறித்து நீதிமன்றத்தின் கருத்தை அறிந்த பின்னரே முடிவெடுக்கப்படும் என்று பொம்மை தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஹிஜாப் அணிந்து கல்லூரிக்கு வருவதற்கு ஆதரவாகவும் எதிராகவும் தாக்கல் செய்யப்பட்ட பல்வேறு மனுக்களை விசாரித்த உயர்நீதிமன்ற அமர்வு இறுதி த்தீர்ப்பு வரும்வரை கல்லூரிகளுக்கு மத ரீதியான ஆடைகளை அணிந்து வருவதற்கு இடைக்காலத் தடை விதித்துள்ளது.

**144 தடை உத்தரவு**

கர்நாடக மாநிலம், உடுப்பி மாவட்டத்தில் கடந்த வாரம்முதல் கல்லூரியில் ஹிஜாப் அணிந்து பெண்கள் வகுப்பிற்குள் வரக்கூடாது என்று எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதற்கு தங்களது எதிர்ப்பைத் தெரிவித்து அந்த கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் அனைவரும் ஹிஜாப் தங்களது உரிமை என்றும், அது அரசியலமைப்பு சட்டத்தில் உள்ளது என்றும் கூறி போராட்டத்தை நடத்தினார்கள். இதற்கான விசாரணை கர்நாடக உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. மேலும் பதற்றத்தைக் குறைக்கும் வகையில் அனைத்து பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், உடுப்பி மாவட்டத்திலுள்ள அனைத்து உயர்நிலைப் பாடசாலைகளிலும் 144 தடை உத்தரவை மாவட்ட துணை ஆணையர் பிறப்பித்துள்ளார்.

ஹிஜாப் மற்றும் காவி சால்வை சர்ச்சையை தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதன்படி இன்றுகாலை 6 மணிமுதல் பெப்ரவரி 19 ஆம் திகதி மாலை 6 மணிவரை இந்த உத்தரவு அமுலில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து உயர்நிலைப் பாடசாலைகளையும் சுற்றி 200 மீற்றர்கள் வரை 144 தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று டி.சி.குர்மா ராவிடம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பாடசாலையை சுற்றி ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் ஒன்றுகூடுவதற்கு அனுமதி இல்லை. ஒரு தனிநபரின் தனிப்பட்ட நம்பிக்கை அல்லது மதத்தை சீர்குலைக்கும் செயலுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் அல்லது போராட்டங்கள் உட்பட அனைத்து வகையான கூட்டங்களும் தடைசெய்யப்பட்டுள்ளன. அத்தோடு தடிகள், கத்திகள் அல்லது கொடிய ஆயுதங்களைக்கொண்ட பொருட்களை எடுத்துச்செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

## இலங்கை சிறையில் வாடும் மீனவர்களை விடுவிக்கக்கோரி இராமேஸ்வரத்தில் முற்றுகை



இலங்கை சிறையில் வாடும் மீனவர்களை விடுவிக்கவும், ஏலம் விட்ட படகை மீட்கக்கோரியும் இராமேஸ்வரம் ரயில் நிலையத்தின் முன் மீனவர்கள் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

கடந்த 7ஆம் திகதி கைதான இராமேஸ்வரம் மீனவர்கள் 11 பேரை விடுவிக்கவும், இலங்கையில் விடுவிக்கப்பட்ட மீனவர்களை விரைவில் தமிழகம் அழைத்து வரவும், அங்கு ஏலம் விட்ட தமிழகப் படகுகளை மீட்கக்கோரியும் நேற்றுமுன்தினம் இராமேஸ்வரம் கடற்கரையிலிருந்து மீனவர் சங்கத் தலைவர்கள் போஸ், தேவதாஸ், சேசு, சகாயம், எமிரேட், பலர் ஊர்வலமாக ரயில் நிலையத்துக்குச் சென்றனர்.

இதனையடுத்து அவர்களை இராமேஸ்வரம் பொலிஸார் தடுத்து சமரசம் செய்தனர். ஆனால், மீனவர்கள் ரயில் நிலையத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்ய அனுமதியுங்கள் என தொடர்ந்து வலியுறுத்தியதால் பொலிஸார் அனுமதித்தனர். பின் மீனவர்கள் ரயில் நிலைய முற்றுகையிட்டு ஒரு மணிநேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# இலங்கை கடற்படை அத்துமீறலை இனியும் இந்திய அரசு அனுமதிக்கக்கூடாது

**12 தமிழக மீனவர் கைது; பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் கண்டனம்**



"இந்தியாவிடம் உதவி பெறும் இலங்கை, இந்திய இறையாண்மை மீது தொடர் தாக்குதல் நடத்துவதை வேடிக்கை பார்க்கக்கூடாது.''

- இவ்வாறு பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ராமதாஸ் தமது ட்விட்டர் பக்கத்தில்,

"வங்கக்கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் 12 பேரை அவர்களின் படகுகளுடன் சிங்களப்படை கைதுசெய்திருக்கிறது. சிங்களக் கடற்படையினரின் இந்தத் தொடர் அத்துமீறல் கண்டிக்கத்தக்கது ; இதை இனியும் இந்திய அரசு அனுமதிக்கக்கூடாது.

ஜனவரி 31ஆம் திகதி 21 பேர், பெப்ரவரி 8ஆம் திகதி 11 பேர், நேற்று 12 பேர் என கடந்த இரு வாரங்களில் மட்டும் மொத்தம் 3 முறை 44 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவிடம் உதவி பெறும் இலங்கை, இந்திய இறையாண்மை மீது தொடர் தாக்குதல் நடத்துவதை வேடிக்கை பார்க்கக்கூடாது. கைது செய்யப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் 12 பேர் உட்பட இதுவரை கைதுசெய்யப்பட்ட 44 மீனவர்களையும், அவர்களின் படகுகளுடன் உடனடியாக விடுவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் விரைந்து மேற்கொள்ள வேண்டும்'' - என பதிவிட்டுள்ளார்.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு வருவது தொடர்கதையாகிவிட்டது. அந்தவகையில் தனுஷ்கோடி - தலைமன்னார் இடையே மீன்பிடித்துக்கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்களை சுற்றிவளைத்த இலங்கை கடற்படையினர், அவர்கள் எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி 12 பேரை சிறைப்பிடித்துள்ளனர். அத்துடன், அவர்களிடமிருந்த இரண்டு விசைப் படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

ஏற்கனவே கடந்த 8ஆம் திகதி 11 இராமேஸ்வரம் மீனவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். நேற்றுமுன்தினம் போராட்டத்தை விடுத்து, மீண்டும் கடலுக்கு சென்ற நிலையில் நேற்று இராமேஸ்வரம் மீனவர்கள் கைது செய்யப்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது,

இந்தச் சம்பவத்திற்கு உடனடியாக தீர்வு காணவேண்டும் என தமிழக அரசியல் கட்சி தலைவர்கள் மத்திய, மாநில அரசுகளுக்கு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

**குஜராத் நடுக்கடலில் அதிரடி சோதனை:**

# பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு கடத்திவரப்பட்ட ரூ. 2,000 கோடி பெறுமதியான போதைப்பொருள் பறிமுதல்



குஜராத் நடுக்கடலில் பாகிஸ்தானிலிருந்து கடத்திவரப்பட்ட ரூ. 2,000 கோடி (இந்திய ரூபாப்படி) மதிப்புள்ள போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது.

குஜராத் அருகே நடுக்கடலில் பாகிஸ்தானிலிருந்து மீன்பிடிப் படகில் போதைப்பொருள் கடத்தி வரப்படுவதாக இந்திய மத்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது. இது குறித்து கடற்படையினருக்கு தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து, இரு தரப்பினரும் சேர்ந்து போதைப்பொருள் வரும் படகை மடக்க திட்டம் தீட்டினர்.

போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்த கடல் பகுதியில் ஐ.என்.எஸ். தாபர் போர்க்கப்பல் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டது. கப்பலில் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளும் இருந்தனர். நடுக்கடலில் சர்வதேச எல்லை அருகே பாகிஸ்தானிலிருந்து இரண்டு படகுகள் வருவதை கடற்படையினர் கண்டுபிடித்தனர்.

அதையடுத்து, இரண்டு படகுகளையும் கடற்படையினர் மடக்க முயன்றனர். அதில் ஒரு படகு சர்வதேச எல்லைக்குள் நுழைந்து தப்பிச் சென்றுவிட்டது. மற்றொரு படகை மடக்கிப் பிடித்தனர். படகில் சோதனைசெய்து பார்த்தபோது அதில் 36 சாக்குகளில் போதைப்பொருள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதில் 525 கிலோ உயர் தர கஞ்சாவும், 234 கிலோ உயர் ரக மெத்தம்பெட்டமைன் (methamphetamine) போதைப்பொருளும் பறிமுதல் செய்யப்பட்டது. மெத்தம்பெட்டமைன் போதைப்பொருள் விருந்துகளில் அதிகளவில் பயன்படுத்தக்கூடியதாகும். இவற்றை இந்தியாவிற்கு கடல் வழியாக கடத்திக் கொண்டுவந்து, இந்தியாவிலிருந்து அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கு அனுப்ப போதைப்பொருள் கடத்தல் கும்பல் திட்டமிட்டிருந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். இவற்றின் சர்வதேச மதிப்பு ரூ. 2,000 கோடியாகும்.

பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருள் மற்றும் படகிலிருந்தவர்கள் குஜராத்தின் போர்ப்பந்தர் கடற்கரைக்கு கொண்டு வரப்பட்டனர்.

இந்த போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது பாகிஸ்தான் கடத்தல்காரர்களுக்கு பெரிய பின்னடைவாக கருதப்படுகிறது. சமீபகாலமாக போதைப்பொருட்களை பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு கடத்திவர குஜராத் கடற்பகுதியை கடத்தல்காரர்கள் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். இதனால் குஜராத் கடற்பகுதியில் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளனர்.

# கோவா - உத்தரகாண்ட்டில் இன்று சட்டப்பேரவை தேர்தல்



கோவா, உத்தரகாண்ட் மாநிலங்களில் இன்று சட்டப்பேரவை தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

உத்தரப்பிரதேசத்தில் இன்று திங்கட்கிழமையன்று 2ஆம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இதையடுத்து, வாக்குப்பதிவு நடைபெறவுள்ள மாநிலங்களில் இறுதிக்கட்ட ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. உத்தரகாண்ட்டிலுள்ள 70 தொகுதிகளுக்கும், கோவாவில் 40 தொகுதிகளுக்கும், இன்று ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

உத்தரப்பிரதேசத்தில் 403 சட்டமன்றத் தொகுதிகளுக்கு 7 கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெறும் நிலையில், 55 தொகுதிகளில் 2ஆம் கட்டமாக இன்று தேர்தல் நடைபெறுகிறது.

வாக்குப்பதிவு அமைதியாக நடைபெறுவதை உறுதிப்படுத்த பொலிஸாருடன் துணை இராணுவப் படையினரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# ஆந்திராவில் 2 இலட்சம் கிலோ கஞ்சா தீயிட்டு எரிப்பு



**ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம், விஜயநகரம், கிழக்கு கோதாவரி மற்றும் மேற்கு கோதாவரி மாவட்டங்களில் பொலிஸார் வாகன சோதனை நடத்தினர். அப்போது பறிமுதல் செய்யப்பட்ட 2 இலட்சம் கிலோ கஞ்சாவை பொலிஸார் தீயிட்டு எரித்தனர்.**

# எஸ்.கேயுடன் இணையும் பிரிட்டன் குயின் ஒலிவியா



சிவகார்த்திகேயன் தற்போது நடித்துவரும் தமிழ், தெலுங்கில் உருவாகிவரும் படத்தில் பிரித்தானிய நடிகை ஒலிவியா அவருக்கு ஜோடியாக நடிக்கவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

'டான்' படத்துக்குப் பின்னர் சிவகார்த்திகேயன் தற்போது அனுதீப் இயக்கத்தில் தமிழ், தெலுங்கில் உருவாகும் படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு காரைக்குடியில் சமீபத்தில் தொடங்கியது. இந்தப் படத்தின் பெரும்பாலான காட்சிகள் பாண்டிச்சேரியிலும் பிரித்தானியாவிலும் படமாக்கப்படவிருக்கின்றனவாம்.

இந்நிலையில், இந்தப் படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக ஒலிவியா மோரிஸ் என்ற பிரித்தானிய நடிகை நடிக்கவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இவர் தற்போது இயக்குநர் ராஜமௌலியின் ஆர்ஆர்ஆர் படத்தில் நடித்துள்ளார்.

இந்தப் படத்துக்கு தமன் இசையமைக்கவிருக்கிறார். இந்தப் படத்தின் இரண்டாவது கட்ட படப்பிடிப்பு விரைவில் பாண்டிச்சேரியில் நடைபெறவுள்ளது. இயக்குநர் அனுதீப்பின் ஜதி ரத்னாலு படத்தைப் போலவே இந்தப் படமும் நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்தப் படம் உருவாகி வருகிறது.

# போர் மூளும் அபாயம்



உலக செய்திகள்

## உக்ரைனிலிருந்து தமது குடிமக்களை வெளியேற்றும் அமெரிக்கா – பிரிட்டன் உட்பட மேற்குலக நாடுகள்

## ''எதற்கும் தயாராக இருக்கவேண்டும்''; தமது குடிகளுக்கு உக்ரைன் அறிவுறுத்து

## ''அடுத்த இரண்டு நாட்களில் உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தும்'' என வெள்ளைமாளிகை கணிப்பு

ரஷ்யா - உக்ரைன் நாடுகளிடையே போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் தமது குடிமக்களை வெளியேற்றிவரும் நிலையில், ''அடுத்த இரண்டு நாட்களில் உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தும்'' என வெள்ளை மாளிகை கணித்துள்ளது.

உக்ரைன் எல்லையில் ரஷ்ய இராணுவத்தின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. எல்லையில் சுமார் ஒரு இலட்சம் வீரர்களை ரஷ்யா நிறுத்தியுள்ளது.

எல்லையில் பதற்றமான சூழல் நிலவி வருவதால் ரஷ்யாவை சமாதானப்படுத்தும் முயற்சியில் பல்வேறு நாடுகளும் இறங்கியுள்ளன. ஆனால், எந்த சமாதானத்தையும் ஏற்காத ரஷ்யா இன்னும் இரண்டே நாட்களில் உக்ரைன் மீது போர் தொடுக்கும் என்று அமெரிக்க உளவு நிறுவனங்கள் கணித்துள்ளன.

இந்நிலையில், உக்ரைனிலிருந்து ரஷ்யா தமது குடிமக்களை வெளியேற உத்தரவிட்டுள்ளது.

ரஷ்யா, உக்ரைன் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் உக்ரைனில் வசித்துவரும் தங்கள் நாட்டுக் குடிமக்களை உக்ரைனிலிருந்து வெளியேற வலியுறுத்தி வருகின்றன.

ரஷ்யா - உக்ரைன் போர் ஏற்படும் அபாயம் உள்ளதால் ரஷ்யாவும் உக்ரைனிலுள்ள தங்களது நாட்டு பிரதிநிதிகளை மீண்டும் மொஸ்கோவுக்கு திரும்ப அழைத்துக் கொண்டுள்ளது.

இதுகுறித்து ரஷ்ய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மரியா ஜக்ரோவா தெரிவிக்கையில், ''கெய்வ் ஆதிக்கத்திலுள்ள உக்ரைனில் வசிக்கும் ரஷ்யர்களுக்கு பாதிப்பு ஏற்படலாம் என்கிற நோக்கத்தில் கிரெம்லின் இந்த முடிவை எடுத்துள்ளது'' என அவர் தெரிவித்துள்ளார்.

**உக்ரைனிலிருந்து தமது குடிகளை வெளியேற்றும் மேற்குலக நாடுகள்**

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு எப்போது வேண்டுமென்றாலும் நடக்கலாம் என்பதை எச்சரிக்கும் விதமாக பத்துக்கும் மேற்பட்ட மேற்கத்தேய நாடுகள் தங்கள் குடிமக்களை உடனடியாக வெளியேறுமாறு எச்சரித்துள்ளன. அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி ஆகிய நாடுகளும் தங்கள் நாட்டு மக்களை உக்ரைனிலிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தியுள்ள நாடுகளில் அடக்கம்.

அவுஸ்திரேலியா, இத்தாலி, இஸ்ரேல், நெதர்லாந்து, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் தங்கள் நாட்டு குடிமக்களை உக்ரைனை விட்டு வெளியேறுமாறு தெரிவித்துள்ளன. சிலர், தூதரக ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரையும் வெளியேற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ரஷ்யா, உக்ரைன் எல்லையில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட துருப்புகளை குவித்துள்ளது என்றாலும், படையெடுப்பதற்கான எந்த நோக்கமும் இல்லை என்று மறுத்து வருகின்றது. இதற்கிடையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மீண்டும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் தொலைபேசியில் பேசியபோது, உக்ரைன் மீது படையெடுப்பு நடந்தால் அதன் விளைவு மிகவும் மோசமாக இருக்கும் என்று எச்சரித்துள்ளார்.

படையெடுப்பதற்கான எச்சரிக்கைகள் தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கின்றன. இந்த எச்சரிக்கையால் ஏற்படக்கூடிய பயம்தான் எதிரிகளுக்குத் தேவையாக கருதப்படுகிறது. இதற்கான நகர்வுகளாகத்தான் எல்லாம் நடந்து வருகிறது என உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீது எந்த நேரத்திலும் படையெடுப்பு நடக்கலாம் என்றும், வான்வழி குண்டுவீச்சுடன் அது தொடங்கலாம் என்றும் வெள்ளை மாளிகை எச்சரித்துள்ளது.

ரஷ்யா, ''இத்தகைய குற்றச்சாட்டுகள் மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திலேயே பரப்பப்படுகிறது'' என குற்றச்சாட்டை மறுத்துள்ளது. உக்ரைன் தலைநகர் கீவ்வில், அமெரிக்கத் தூதரகத்திலுள்ள அத்தியாவசியமற்ற ஊழியர்கள் வெளியேற உத்தரவிடப்பட்டுள்ளது, மேலும் ஞாயிற்றுக்கிழமைமுதல் தூதரக சேவைகளை தற்காலிகமாக நிறுத்தயுள்ளன. இருப்பினும் "அவசர நிலையில் தொடர்புகொள்ள, மேற்கு நகரமான லிவிவ்வில் சிறியளவில் தூதரக அலுவல்கள் நடக்கும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், கனடா தனது தூதரக ஊழியர்களையும் போலந்து எல்லைக்கு அருகிலுள்ள லிவிவ் நகருக்கு மாற்றுவதாக கனேடிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. உக்ரைனுக்கான பிரிட்டன் தூதர் மெலிண்டா சிம்மன்ஸ், அவரும் ஒரு "முக்கிய குழுவும்" உக்ரைனின் தலைநகர் கீவ்விலுள்ளதாக ட்வீட் செய்துள்ளார்.

ஏனைய நாடுகளைபோல் ரஷ்யாவும் உக்ரைனிலுள்ள தங்கள் தூதரக அதிகாரிகள் இடத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக தெரிவிக்கையில்,

தற்போது உக்ரைனில் ஏற்பட்டுள்ள பதற்றத்தின் அடிப்படையில் பாதுகாப்புக்காக சில மாற்றங்களை செய்துள்ளோம். மேலும் உக்ரைன் மற்றும் பிற நாடுகளால் தூதரக அதிகாரிகளுக்கு எந்தவித பிரச்சினையும் வரக்கூடாது என்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் வீரர்களுக்கு பயிற்சியளித்து வந்த சுமார் 150 அமெரிக்க வீரர்களை அந்நாட்டு அரசு திருப்பி அழைத்துள்ளது. மேலும், டச்சு விமான நிறுவனமான KLM, உக்ரைனுக்கு சேவையை நிறுத்துவதாகவும் அறிவித்துள்ளது, இது உடனடியாக அமுலுக்கு வருவதாக டச்சு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. உக்ரைன் ஜனாதிபதி தெரிவிக்கையில்,

"வரவிருக்கும் படையெடுப்பிற்கான உறுதியான ஆதாரம் மேற்கத்தேய நாடுகளிடம் இருந்தால், அப்படியான ஆதாரத்தை நான் இன்னும் பார்க்கவில்லை. படையெடுப்புக்கான பல்வேறு செய்திகள் ஊடகங்களில் உலா வந்துகொண்டிருக்கிறன. ஆனால், உக்ரைன் மீது ரஷ்யா நிச்சயம் படையெடுக்கும் என்ற உறுதிப்படுத்தப்பட்ட தகவல் யாரிடமாவது இருந்தால் அதை எங்களுடன் பகிருங்கள்" என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**தக்க பதிலடி கொடுக்கப்படும்**

அமெரிக்க ஜனாதிபதி, ரஷ்யாவுடன் தொடர்புகொண்டு, படையெடுப்பு நடந்தால் அதற்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று பேசியதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள் ஏற்படுத்திய உச்சக்கட்ட பதற்றமான சூழ்நிலை மத்தியில் இந்த அழைப்பு நடந்ததாக மொஸ்கோவிலுள்ள கிரெம்ளின் (ரஷ்ய ஜனாதிபதி மாளிகை) விவரித்துள்ளது.

மேலும், ரஷ்யாவின் பாதுகாப்பு சம்பந்தமாக அவர்கள் பொருட்படுத்தவில்லை என்று ஜோ பைடனிடம் கூறியதாக தெரிவித்துள்ளது. இருநாட்டுத் தலைவர்களும் தொடர்ந்து பேசுவார்கள் என்று அதில் கூறப்பட்டுள்ளது. பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மெக்ரோன் சனிக்கிழமையன்று விளாடிமிர் புட்டினுடன் தொலைபேசியில் பேசியதாகவும், அப்போது , "தற்போது ஏற்பட்டுள்ள பதற்றமும் தாங்கள் அளிக்கும் விளக்கமும் ஒத்துப்போகவில்லை" என்று தெரிவித்ததாகவும் பிரான்ஸ் தூதரகம் செய்தி வெளியிட்டுள்ளது. வெளிநாட்டுத் தூதரகங்கள் ஊழியர்களை திரும்ப வரச்சொல்லி வருகிறது. பல நாடுகள் தங்கள் குடிமக்களை உக்ரைனை விட்டு வெளியேறச் சொல்லி வருகிறது. எனினும், கீவ்வில் எந்தவொரு நெருக்கடியும் உணரப்படவில்லை .

**தயாராக இருக்கவேண்டும்**

உக்ரைன் அரசு வெளியிட்ட அறிக்கையில், மக்கள் அமைதியாகவும் ஒற்றுமையாகவும் இருக்கவேண்டும் எனவும், பதற்றத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தச் செய்தியாக இருந்தாலும் அதிலிருந்து நாம் விலகி இருக்கவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எந்தவொரு சூழலுக்கும் தயாராக இருக்கவேண்டும் என்று ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி வேண்டுகோள் விடுத்துள்ளார். உக்ரைன் முழுவதும், வெளிநாட்டு குடிமக்கள் இப்போது அவசர அவசரமாக வெளியேறி வருகின்றனர்.

வடக்கே, பெலாரஸின் எல்லையைத் தாண்டி, ரஷ்யாவின் போர்ப் பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன. இதற்கான புகைப்படங்களை ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ளது. ஆனால், ரஷ்ய அரசு இன்னும் படையெடுக்கும் திட்டம் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறது. உக்ரைன் மீது ரஷ்யா படையெடுப்பதற்கு, உக்ரைன் எல்லைகளைத் தாண்ட வேண்டும் என்பதில்லை. ரஷ்யா தான் இருக்கும் இடத்திலிருந்தே தாக்குதல் நடத்த முடியும் என பொதுவாக சொல்லப்படுகிறது.

**பெலாரஸில் இராணுவப் பயிற்சி**

உக்ரைனின் கிழக்கு எல்லையில் ரஷ்யா தொடர்ந்து படைகளை நிலைநிறுத்தி வருவதால் பதற்றம் படிப்படியாக அதிகரித்துள்ளது. ரஷ்ய படைவீரர்கள் உக்ரைனின் வடக்கேயுள்ள பெலாரஸில் இராணுவப் பயிற்சிகளை நடத்தி வருகின்றனர் எனவும், அதேநேரத்தில் தென்கிழக்கிலுள்ள அசோவ் கடலில் கடற்படை பயிற்சிகள் மேற்கொண்டு வருகிறது எனவும், இது உக்ரைனின் கடல் மார்க்கத்தை ரஷ்யா தடுப்பதற்கு என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது. இதற்கிடையில், ரஷ்யாவின் கிழக்குப் பகுதியில் சுமார் 7,500 கி.மீ. தொலைவில், அமெரிக்கக் கடற்படை நீர்மூழ்கிக் கப்பலை அதன் கடல் எல்லைக்குள் கண்டதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் குரில் தீவுகளுக்கு அருகில் இருந்ததாகவும், அப்போது அவர்களை மேலே வர அழைத்ததாகவும், ஆனால், அவர்கள் வரவில்லை என்றும் தெரிவித்துள்ளனர். ரஷ்யாவின் மார்ஷல் ஷபோஷ்னிகோவ் கப்பல் மூலம் எச்சரிக்கப்பட்டது எனவும் அதன்பின் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் அப்பகுதியை விட்டு வெளியேறியது என்றும் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி நேரில் வந்து விளக்கமளிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். ஆனால், இதை முழுவதுமாக அமெரிக்கா மறுக்கிறது. இதுபோல் எதுவும் நடக்கவில்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

# நியூசிலாந்தில் போராட்டக்காரர்களை கலைக்க பலத்த சப்தத்துடன் பாடல்களை ஒலிக்கச் செய்த பொலிஸார்

## நடனமாடி பொலிஸாரை வெறுப்பேற்றிய போராட்டக்காரர்கள்



நியூசிலாந்தில் கொரோனா கட்டுப்பாடுகளை கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அப்புறப்படுத்த பொலிஸார் அதீத சப்தத்துடன் பாடல்களை ஒலிக்க விட்ட நிலையில், சற்றும் பின்வாங்காத போராட்டக்காரர்கள் பாடல்களுக்கு ஏற்றவாறு நடனமாடி பொலிஸாரை வெறுப்பேற்றினர்.

தடுப்பூசி எதிர்ப்பாளர்கள், அந்நாட்டின் நாடாளுமன்றம் செல்லும் வீதிகளின் குறுக்கே கனரக வாகனங்களை நிறுத்தியும், கூடாரங்களை அமைத்தும் 6 நாட்களாக மறியலில் ஈடுபட்டுள்ளனர்.

கனமழையையும் பொருட்படுத்தாமல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அப்புறப்படுத்த பொலிஸார் அதிக சத்தத்துடன் பாடல்களை ஒலிக்கச் செய்தனர். அதற்கும் அசராத ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆடி பாடி உற்சாகமடைந்தனர்.

இதேவேளை, கொரோனா கட்டாய தடுப்பூசிக்கு எதிராக கனடா, அவுஸ்திரேலியாவிலும் போராட்டங்கள் நடைபெற்றுவருகின்றன. கனடாவில் எல்லை கடந்து செல்லும் லொறி ஓட்டுநர்களுக்கு கொரோனா தடுப்பூசி கட்டாயம் என அரசு பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக லொறி ஓட்டுநர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். 'சுதந்திர அணிவகுப்பு' என்கிற பெயரில் தலைநகர் ஒட்டாவாவில் தொடங்கிய இந்த போராட்டம் தற்போது நாடு முழுவதும் தீவிரமடைந்துள்ளது.

# மெக்சிக்கோவில் மேலுமொரு ஊடகவியலாளர் சுட்டுக்கொலை




மெக்சிக்கோவில் அண்மையில் 3 ஊடகவியலாளர்கள் அடுத்தடுத்து கொல்லப்பட்டதை கண்டித்து பத்திரிகையாளர்கள் நாடு தழுவிய போராட்டம் நடத்திய நிலையில், தற்போது மேலுமொரு ஊடகவியலாளர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மெக்சிக்கோவில் கடந்த ஒன்றரை மாதத்தில் மட்டும் குற்றச் சம்பவங்கள் தொடர்பான செய்திகளை சேகரிக்கும் 5 ஊடகவியலாளர்கள் சுட்டுக் கொலைசெய்யப்பட்டனர். வியாழனன்று ஓவஹாக்கா மாநிலத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட ஹெர்பெர் கோபஸின் அஞ்சலி கூட்டத்தில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

# இலங்கை தேசிய ஹொக்கி அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக ரிபாஸ்

(இக்பால் அலி)

இந்தனோசியாவின் ஜகார்த்தா நகரில் மார்ச் மாதம் 11ஆம் திகதிமுதல் நடைபெறவுள்ள ஆசிய ஹொக்கி சம்மேளனம் நடத்தும், ஆசிய ஹொக்கி போட்டிக்கான தகுதிகாண் போட்டித் தொடரில் பங்குகொள்ளும் இலங்கை தேசிய ஹொக்கி அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக மாத்தளை சாஹிராக் கல்லூரியின் பழைய மாணவரும், தற்போதைய இலங்கை இராணுவ ஹொக்கி அணியின் பயிற்றுவிப்பாளருமான ஜவ்பர்தீன் மொஹம்மட் ரிபாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் மாத்தளை மாவட்டத்தில் மிகவும் பிரபல பாடசாலையான சாஹிராக் கல்லூரியில் உயர்தரம் வரை கல்வி பயின்றவர். பாடசாலை நாட்களில் கிரிக்கெட், ஹொக்கி விளையாட்டிலும் அதிக ஈடுபாடு காட்டி விளையாடி வந்தவர். ஹொக்கி விளையாட்டுத் துறையில் அதிக ஈடுபாடு காட்டுவதற்கு அவரது ஆசிரியர்களில் ஒருவரான அமரர் இராமச்சந்திரன் முக்கியமாவார்.

பாடசாலை மாவட்ட, மாகாண அணிகளை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், சாஹிரா விளையாட்டுக் கழகம், இலங்கை கடற்படையணி, பொலிஸ் அணி, பார்க் கழகம், மல்வத்தை விளையாட்டுக் கழகம், வென்னப்புவ விளையாட்டுக் கழகம், பாதுகாப்பு சேவைகள் அணி என்பவற்றையும் மாத்தளை, கொழும்பு, கண்டி ஹொக்கி சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தியும், மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்ட ஹொக்கி போட்டிகளிலும் பங்குபற்றியுள்ளதுடன், தேசிய ஹொக்கி தெரிவுக்குழாமில் கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுகளில் 10 வருடங்களுக்கு மேலாக விளையாடி வந்தவர்.

ஆசிய ஹொக்கி சம்மேளனம் மற்றும் சர்வதேச ஹொக்கி சம்மேளனங்களின் ஏற்பாட்டில் மலேசியாவில் நடைபெற்ற 1ஆம் மட்ட, 02ஆம் மட்ட மற்றும் 03ஆம் மட்ட பயிற்சிநெறிகளை நிறைவுசெய்தவர். ஒரு முழுமையான

## வறுமையை வென்று சாதித்தவரின் கதை



பயிற்றுவிப்பாளராக 3ஆம் மட்ட பயிற்சிநெறியினை நிறைவுசெய்வது அவசியமான போதும், வெளிநாடு செல்ல தேவையான விமானச் சீட்டு இதர செலவுகளுக்கு தனது பொருளாதார




நிலைமை காரணமாக பணம் இல்லாததால் அப்பயணத்தை பின்போட எண்ணியபோது, அவரின் நண்பர்கள் ஓரிருவரது உதவி மூலம் அப்பயணம் சாத்தியமானது. அப்பயிற்சி நெறியினை நிறைவு செய்தில்லாவிடின் இன்றைய பதவி சாத்தியமாகியிராது என்பதே உண்மையாகும்.



மாத்தளை சாஹிரா கல்லூரி, கொழும்பு சாஹிரா கல்லூரி, கண்டி திரித்துவக் கல்லூரி, கொமர்ஷல் வங்கி, இலங்கை கடற்படை அணி, இலங்கை இராணுவ அணி, பாதுகாப்பு சேவைகள் அணி, மத்திய மாகாண அணி, இலங்கை தேசிய, கனிஷ்ட அணி போன்ற அணிகளுடன் சென்ற வருட இறுதியில் ஓமான் சென்ற அவர், பாதுகாப்பு கூட்டு அணிக்கும் பயிற்சிகளை வழங்கி அதிக அனுபவங்களைப் பெற்றவர்.

கடந்த 14 வருடங்களுக்கு மேலாக பயிற்றுவிப்பாளராக செயற்பட்ட காலயெல்லைக்குள் மாத்தளை சாஹிரா கல்லூரி, இலங்கை கடற்படை அணி, இலங்கை இராணுவ அணி, பாதுகாப்பு சேவைகள் அணி போன்ற அணிகள் இலங்கையில் நடைபெறுகின்ற முக்கிய போட்டிகளில் 27 தடவைகளுக்கு மேலதிகமாக வெற்றிவாகை சூடியுள்ளதுடன், கடந்த வருட இறுதியில் ஓமானில் நடைபெற்ற போட்டித் தொடரினை பாதுகாப்புக் கூட்டு அணி வென்றமையும் குறிப்பிடத்தக்கது.

வறுமை, வாழ்வின் இலக்குகளை அடைந்துகொள்ள தடையல்ல. தொடர் அர்ப்பணிப்பு, முயற்சி நிச்சயம் வெற்றிதரும் என்ற எண்ணக்கருவுடன் செயற்படும் ஒருவராவார். மிகவும் கஷ்டப்பட்ட குடும்பத்தில் பிறந்த இவர், தம் தாய், தந்தை இருவரும், உணவு வகைகள், சிற்றுண்டி வகைகள் தயாரித்து விற்பனைசெய்வதையே பிரதான ஜீவனோபாயமாகக் கொண்டிருந்தனர். அதன் மூலமே தம் குடும்பத்தைக் காப்பாற்றி தன்னையும் உயர்நிலைய அடைய உதவினர் என்று சொல்லிக்கொள்வதில் பெருமிதமுடையவர்.

ஆசிய ஹொக்கி போட்டிக்கான தகுதிகாண் போட்டித் தொடரில் சீனா, ஓமான், உஸ்பெகிஸ்தான், தாய்லாந்து, ஹொங்கொங், ஈரான், கசகஸ்தான், சிங்கப்பூர், மியன்மார், இலங்கை உள்ளிட்ட நாடுகள் பங்குகொள்கின்றன.




# அமெரிக்க பயிற்சியாளர் மீது பாலியல் குற்றச்சாட்டு

(அக்ஷரா)

அமெரிக்காவின் ஒலிம்பிக் பனிச்சறுக்கு வீரரும், யூ.எஸ்.ஏ. அணியின் பயிற்சியாளருமான பீட்டர் ஃபோலே, ஒலிம்பியன் ஹேகன் கியர்னி ஆகியோர் மீது பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் இனவெறிக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

2010 குளிர்கால ஒலிம்பிக் அணியில் தடகள வீரரான 32 வயதான காலன் சைத்லுக்-சிஃப்சோஃப், தனது இன்ஸ்டாகிராமில் இதுபற்றி பதிவிட்டுள்ளார். ''பீட்டர் ஃபோலே ஒரு தசாப்தத்திற்கும் மேலாக பெண் விளையாட்டு வீரர்களின் நிர்வாண புகைப்படங்களை எடுத்துள்ளார்'' என்று சைத்லுக்-சிஃப்சாஃப் பதிவிட்டுள்ளார்.

''17ஆவது வயதில் தலைமைப் பயிற்சியாளர் பீட்டர் ஃபோலே பற்றிய எனது முதல் அபிப்பிராயங்களில் ஒன்று. அவர் எனக்கும் ஒரு பெண் அணியினரின் காதுக்கும் இடையில் கிசுகிசுப்பது. எனது கதை அல்ல, ஆனால், வெளிச்சத்திற்கு வரவேண்டிய தீவிரமான




செயல்கள் உள்ளன'' என்று அவர் எழுதினார்.

தற்போது பீஜிங்கில் அமெரிக்க அணியுடன் இருக்கும் ஃபோலே, தி போஸ்ட் ஃப்ரைடேவிடம் குற்றச்சாட்டுகளால் வியப்படைந்ததாக கூறினார். கடந்த வியாழன் அன்று ஆண்களுக்கான ஸ்னோபோர்டு கிராஸில் 17ஆவது இடத்தைப் பிடித்த கியர்னி, அடிக்கடி கெட்ட வார்த்தைகளைப் பிரயோகிப்பதாகவும், பெண் அணியினரைப் பற்றி கற்பழிப்பு நகைச்சுவைகளைச் செய்ததாகவும் அவர் கூறினார். இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# ரஜரட்டயுடன் இன்று மோதும் வடக்கு

இலங்கை உதைபந்து சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவருகின்ற மாகாண அணிகளுக்கிடையிலான சுதந்திர கிண்ண உதைபந்தாட்ட லீக் தொடர் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இதுவரையில் தலா ஒவ்வொரு அணிகளும் ஐந்து போட்டிகள் வீதம் விளையாடியுள்ள நிலையில், இன்று ஆறாம் கட்டப் போட்டிகள் ஆரம்பமாகின்றன.

அந்தவகையில் இன்று காலியிலும், மாத்தறையிலும் இரு போட்டிகள் நடைபெறுகின்றன. மாலை 3.30 மணிக்கு காலியில் நடைபெறும் ஒரு போட்டியில் முதலிடத்தில் காணப்படும் சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாண அணிகள் மோதுகின்ற அதேவேளை, மாலை 3.30 மணிக்கு மாத்தறையில் நடைபெறும் மற்றுமொரு போட்டியில் வடக்கு மற்றும் ரஜரட்ட மாகாண அணிகள் மோதுகின்றன.

ஐந்தாம் கட்ட போட்டிகள் நிறைவில் புள்ளிப்பட்டியல்

INDEPENDENCE TROPHY - CEYLON PROVINCIALS LEAGUE
2022 POINTS TABLE

| TEAM | P | W | D | L | GF | GA | GD | PTS |
|---|---|---|---|---|---|---|---|---|
| SABARAGAMUWA | 5 | 3 | 2 | 0 | 7 | 2 | 5 | 11 |
| NORTHERN | 5 | 3 | 2 | 0 | 6 | 1 | 5 | 11 |
| WESTERN | 5 | 2 | 1 | 2 | 11 | 5 | 6 | 7 |
| SOUTHERN | 5 | 2 | 1 | 2 | 5 | 4 | 1 | 7 |
| EASTERN | 5 | 1 | 4 | 0 | 2 | 1 | 1 | 7 |
| WAYABA RAJARATA | 5 | 1 | 1 | 3 | 6 | 10 | -4 | 4 |
| CENTRAL | 5 | 1 | 1 | 3 | 2 | 6 | -4 | 4 |
| UVA | 5 | 1 | 0 | 4 | 2 | 9 | -7 | 3 |

# இறுதிவரை போராடி சுப்பர் ஓவரில் தோற்ற இலங்கை அணி



பரபரப்புக்கு மத்தியில் நடைபெற்ற இலங்கை – அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டியில் அவுஸ்திரேலிய அணி சுப்பர் ஓவரில் வெற்றியைத் தனதாக்கியது.

5 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரின் முதல் போட்டியில் ஆஸி. அணி வெற்றி பெற்ற நிலையில் இரண்டாவது போட்டி நேற்று சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்ய, முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸி. அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 164 ஓட்டங்களை குவித்தது.

இலங்கை அணியின் பந்துவீச்சில் துஸ்மந்த சமீர மற்றும் வனிந்து ஹசரங்க ஆகியோர் தலா இரு விக்கெட்கள் வீதமும், மகேஷ் தீக்ஷன, நுவான் துஷார ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதமும் வீழ்த்தினர். 165 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி ஒரு கட்டத்தில் தடுமாற்றத்தை எதிர்கொண்டது. எனினும், இறுதி நேரத்தில் வெளிப்படுத்திய அதிரடி மூலம் போட்டி சமநிலையானது.

இதனைத் தொடர்ந்து வெற்றிக்காக சுப்பர் ஓவர் முறை கடைபிடிக்கப்பட்டது. முதலில் ஆடிய இலங்கை அணி வெறும் 5 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. பதிலுக்கு ஆடிய ஆஸி. அணி 3 பந்துகளில் வெற்றியிலக்கை அடைந்தது.

# காலியிடம் தோல்வி கண்ட ஜவ்னா




இலங்கைக் கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் நடைபெற்று வருகின்ற 5 அணிகள் பங்கேற்கும் நெஷனல் சுப்பர் லீக் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற இரு போட்டிகளில் ஒரு போட்டி மழை காரணமாக முழுமையாகக் கைவிடப்பட்ட நிலையில், மற்றுமொரு போட்டியில் டக்வொர்த் லூவிஸ் முறைப்படி காலி அணி 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தம்புள்ள - கண்டி அணிகளுக்கிடையில் தம்புள்ள ரங்கிரி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவிருந்த போட்டியானது மழை காரணமாக ஒரு பந்தும் வீசப்படாத நிலையில், முழுமையாகக் கைவிடப்பட்டது. கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற ஜவ்னா - காலி அணிகளுக்கிடையிலான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜவ்னா அணி 46 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்களை இழந்து 272 ஓட்டங்களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் தனஞ்சய டி சில்வா ஆட்டமிழக்காது சதம் கடந்து 109 ஓட்டங்களைக் குவித்தார். மைதானத்தில் மழை பெய்ததன் காரணமாக காலி அணியின் வெற்றி இலக்காக 25 ஓவர்களுக்கு 197 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன. குறித்த இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய காலி அணி 21.3 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்களை மாத்திரம் இழந்த நிலையில், வெற்றியிலக்கை அடைந்தது.




# லக்னோ அணியால் 2 கோடிக்கு ஏலம் எடுக்கப்பட்ட சமீர




2022ஆம் ஆண்டுக்கான இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரின் மெகா ஏலம் நேற்று நிறைவடைந்த நிலையில், இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்துவீச்சாளர் துஸ்மந்த சமீர லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் அணியினால் ரூ. 2 கோடிக்கு (இந்திய மதிப்பு) ஏலம் எடுக்கப்பட்டார்.

முன்னதாக ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியில் இலங்கை அணியின் சுழற்பந்துவீச்சு சகலதுறை வீரர் வனிந்து ஹசரங்க ரூ.10.75 கோடிக்கு ஏலம் எடுக்கப்பட்ட நிலையில், இரண்டாவது இலங்கை வீரராக வேகப்பந்துவீச்சாளர் துஸ்மந்த சமீர புதிய ஐ.பி.எல். அணிகளில் ஒன்றான லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் அணியில் ஏலம் எடுக்கப்பட்டார்.

அடிப்படை விலை ரூ.50 இலட்சத்துடன் ஆரம்பிக்கப்பட்ட துஸ்மந்த சமீரவை ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர், லக்னோ அணிகள் மாறி மாறி ஏலம் கேட்டு இறுதியில் லக்னோ அணி கைப்பற்றியது. துஸ்மந்த சமீர கடந்த வருடம் ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியில் விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7